# திருக்குறள்

## சிறப்புரை

ஆசிரியர்:

பால்வண்ணனார்

ஸ்ரீமகள் கம்பெனி
122 வரதாமுத்தியப்பன் தெரு
சென்னை.1.

வெளியீடு : 100
முதற் பதிப்பு :
அக்டோபர் 1953
உரிமை உடையது.

சாதா பதிப்பு 1—4—0
பரிசுப் பதிப்பு 1—12—0

விற்பனை நிலையம் :
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனு பஜார்
சென்னை-1

# நம்பிக்கை

—o—

திருக்குறள்—தமிழ் நாட்டின் ஒரே ஓர் ஒப்பற்ற நீதிநூல்! இஃது ஒரு காலத்தில் பண்டிதர்களின் மடியிலே தவழ்ந்து—புலவர்களின் உரைகளிலே விளையாடி—வித்துவான்களின் உள்ளங்களிலே நர்த்தனமாடி — பிரசங்கிகளின் வாய்களிலே ஒலித்து — மடாதிபதிகளின் ஆதரவு பெற்று இருந்தது.

ஆனால் இன்று மக்களின் பார்வைக்கு—ஏழை எளியவர்களின் எண்ணத்திற்கு—விருந்து என்று சுட்டிக் காட்டப் பட்டு விட்டது. மேலும், அரசியல் — பொருளியல் - அறவியல் - இன்பவியல் என்பனவற்றை அறிந்துகொள்ள படித்தவர் மட்டுமல்ல பாமரரும் ஆசையும் அக்கரையும் கொள்கின்றனர். ஆகவே படித்தவர்களும்

சிறப்பாகப் பாமரர்களும் குறளைப் படித்து அதன் உரையை மிக எளிதில் புரிந்து தெளிய வேண்டும் என்ற எண்ணமே திருக்குறள் சிறப்புரை வெளியிடக் காரண மாகும். இந்தக் குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர் திரு. பால்வண்ணனார் அவர்களுக்கு எங்கள் நன்றி! இந்த வாய்ப்பை தமிழகம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு!

வணக்கம்

வெளியிடுவோர்

★

## திருக்குறள் சிறப்பு

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி

பேராசிரியர், சுந்தரம் பிள்ளை
(மனோன்மணீயம்)

# பொருளடக்கம்


பக்கம்

அதிகார வரிசை ... 6

**1. அறத்துப்பால்—**

1. பாயிரவியல் ... 10
2. இல்லறவியல் ... 18
3. துறவறவியல் ... 58
4. ஊழியல் ... 84

**2. பொருட்பால்—**

1. அரசியல ... 88
2. அங்கவியல் ... 138
3. ஒழிபியல் ... 202

**3. காமத்துப்பால்—**

1. களவியல் ... 230
2. கற்பியல் ... 244

திருவள்ளுவமாலை ... 281

குறளகராதி ... 286

# அதிகார வரிசை


| | பக்கம் |
|---|---|
| அடக்கமுடைமை | 34 |
| அமைச்சு | 138 |
| அரண் | 160 |
| அருளுடைமை | 58 |
| அலரறிவுறுத்தல் | 242 |
| அவர்வயின் விதும்பல் | 266 |
| அவாவறுத்தல் | 82 |
| அவையஞ்சாமை | 156 |
| அவையறிதல் | 154 |
| அழுக்காறாமை | 42 |
| அறன்வலியுறுத்தல் | 16 |
| அறிவுடைமை | 96 |
| அன்புடைமை | 24 |
| ஆள்வினை யுடைமை | 134 |
| இகல் | 182 |
| இடனறிதல் | 110 |
| இடுக்கணழியாமை | 136 |
| இரவச்சம் | 224 |
| இரவு | 222 |
| இல்வாழ்க்கை | 18 |
| இறைமாட்சி | 88 |
| இனியவை கூறல் | 28 |
| இன்னா செய்யாமை | 72 |

| | பக்கம் |
|---|---|
| ஈகை | 54 |
| உட்பகை | 188 |
| உழவு | 218 |
| உறுப்புநலனழிதல் | 260 |
| ஊக்கமுடைமை | 130 |
| ஊடலுவகை | 278 |
| ஊழ் | 84 |
| ஒப்புரவறிதல் | 52 |
| ஒழுக்கமுடைமை | 36 |
| ஒற்றாடல் | 128 |
| கடவுள் வாழ்த்து | 10 |
| கண்ணோட்டம் | 126 |
| கண்விதுப்பழிதல் | 248 |
| கயமை | 226 |
| கல்லாமை | 92 |
| கல்வி | 90 |
| கள்ளாமை | 66 |
| கள்ளுண்ணாமை | 196 |
| கனவுநிலையுரைத்தல் | 256 |
| காதற் சிறப்புரைத்தல் | 238 |
| காலமறிதல் | 108 |
| குடிசெயல்வகை | 216 |
| குடிமை | 202 |

| | | | |
|---|---|---|---|
| குறிப்பறிதல்(பொ) | 152 | நட்பாராய்தல் | 170 |
| குறிப்பறிதல்(கா) | 232 | நட்பு | 168 |
| குறிப்பறிவுறுத்தல | 268 | நலம் புனைந்துரைத் [தல் | 236 |
| குற்றங்கடிதல் | 98 | | |
| கூடாநட்பு | 176 | நல்குரவு | 220 |
| கூடா வொழுக்கம் | 64 | நன்றியில் செல்வம் | 212 |
| கேள்வி | 94 | நாடு | 158 |
| கொடுங்கோன்மை | 122 | நாணுடைமை | 214 |
| கொல்லாமை | 74 | நாணுத் துறவுரைத் [தல் | 240 |
| சான்றாண்மை | 208 | | |
| சிற்றினஞ் சேராமை | 102 | நிலையாமை | 76 |
| சுற்றந் தழால் | 116 | நிறையழிதல் | 264 |
| சூது | 198 | நினைந்தவர் புலம்பல் | 254 |
| செங்கோன்மை | 120 | நீத்தார் பெருமை | 14 |
| செய்ந்நன்றியறிதல் | 30 | நெஞ்சொடு கிளத்தல் | 262 |
| சொல்வன்மை | 140 | நெஞ்சொடு புலத்தல் | 272 |
| தகையணங்குறுத்தல் | 230 | பகைத்திறந்தெரிதல் | 186 |
| தவம் | 62 | பகைமாட்சி | 184 |
| தனிப்படர் மிகுதி | 252 | பசப்புறு பருவரல் | 250 |
| தீ நட்பு | 174 | படர்மெலிந் திரங்கல் | 246 |
| தீவினையச்சம் | 50 | படைச் செருக்கு | 166 |
| துறவு | 78 | படைமாட்சி | 164 |
| தூது | 148 | பண்புடைமை | 210 |
| தெரிந்து செயல்வகை | 104 | பயனில சொல்லாமை | 48 |
| தெரிந்து தெளிதல் | 112 | பழைமை | 172 |
| தெரிந்து வினையாடல் | 114 | பிரிவாற்றாமை | 244 |
| நடுவுநிலைமை | 32 | பிறனில் விழையாமை | 38 |

புகழ் 56
புதல்வரைப்பெறுதல் 22
புணர்ச்சி மகிழ்தல் 234
புணர்ச்சி விதும்பல் 270
புலவி 274
புலவி நுணுக்கம் 276
புலான் மறுத்தல் 60
புல்லறிவாண்மை 180
புறங்கூறாமை 46
பெண்வழிச்சேறல் 192
பெரியாரைத் துணைக் [கோடல் 100
பெரியாரைப் பிழை [யாமை 190
பெருமை 206
பேதைமை 178
பொச்சாவாமை 118
பொருள் செயல்வகை 162
பொழுதுகண்டிரங்கல் 258
பொறையுடைமை 40
மடியின்மை 132
மருந்து 200
மன்னரைச் சேர்ந் [தொழுகல் 150
மானம் 204
மெய்யுணர்தல் 80
வரைவின் மகளிர் 194
வலியறிதல் 106
வாய்மை 68
வாழ்க்கைத் துணை நலம் 20
வான் சிறப்பு 12
விருந்தோம்பல் 26
வினைசெயல்வகை 146
வினைத்திட்பம் 144
வினைத்தூய்மை 142
வெகுளாமை 70
வெஃகாமை 44
வெருவந்தசெய்யாமை 124

# 1. அறத்துப்பால்

## 1. கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 7

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. 8

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

# 1. கடவுளை வாழ்த்துதல்

எல்லா எழுத்துக்களும் அகரத்தை முதலாக உடையன; அதுபோல உலகம் ஆதிபகவனை (இறைவனை) முதலாகக் கொண்டுள்ளது. 1

உண்மை உணர்வுடையவனின் தூய திருவடிகளைத் தொழாமல், எவ்வளவு நூல்களைக் கற்றாலும் அதனால் என்ன பயன் விளையும்? 2

உள்ளத் தாமரையில் உறையும் ஒருவனின் சிறந்த திருவடிகளைச் சேர்ந்தவர்கள், மேலான உலகில் அழிவின்றி வாழ்வர். 3

விழைவும் வெறுப்பும் அற்றவன் திருவடியைச் சேர்ந்தவர்களுக்கு, எங்கும் என்றும் இன்னல்கள் உண்டாவதில்லை. 4

இறைவனின் உண்மையான புகழை விரும்பி நேசிப்பவர்களிடம், இருளைத் தருகின்ற நல்வினை, தீவினைகள் நெருங்குவதில்லை. 5

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து பொறிகளின் மூலம் எழும் ஆசைகளை ஒழித்தவனின் (கடவுளின்) மெய்யான ஒழுக்கநெறியில் நிலைத்து நின்றவர்கள், அழியாத வாழ்வு பெறுவர். 6

ஒருவிதத்திலும் தனக்கு நிகரில்லாதவனுடைய தாளைச் சேர்ந்தவர்களுக்கு அல்லாமல், மற்றவர்களுக்கு மனதிலே நிகழும் துன்பங்களைப் போக்கமுடியாது. 7

அறக்கடலாகிய அந்தணனது (இறைவனது) தாள் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்கள், மற்ற கடல்களாகிய, பொருளின்பம் இவைகளைக் கடப்பது அரிது. 8

தங்களுக்குரிய உணர்ச்சிகளைக் கொள்ளாத மெய், வாய், கண், மூக்கு, செவி பயன்படமாட்டா. அதுபோலவே எட்டு குணங்களையுடைய இறைவனின் தாளை வணங்காதவர் தலைகள் பயனற்றவை.

இறைவனடி யென்னும் புணையைச் சேர்ந்தோர், பிறவி என்னும் பெருங் கடலை நீந்துவர்; அதனைச் சேராதவர்கள் நீந்த முடியாதவர்களாகி அதனுள்ளே அழுந்துவர். 10

## 2. வான் சிறப்பு

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று. 1

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 2

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின் றுடற்றும் பசி. 3

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். 4

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 5

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 6

நெடுங்கடலுந் தன்நீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். 7

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. 8

தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 9

நீரின் றமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன் றமையா தொழுக்கு. 10

## 2. மழையின் சிறப்புக் கூறல்

மழை பொழிந்து உலகை நிலைபெறச் செய்து வருதலால், அம்மழை உலக உயிர்கட்கு அமிர்தம் என்று அறியும் தன்மையை உடையது. 1

உண்பார்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கித் தந்து, அவற்றை உண்கின்றவர்க்குத் தானும் ஓர் உணவாக (நீராகாரமாக) இருப்பதுவும்மழையே. 2

வேண்டும் காலத்தில் மழை பொழியாது பொய்க்குமானல், விரிந்த நீரால் சூழப்பட்ட இந்தப் பெரிய உலகின் கண், பசியானது நிலைபெற்று நின்று உயிர்களை வருத்தும். 3

மழை என்னும் வருவாய் தன் பயன் குன்றிவிட்டால் உழவர்ஏர் கொண்டு உழுதலைச் செய்யார். 4

புவியில் வாழ்வோரை பெய்யாமல் கெடுப்பதும், அவ்வாறு கெட்டவர்களுக்குத் துணையாகப் பெய்து முன் கெடுத்தாற்போல எடுப்பதும், எல்லாம் செய்ய வல்லது மழை. 5

மேகத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாது, உலகில் பசுமையான புல்லின் நுனியையும் காண முடியாது. 6

கடலின் நீரை மேகம் குடித்து, மறுபடியும் மழையாகப் பொழியாவிடின், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும். 7

மழை பொழியாது ஒழிந்தால், இவ்வுலகில் தேவர்களுக்காக மக்களால் செய்யப்படும் திருவிழாவும், நாள் வழிபாடும் நடவாது. 8

மழை பெய்யாவிடின், அகன்ற உலகின்கண் தானம், தவம் என்னும் இரண்டு அறங்களும் நடைபெறமாட்டா. 9

எவ்வளவு மேம்பட்டவர்களாயினும், அவர்கட்கு நீர் இல்லாமல் உலகியலானது நடைபெருது என்ருல், மழைபொழியாவிட்டால், ஒழுக்கமும் நிலைபெருது. 10

## 3. நீத்தார் பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. 1

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. 2

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 3

உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 4

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. 5

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 6

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. 7

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 8

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது. 9

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். 10

## 3. முனிவரது பெருமை கூறல்

அவரவர்களுடைய ஒழுக்கத்தினின்றும் வழுவாது நிலைத்து நின்று, எப்பற்றுமற்று இருப்பவர்களின் சிறப்பை போற்றிப் புகழ்வதே நூல்களின் துணிவு. 1

பற்றுகளை விட்டவர்களின் பெருமைகளை இவ்வளவு என்று கணக்கிட்டுக் கூறுதல், இன்று வரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவது போன்றதாகும். 2

பிறப்பின் துன்பம்,மோட்சத்தின்இன்பம் ஆகியஇரண்டினை ஆய்ந்தறிந்து,இம்மையில் அப்பிறவித் துன்பத்தைப்போக்க அறத்தை மேற்கொண்டவர்களின் பெருமையே இவ்வுலகில் உயர்ந்தது.

அறிவாயுதம் தாங்கி, ஐம்பொறிகளென்னும் யானைகளை புலன்கள் மேல் செல்லாமல் காப்பவன், மேலான முத்தி நிலத்திற்கு விதைபோன்றவன். 4

புலன்கள்மேல் செல்கின்ற ஐந்து ஆசைகளையும் அடக்கியவனின் ஆற்றலுக்கு, விரிந்த விண்ணில் வாழ்வோரின் தலைவனாகிய, இந்திரனே போதுமான எடுத்துக்காட்டு. 5

பெரியோரெனப்படுவோர், மற்றவர்கள் செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்பவர்; சிறியோரெனப்படுவோர் செய்வதற்கு அருமையான செயல்களைச்செய்ய முடியாதவர்கள். 6

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படும் ஐந்தின் கூறுபாடுகளையும் ஆராய்ந்து அறிந்தவனின் அறிவினிடத்தே உள்ளது உலகம். 7

நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை, உலகில் அழியாமல் நிலைத்திருக்கும் அவர்களுடைய மறைமொழியே எடுத்துக்காட்டும். 8

நற்குணங்கள் என்னும் குன்றின்மீது ஏறி நின்ற அறவோர் கொள்ளும் கோபம், ஒருகணமே நிற்குமாயினும், கோபிக்கப்பட்டவர் அதைத் தடுத்துக் காத்தல் அரிது. 9

எல்லா உயிர்களிடத்தும் செம்மையான கருணை பூண்டு ஒழுகுவதால், அறவழி நடப்பவர்களே அந்தணர் என்று அழைக்கப்படுவர். 10

## 4. அறன்வலியுறுத்தல்

சிறப்புஈனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 1

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. 2

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். 3

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற. 4

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். 5

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 6

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை. 7

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். 8

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. 9

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி. 10

## 4. அறன் வலியுறுத்தல் கூறல்

அறமானது சிறப்பையும், செல்வத்தையும் அளிக்க வல்லது. ஆகவே, வாழும் உயிர்கட்கு அறத்தைவிட ஆக்கமானது வேறு என்ன இருக்கிறது? 1

ஒருவனுக்கு அறம் செய்தலைக் காட்டிலும் மேம்பட்ட ஆக்கமுமில்லை; அத்தகைய அறத்தை மறத்தலைக் காட்டிலும் மேம்பட்ட கேடுமில்லை. 2

தத்தமக்கு இயலும் முறையில் அறமாகிய நல்வினையை விடாமல், அந்த அறமானது செல்லுமிடங்களி லெல்லாம் அதனைச் செய்ய வேண்டும். 3

அறமெனப்படுவது, மாசற்ற மனத்துடன் இருப்பதே யாகும். அதற்கயலான மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை. 4

பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் கடிந்து இடையறாது ஒழுகியதே அறம். 5

யாம் இப்போது இளைஞர்கள், பிற்காலத்தில் அறம் செய்யலாம் என்று எண்ணாமல், நாள்தோறும் செய்தல் வேண்டும். அதுவே உடம்பு அழியும்போது அழியாத துணையாகும். 6

அறத்தினால் உண்டாகும் பயனை அறிய நூற்களின் துணைகொண்டு ஆராய்தல் வேண்டாம். பல்லக்கை சுமப்பவனையும், அதன்மீது அமர்ந்து செல்பவனையும் கண்டுதெளியலாம். 7

அறம் செய்யாது கழியும் நாட்களை ஒருவன் ஏற்படுத்திக் கொள்ளாமல் அறம் புரிவானாயின், அச்செய்கை அவன் உடம்போடு கூடும்நாள் வரும் வழியை அடைக்கும் கல்லாம். 8

இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பம்; அதனோடு பொருந் தாமல் வருபவை யெல்லாம் துன்பம்; அன்றியும் புகழும் உடையவல்ல. 9

ஒருவன் தன் வாழ்நாளில் முயன்று செய்யத் தகுந்தது அறம். செய்யாமல் ஒழித்துத் தன்னைக் காத்துக்கொள்ளத் தகுந்தது பழி. 10

# 5. இல்வாழ்க்கை

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. 1

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 2

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை. 3

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். 4

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 5

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். 6

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. 7

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து. 8

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. 9

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 10

## 5. இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு

இல்லறத்தோடு கூடி வாழ்வதாகச் சொல்லப்படுபவன், அறவியல் பிணையுடைய மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம். 1

துறவிகளுக்கும், ஏழைகளுக்கும், யாசகர்களுக்கும் இல்லறம் நடத்துபவனே துணைவனாவான். 2

பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று கூறப்படும் ஐந்திடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்கு சிறந்த அறம். 3

பழி பாவத்திற்கு அஞ்சி பொருள் சேர்த்து, மற்றவர்களுக்கும் பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவன் சந்ததி என்றென்றும் நிலைக்கும். 4

அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை அமையுமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவேயாகும். 5

ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவானாயின், அவன் அதற்குப் புறமாகிய நெறியில் போய்ப் பெறும் பயன் யாது? 6

இல்வாழ்க்கையில் நின்று, அதற்குரிய அற இயல்போடு கூடி வாழ்பவன், புலன்களை அடக்க முயலும் மற்றவர்களைவிட மேம்பட்டு விளங்குவான். 7

தானும் நெறி தவறாது, மற்றவர்களையும் அற நெறியிலிருந்து தவறாமல் பாதுகாக்கும் இல்வாழ்க்கை, தவம் புரிவோர் நிலையைவிட வல்லமையுடைய வாழ்க்கையாகும். 8

நூல்களால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட அறமே இல்வாழ்க்கை; அஃது அடுத்தவர் பழிக்காளாகாமல் இருந்தால் மிகவும்நல்லது. 9

இவ்வுலகில் ஒருவன் அறநெறியில் தவறாமல் நின்று, வாழும் முறை தெரிந்து வாழ்வானாயின், அவன் விண்ணுலக தேவனுக்குச் சமமாக மதிக்கப்படுவான். 10

## 6. வாழ்க்கைத் துணைநலம்

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 1

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில். 2

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. 3

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 4

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. 5

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 7

பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. 8

புகழ்புரிந்த இல்இலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 9

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 10

## 6. இல்லாளது நன்மை

மனையறத்திற்கு ஏற்ற நற்குணம் படைத்தவளாகி, தன் கணவனின் வருவாய்க்குத் தக்கபடி வாழ்க்கை நடத்து பவளே வாழ்க்கைக்குத் துணையாவாள். 1

மனையறத்திற்கு தக்க நற்குணங்கள் இல்லாளிடம் இல்லையாயின், அவனுடைய வாழ்க்கைஎவ்வளவு மாட்சிமை உடையதானாலும் அதனால் பயன் கிடையாது. 2

மனைவி மாண்புடையவளானால் வாழ்க்கையில் ஒருவனுக்கு இல்லாதது என்ன? மனைவி நற்பண்பற்றவளானால் அவனுக்கு வாழ்க்கையில் இருப்பது என்ன? 3

கற்பு என்னும் கலங்கா நிலைமை இல்லாள்கண் உண்டாகப்பெறின் இல்வாழ்க்கையில் ஒருவனுக்கு இல்லாளைவிட மேம்பட்ட பொருள்கள் உண்டா? 4

பிற தெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழுது துயிலெழுகின்றவள் 'பெய்' என்றால் மழை பொழியும். 5

கற்புநிலை தவறாது தன்னைக் காத்து, தன் கணவனை உண்டி முதலியவைகளால் பேணி, நீங்காத நற்புகழையும் காத்து, உள்ளஉறுதியுடன் ஒழுகுபவளே பெண். 6

பெண்டிரைத் தலைவர் சிறையால் காக்கும் காவல் என்ன பயன் தரும்? அவர்களே தம்மை கற்பு நெறியால் காக்கும் காவலே சிறப்புடையது. 7

தங்கள் கணவனைப் போற்றும் பெண்டிர் பெருஞ் சிறப்பு வாய்ந்த வானுலக வாழ்வு பெறுவர். 8

புகழை விரும்பிய இல்லாளை இல்லாதவர்களுக்கு, தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்க வேறுபோல நடக்கும் பெருமித நடைஇல்லை. 9

மனையாளது நற்குணச் சிறப்பே ஒருவனுக்கு நன்மை என்பர். அந்த நன்மைக்கு அணிகலம் நல்ல மக்களைப் பெறுதல் என்றும் கூறுவர். 10

## 7. புதல்வரைப் பெறுதல்

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. 1

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின். 2

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். 3

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 4

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு. 5

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 6

தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். 7

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 8

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 9

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் சொல்எனுஞ் சொல். 10

## 7. நன்மக்களைப் பெறுதல்

ஒருவன் பெறும் பேறுகளுள், அறிய வேண்டியவைகளை அறியும் நற்புதல்வர்களைப் பெறுவதைத் தவிர பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை. 1

பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வர்களைப் பெறுவாராயின், எழு பிறவிகளிலும் ஒருவனுக்கு வினைத் துன்பங்கள் சென்று அடையா. 2

தம் புதல்வரைத் தம்பொருள் என்று சொல்வர் அறிந்தோர். அப்புதல்வர்களின் பொருள்கள் அவரவருடைய நல்வினைப் பயனால் வந்து சேரும். 3

தம் மக்களுடைய சிறு கையால் அளாவப்பட்டச் சோறு, சுவையால், அமிழ்தத்தினும் மிக்க இனிமை உடையது. 4

ஒருவன் உடலுக்கு இன்பமளிப்பது தம் மக்களது உடம்பைத் தீண்டுதல்; செவிக்கு இன்பமளிப்பது மக்களின் சொல்லைக் கேட்டல். 5

குழலிசை இனிமை உடையது, யாழிசை இனிமை உடையது என்று சொல்வர், தம் புதல்வருடைய குதலைச் சொற்களைக் கேளாதவர். 6

தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையானது, கற்றோரவையின்கண் தன் மகனை முதல்வனாக இருக்குமளவு கல்வியுடையவனாக்குதல். 7

தம் புதல்வர்கள் அறிவுடைமையானது, தமக்குத் தரும் இன்பத்தைவிட பெரிய உலகத்து உயிர்களுக்கெல்லாம் மிக்க இன்பம் தருவதாகும். 8

தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய், தான் அவனைப் பெற்ற பொழுது பெற்றமகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி அடைவாள். 9

மகன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறானது, "இவன் தந்தை இவனைப் பெறச்செய்த தவம் எதுவோ" என்று பிறர் புகழச் செய்தலாகும். 10

## 8. அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 1

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 2

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு. 3

அன்புஈனும் ஆர்வ முடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 4

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு. 5

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 6

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 7

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 8

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு. 9

அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 10

## 8. மனைவி மக்கள்மேல் காதலுடையனாதல்

அன்புக்குப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும்தாழ் இருக்கிறதா? அன்புசெய்யப்பட்டவரது துன்பங்கண்டு பொழிகின்றசிறு கண்ணீரே அவர்கள் உள்நிறைஅன்பினை வெளிப்படுத்திவிடும். 1

அன்பற்றவர்கள் எல்லா பண்டங்களையும் தம் உரிமையாகக் கொண்டு வாழ்வர். அன்புடையவர் தம் உடைமையையும், உடலையும் பிறர்க்கு உரிமையாக்குவர். 2

பெறுதற்கரிய உயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்பு, அன்போடு பொருந்தி வாழும் நெறியின் பயன் என்பர் அறிந்தோர். 3

அன்பு என்பது பிறரிடம் விருப்பமுடனிருக்கும் தன்மையைத் தரும் அந்த விருப்பமுடைமைதான் பகைமையற்ற நட்பு என்னும் சிறப்பினையும் நல்கும். 4

அன்புடையவராகப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் தான், உலகில் இன்பமுற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு என்பர். 5

அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று அறியாதார் கூறுவர். வீரத்திற்கும் அதுவே துணை என்பது ஆராய்ந்து பார்த்தால் தெரியும். 6

எலும்பில்லாத உடலுள் வாழ்பவைகளை வெயில் காய்ந்து வேதனை உண்டாக்குவதுபோல், அன்பில்லாத உயிர்களை அறம் வருத்தி வேதனைப்படுத்தும். 7

உள்ளன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்வது, வறண்ட பாலையில் பட்டமரம் தளிர்த்தற் போன்றது. 8

உடலின் உள்ளுறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு ஏனையபுறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன உதவியைச் செய்துவிடும்? 9

அன்பை அடிப்படையாகக் கொண்டு நிற்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும். அன்பற்றவர்கள் தாங்கிய உடல்கள் எலும்பைத் தோலால் போர்த்த உயிரற்றவை. 10

## 9. விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 1

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 2

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. 3

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல். 4

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். 5

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 6

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 7

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 8

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 9

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 10

## 9. பிறர்க்கீந்து உண்ணல்

இல்லறம் நடத்தி பொருள்களைக் காத்து வாழ்வு நடத்துவது ஏனென்றால், விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உபசாரம் செய்யும்பொருட்டேயாகும். 1

உண்ணப்படும் பொருள் அமுதமேயானாலும், தன்னை நாடிவந்த விருந்தினரைப் புறத்தே இருக்கச் செய்து தான் மட்டும் உண்பது விரும்பத்தக்க முறையன்று. 2

நாள் தோறும் தன்னை நாடி வரும் விருந்தினரைப் போற்று கிறவன் வாழ்வு துன்புற்று கெடுவதில்லை. 3

முக மலர்ச்சியோடு, நல்ல விருந்தினராக வந்தவரைப் போற்றுகின்றவன் இல்லத்தில் திருமகள் மனமகிழ்ச்சியுடன் வாழ்வாள். 4

முதலில் விருந்தினரைப் போற்றி உணவளித்து, மிஞ்சிய உணவை உண்டு வாழ்பவனின், நிலத்தில் வித்திடுதலும் வேண்டுமா? வேண்டாம்! 5

வந்த விருந்தினரைப் பேணி, இனி வரும் விருந்தினரை எதிர் நோக்குபவன், வி ணுலக தேவர்கட்கு நல்ல விருந்தினனாவான். 6

விருந்தோம்பல் என்னும் வேள்வியின் பயன் இந்த அளவு என்று கூற முடியாதது. விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவாகும். 7

விருந்தினரைப் போற்றி வேள்விப் பணியில் ஈடுபடாதவர், பொருள்களைக் கஷ்டப்பட்டுக் காத்து அதனை இழந்தபின் பற்றுக் கோடில்லாதவர்களாயினோமே என்றிரங்குவர். 8

உடைமைக் காலத்தில் உள்ள வறுமை விருந்தோம்பலை இகழும்பேதமை. அஃது அறியாதார் மாட்டு உள்ளதாகும். 9

மோந்தவுடன் வாடிவிடும் அனிச்சப்பூ; அதுபோல் மாறுபட்டமுகங்கொண்டு நோக்கியவுடன் விருந்தினர் முகம் வாடும். 10

## 10. இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 1

அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின். 2

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 3

துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 4

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 5

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 6

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். 7

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும். 8

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 9

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 10

## 10. இனிய சொற்களைச் சொல்லுதல்

அன்போடு கலந்து வஞ்சனை இல்லாமலிருக்கின்ற, அறத்தினை உணர்ந்தவர் வாய்ச் சொற்களே இன்சொற்களாகும். 1

நெஞ்சுவந்து ஒருவற்கு வேண்டிய பொருளைக் கொடுப்பதை விட நல்லது, முகமலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெறுவது. 2

முகத்தால் விரும்பி இனிதாக நோக்கி, மனங்கலந்த இனிய சொற்களைக் கூறும் தன்மையதே அறமாகும். 3

எல்லோரிடமும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல் உடையார்க்கு, துன்பத்தை மிகுவிக்கும் வறுமை இல்லையாம். 4

ஒருவனுக்கு அணியாவது, பணிவுடையவனாகவும், இனிய சொல்லை யுடையவனாகவும் இருத்தல். இவை இரண்டன்றி மற்ற அணிகள் அணியாகா. 5

பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை மனத்தால் ஆராய்ந்து, இனிய சொற்கள் சொல்லின், பாவங் கெட அறம்வளரும். 6

பொருளாற் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப் பண்பின் நீங்காத சொல், ஒருவனுக்கு இம்மைக்கு நீதியை உண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும். 7

பொருளாற் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொல் ஒருவனுக்கு இருமையிலும் இன்பம் பயக்கும். 8

பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பம் பயத்தலை அநுபவிக்கின்றவன், பிறரிடம் வன்சொல்லைச் சொல்வது என்ன பயன் கருதியோ! 9

இனிமை தரும் சொற்கள் இருக்கும்போது, கடுஞ் சொற்களைக் கூறுவது, இனிய கனிகள் காத்திலிருக்கும்போது காய்களைத் தின்பதை ஒக்கும். 10

## 11. செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. 1

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 2

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 3

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 4

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 5

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 6

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 7

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. 8

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். 9

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 10

## 11. செய்த நன்மையை மறவாமை

தனக்கு முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க, ஒருவன் பிறருக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைமாருகத் தந்தாலும் ஈடாகாது. 1

தேவையான காலத்திலே ஒருவன் செய்த உதவி சிறியதாயினும் அதனை ஆராய்நது பார்த்தால் உலகைவிட மிகப் பெரியதாகும். 2

இவனுக்கு இது செய்தால் இன்ன பயன்கிட்டும் என்று ஆராயாமல் செய்த உதவியை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும். 3

தமக்குத் தினையளவு உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும், அதன் பயனை ஆய்வோர் பனையளவாகக் கருதுவர். 4

கைம்மாருகச் செய்யும் உதவி, முன் செய்த உதவியின் அளவை உடையதன்று; உதவி செய்யப் பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாம். 5

துன்பக் காலத்தில் தமக்கு ஆதரவாக இருந்தவர்களின் நட்பை விடக் கூடாது. அறிவொழுக்கங்களில் குற்ற மற்றவரது உறவையும் மறக்கலாகாது. 6

தமக்கு இன்னல்களைக் களைய உதவியவர்களின் நட்பை எழு பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர். 7

ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறமன்று; அவன் செய்த தீமையைச் செய்த பொழுதே மறப்பது அறன். 8

தமக்கு முன்னால் ஒரு நன்மையைச் செய்தவன், பின்னர் கொல்லுதல் போன்ற துன்பம் விளைவித்தாலும், அவன் முன் செய்த நன்மையை நினைத்தால் அத் துன்பம் கெடும். 9

பெரிய அறங்களைச் சிதைத்தவர்களுக்கும் துன்பம் நீங்கும் வழி உண்டாம். ஆனால் ஒருவன் செய்த உதவியை சிதைத்தவனுக்கு உய்வு இல்லை. 10

## 12. நடுவுநிலைமை

தகுதி எனஒன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். 1

செப்ப முடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து. 2

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 3

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். 4

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 5

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின். 6

கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 7

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. 8

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். 9

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். 10

## 12. அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை

பகை, நொதுமல், நண்பு எனும் பகுதி தோறும் முறையோடு ஒழுகப் பெற்றால், நடுவு நிலைமை என்னும் அறமேநல்லதாகும். 1

நடுவு நிலைமையை யுடையவனது செல்வம், அழிவில்லாமல் அவன் சந்ததிக்கும் வலிமையைத் தரும். 2

நன்மையே தருவதாயினும், நடுவு நிலைமையை ஒழித்து உண்டாகின்ற ஆக்கத்தை அப்போதே ஒழிக்க வேண்டும். 3

நடுவு நிலைமை உடையவரா? அல்லவா ? என்பதை, அவரவருடைய மக்களது உண்மையாலும், இன்மையாலும் அறியலாம். 4

நல்வினை தீவினைகளால், ஏற்படும் ஆக்கமும் கேடும் எல்லோர்க்கும் இயற்கையே, அவற்றை அறிந்து மனத்தின் கண் நடுவு நிலைமை தவறாம லிருப்பது அறிவுள்ளவர்கட்கு அழகு. 5

மனமானது நடுவு நிலைமையைத் தவறி நடக்குமாயின், அந்நினைவை, யான் கெட்டுப் போகும் குறி என்று ஒருவன் உணர வேண்டும். 6

நடு நிலைமையில் நின்று அறத்தின் கண்ணே தங்கினவனது வறுமையை, வறுமை யென்று கருதார் உயர்ந்தோர். 7

நடுநிலைமையி லிருந்து, பின்னர் பண்டங்களைச் சீர் தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, எப்பக்கமுஞ் சாயாமல் நடுவு நிலைமையுட னிருப்பது அறிஞர்க் கழகு. 8

நடுவு நிலைமையாவது சொல்லில் கோணுத லில்லாததாகும். அஃதன்னதாவது மனத்தில் கோணுதல் இல்லாத தன்மையைத் திண்மையாகப் பெறுவது. 9

பிறர் பொருளையும் தம் பொருள் போல எண்ணி செய்தால் வியாபாரம் செய்வோர்க்கு நல்ல வாணிக முறை யாகும். 10

## 13. அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 1

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. 2

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். 3

நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. 4

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 5

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. 6

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 7

ஒன்றானுந் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். 8

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 9

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றி னுழைந்து. 10

## 13. தீநெறி செல்லாது அடங்குதல் உடையனாதல்

அடக்கம் எனும் அறம் ஒருவனை தேவருலகத்தில் சேர்க்கும் அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருள் வழியில் செலுத்தும். 1

உயிர்கட்கு அடக்கத்தினும் மிக்க செல்வ மில்லை. ஆதலால், அவ் வடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு அழியாமல் காக்க வேண்டும். 2

அடங்குதலே நமக்கு அறிவு என்றறிந்து நல்வழியில் ஒருவன் நடந்தால், அந்த அடக்கம் நல்லவர்களால் அறியப்பட்டு அவனுக்கு மேன்மை கொடுக்கும். 3

இல் வாழ்க்கையாகிய தன்னெறியி லிருந்து வேறுபடாது நின்று அடங்கியவனது உயர்ச்சி, மலையி னுயர்ச்சியினும் மிகப் பெரியது. 4

பெருமித மின்றி யடங்குதல், எல்லார்க்கும் பொதுவாக நல்ல தாகும். எனினும் செல்வ முடையார்க்கே வேறொரு செல்வமாகும் சிறப்பினை உடையது. 5

ஆமை போல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனாயின், அது அவனுக்கு எல்லாப் பிறவிகளிலும் அரணாகும். 6

தம்மால் காக்கப் படவேண்டிய எல்லாவற்றையும் காக்க முடியா விட்டாலும் நா வொன்றையாகிலும் காத்துக்கொள்க. இல்லையேல் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர். 7

தீய சொற்களின் பொருளால் வரும் துன்பம் என்றுயினும் ஒருவன்பால் உண்டாபின், அவனுக்குப் பிற அறங்களாலுண்டான நன்மை தீமையாகி விடும். 8

ஒருவனை ஒருவன் தீயினால் சுட்ட புண்ணின் வடு இருந்தாலும் மனத்தின்கண் மாறி விடும், ஆனால் வெவ்வுரையுடைய நாவினால் சுட்ட வடு என்றும் ஆறாது. 9

கோபம் வராமல் காத்து, கல்வி கற்று, அடங்கி இருக்க வல்லவனுடைய செவ்வியை, அறம் அவனுடைய வழியில் சென்று பார்த்திருக்கும். 10

## 14. ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 1

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை. 2

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 3

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். 4

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. 5

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 6

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 7

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 8

ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 9

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார். 10

## 14. நல்லொழுக்கத்தினை யுடையராதல்

ஒழுக்கம் எல்லாருக்கும் சிறப்பினை தருவதால், அவ்வொழுக்கம் உயிரினும் சிறந்ததாகப் பாதுகாக்கப் படும். 1

அறங்கள் பலவற்றை ஆராய்ந்து தெளிந்தாலும் ஒழுக்கமே வாழ்வின் துணையாக விளங்கும் ஆகவே, ஒழுக்கத்தை அழியாமல் போற்றிக் காக்க வேண்டும். 2

உயர்குடிப் பிறப்பின் தன்மையாவது ஒழுக்கம் உடையவராக வாழ்வது. இழிந்த குடிப் பிறப்பின் தன்மையாவது ஒழுக்கம் தவறுதல். 3

கற்றவற்றை மறந்து விட்டால் மீண்டும் அதனைப் படித்துக் கற்றுக் கொள்ளலாம், ஆனால் பார்ப்பான் குடி பிறப்பு ஒழுக்கம் குன்றினால் கெடும். 4

அழுக்காறு (பொறாமை) உடையானிடம் ஆக்கமில்லாதது போல ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்ச்சி இல்லை. 5

உள்ள உரம் உடைய சான்றோர், ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, ஒழுக்கத்தினின்றும் தவறாமல் தம்மைக் காத்துக் கொள்வர். 6

எல்லோரும் ஒழுக்கத்தால்தான் மேம்பாடு யெய்துவர். அதிலிருந்து தவறுதலால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர். 7

இன்ப நல் வாழ்வுக்குக் காரணமாக இருக்கும் நல்லொழுக்கம்; எப்போதும் துன்பத்தையே தரும் தீயொழுக்கம். 8

மறந்தும் தீய வார்த்தைகளைத் தம் வாயால் சொல்லும் தொழில்கள், ஒழுக்கமுடைய உத்தமர்களுக்குப் பொருந்தாது. 9

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதவர் பல நூல்களைக் கற்றவர்களாயினும் அறிவில்லாதவரே யாவர். 10

## 15. பிறனில்விழையாமை

பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்க ணில்.

அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையா ரில். 2

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார். 3

எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். 4

எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 5

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். 6

அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். 7

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. 8

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
பிறற்குரியாள் தோள்தோயா தார். 9

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 10

## 15. பிறனுடைய இல்லாளை விரும்பாமை

உலகில், அறநூலையும், பொருள் நூலையும் ஆராய்ந்தவர்களிடம், பிறனுடைய மனைவியைக் காமுறுகின்ற அறியாமை இல்லை. 1

காமங் காரணமாக பாவத்தின்கண் நின்றார் எல்லோருள்ளும், பிறன் மனைவியைக் காமுற்று அவன் வாயிலில் போய் நின்றாரைப் போல் பேதைகளில்லை. 2

தம்மை ஐயுறாதாரின் மனைவியிடத்தே காமுற்று, பாவஞ் செய்து ஒழுகுபவர், உயிருடையவரேனும் இறந்தவரே யாவர். 3

காம மயக்கத்தால் தினையளவும் தம் பிழையை ஆராயாது பிறன் மனைவியிடம் செல்லுதல், எத்துணைப் பெருமையுடையரேனும் யாதாய் முடியும்? 4

எளிய செயல் என்றெண்ணிப் பிறன் மனைவியிடம் காமுற்றுச் செல்பவன், என்றும் அழியாத நிலைத்தப் பழியை அடைவான். 5

பிறன் இல்லாளிடம் நெறி தவறி செல்லுபவனிடம் பகை, பாவம், அச்சம், குடிப்பழி என்னும குற்றங்கள் ஒருகாலும் நீங்கா. 6

பிறருக்கு உரிமை பூண்டு அவனியல்பின் கண்ணே நிற்பவளது பெண் தன்மையை விரும்பாதவனே, அறஇயல்போடு கூடி இல் வாழ்பவன். 7

பிறனுடைய மனையாளைக் காமக்கண் கொண்டு நோக்காத பெரிய ஆண்மை, சால்புடையவர்களுக்கு அறமும், நிரம்பிய ஒழுக்கமும் ஆகும். 8

பிறனுக்கு உரியவளின் தோள்களைப் பொருந்தாதவர்களே கடல் சூழ்ந்த உலகில் எல்லா நன்மைகளும் எய்துதற் குரியவர்கள். 9

ஒருவன் அறஞ் செய்யாமல் பாவங்களைச் செய்தாலும், பிறருடைய மனைவியின் பெண்மையை விரும்பாமல் இருந்தால் நல்லது. 10

## 16. பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 1

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. 2

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 3

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். 4

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 5

ஒறுத்தார்க்கொரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 6

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று. 7

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல். 8

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். 9

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின். 10

## 16. பொறுத்தலை யுடையராதல்

தம்மை தோண்டித் துன்புறுத்துவோரையும, வீழாமல் தாங்கும் நிலம் போல், தம்மை அவமதிப்பவரையும் பொறுத்தல் தலையான அறம். 1

பிறர் செய்த எல்லை மீறிய தீமையைப் பொறுக்க வேண்டும். மேலும் அத் தீமையை உள்ளத்தில் நிறுத்தாது உடனே மறத்தல் பொறுத்தலினும் நல்லது. 2

ஒருவனுக்கு வறுமையின் வறுமையாவது விருந்தினரை ஏற்றுக் கொள்ளாது நீக்குதல். அதுபோல வன்மையுள் வன்மையாவது அறிவின்மையால் தீங்கு செய்தோரைப் பொறுத்தல். 3

ஒருவன் சால்புடைமை தன்னிட மிருந்து நீங்கா திருக்க விரும்பினால், பொறையுடைமையை அழியாமல் காத்தொழுக வேண்டும். 4

தீமை செய்தவரைப் பொறுக்காமல் துன்புறுத்திய வரை அறிவுடையார் ஒரு பொருளென மதியார். தீமையைப் பொறுத்த வரைப் பொன் போல பொதிந்து கொள்வர். 5

தமக்குத் தீங்கு செய்தவனை யொறுத்தார்க்கு உண்டாவது ஒரு நாள் இன்பமே, அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியும் அளவும் புக ழுண்டாம். 6

செய்யத் தகாத கொடுமையை தனக்குப் பிறர் செய்யினும், அவருக்கு அதனால் வரும் துன்பத்திற்கு நொந்து தான் அறமல்லாதவைகளை செய்யாம லிருத்தலே ஒருவனுக்கு நல்லது. 7

மனச் செருக்கினால் தங்களுக்கு தீமை செய்தவரை, தாம், தம்முடைய பொறுமையால் வெல்லுதல் வேண்டும. 8

இல் வாழ்க்கையி லிருந்து கொண்டே துறந்தவர் போலும் தூய்மை உடையவர், நெறி கடந்தவரின் கொடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவர். 9

விரத மிருந்து உணவைத் தள்ளிப் பசி நோயைப் பொறுப்பவர், பிறர் கூறுந் தீய சொற்களை பொறுப்பவர்களுக்கு அடுத்த நிலை யுடையவர். 10

# 17. அழுக்காறாமை

ஒழுக்காறாக் கொள்க ஒருவன் றன் நெஞ்சத்து
அழுக்கா றிலாத இயல்பு. 1

விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். 2

அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். 3

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 4

அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. 5

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 6

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 7

அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 8

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 9

அழுக்கற் றகன்றாரும் இல்லை அஃதில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரு மில். 10

## 17. பொறாமை கொள்ளாமை

தன்நெஞ்சத்தின்கண் பொறாமை என்னும் குற்ற மில்லாத இயல்பினை, ஒருவன் தனக்கு ஓதிய ஒழுக்க நெறி யெனக் கொள்ள வேண்டும். 1

எவரிடமும் பொறாமை கொள்ளாம லிருக்கப் பெற்றால், ஒருவன் பெறும் சிறந்த பேறுகளுள் அப்பேற்றினை ஒப்பான தில்லை. 2

அறமும், செல்வமும் ஆகிய உறுப்புகளை தனக்கு வேண்டா மென்று நினைக்கத் தக்கவனே, பிறர் செல்வம் கண்டு மகிழாது பொறாமை கொள்வான். 3

அழுக்காறெனும் தீ நெறியில் தமக்கு துன்பம வருதலை யறிந்து, அழுக்காறு காரணமாக அற மல்லாதவற்றை செய்ய மாட்டார்கள் அறிவுடையோர். 4

அழுக்காறு பகைவ ரில்லாமலே கேடு பயப்பது ஆதலால், அவ் வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டாம். கேடு பயக்க அதுவே போதும். 5

ஒருவன் பிறருக்குக் கொடுப்பது கண்டு பொறாமை கொள்வோனது சுற்றம், உடுக்கப் படுவதும், உண்ணப் படுவது மின்றிக் கெடும். 6

பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப் படுபவனைத் திருமகள் தானும் பொறாது மூத்தாளுக்கு அவனைக் காட்டி விட்டு நீங்குவாள். 7

அழுக்காறு என்னும் ஒப்பில்லாத பாவி, தன்னை உடையானை இம்மையிலும், மறுமையிலும் தீய வழியில் செலுத்தி விடும். 8

அழுக்காறு மனதில் கொண்டவனின் ஆக்கமும், செம்மையானவனின் கேடும் ஆய்ந்து பார்க்கத் தக்கவை. 9

அழுக்காற்றைச் செய்து பெரியோ ரானாருமில்லை, அச் செயலில்லாதார் பெருக்கத்தி னீங்கினாரு மில்லை. 10

## 18. வெஃகாமை

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 1

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். 2

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 3

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். 4

அஃகி யகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். 5

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 6

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். 7

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 8

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு. 9

இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு. 10

## 18. கவர்ந்து கொள்ளக் கருதாமை

பிறர்க்குரிய நல்ல பொருளை ஒருவன் நடுநிலைமை இன்றி பறிக்க நினைத்தால், அவன் குடியைக் கெடச் செய்து, பல குற்றங் களையும் அவனுக்கு கொடுக்கும். 1

பிறர் பொருளை பறிப்பதனால் சமக்குவரும் பயனை விரும்பி, பழியான செயல்களைச் செய்யார் நடுவு நிலையை அல்லாதவற்றை கண்டு அஞ்சுபவர். 2

நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறனல்லாத செயல்களைச் செய்யார், அறத்தால் வரும் நிலையான இன்பத்தைக் காதலிப்போர். 3

யாம் வறியர் என்று கருதி, அது தீர்தற்காக பிறர் பொருளை விரும்ப மாட்டார்கள் ஐம்புலன்களையும் வென்ற குற்ற மில்லாத காட்சியினை புடையார். 4

பொருளை விரும்பி யாரிடத்திலும் அறிவுக்கு பொருந்தாத செயல்களை அறிவுடையார் செய்வாரெனின், நுண்ணிய - விரி வுடைய அவர்கள் அறிவால் ஆம் பயன் என்ன? 5

அருள் நெறியில் நின்று இல்லறம் விழைவோன், பிறர் பொருள்களை விரும்பி அதனைப் பெறும் குற்றங்களை எண்ணினால் கெடுவான். 6

பிறர் பொருளை விரும்பி அதனாலான ஆக்கத்தை விரும் பாதே. பின்னர் அவ் வாக்கத்தின் பயன் நல்லதாவ தில்லை. 7

ஒருவனின் செல்வத்திற்கு குறைவு நேராதிருக்க காரணம் ஆராய்ந்தால், அவன் பிறனின் கைப் பொருளைத் தான் விரும்பாம விருத்தலே யாகும். 8

இஃதற னென்றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறி வுடையோரை திருமகள் தான் அடையும் திறன் அறிந்து அதற் கேற்றவாறு சென்றடைவாள். 9

பின் விளைவதை அறியாமல் ஒருவன் பிறர் பொருளை விரும் பினால் அவ் விருப்பம் அவனுக்கு அழிவைத் தரும். அப் பொருளை வேண்டாமை வெற்றியைத் தரும். 10

## 19. புறங்கூறாமை

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 1

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை. 2

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். 3

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். 4

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். 5

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும். 6

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 7

துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. 8

அறநோக்கி ஆற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 9

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. 10

## 19. காணுவிடத்துப் பிறரை இகழாமை

ஒருவன் அறம் என்னும் சொல்லைக்கூடச் சொல்லாது தீமைகள் செய்து ஒழுகினாலும், அவன் புறங்கூறுதல் செய்யான் என்று பெயர் பெறுதல் நன்று. 1

ஒருவன் பெருமையை அவனுக்குப் புறத்தே அழித்துப் பேசி, அவனைக் கண்டபோது பொய்யாகப் புகழ்ந்து சிரித்துப் பேசுதல், அறத்தைசிதைத்து தீயன செய்தலினும் இழிவானது. 2

காணாதபோது இகழ்ந்தும், கண்டபோது பொய்யாகப் புகழ்ந்தும் உயிர் வாழ்வதைவிட செத்துப்போதல் அறநூல்கள் கூறும் ஆக்கத்தைத் தரும். 3

ஒருவன் எதிர் நின்று கண்ணோட்டமில்லாமல் கடுஞ் சொல் கூறினாலும், அவன் நேரிவில்லாதபோது அவன் அறியாத பழிச் சொற்களைக் கூறக்கூடாது. 4

பிறருடைய நன்மையை எடுத்துக்கூற மனமில்லாதவ னென்பது, புறங்கூறுகின்ற அவனது இழிகுணத்தா லறியப்படும். 5

பிறரைப்பற்றி புறங் கூறுகின்றவனுடைய பழிச்செயல் கள் யாவற்றுள்ளும் மிக இழிந்தவை பிறரால் தெரிந்தெடுத்து உரைக்கப்படும். 6

மகிழும் வண்ணம் இன்சொற்களைப் பேசி நட்புக் கொள்ளுதலைஅல்லது என்று அறியாதார், தம்மைவிட்டு நீங்கும் படிப் புறங்கூறி நண்பர்களைப் பிரிந்துவிடுவர். 7

பழகிய நண்பரது குற்றத்தையும் புறத்தே தூற்றும் இயல்பு கொண்டவர்கள், அயலார் மாட்டு எவ்விதம்நடப்பரோ? 8

பிறரில்லாத சமயத்தில் புறங்கூறி இகழ்ந்துரைப்பவ னுடைய உடல் சுமையை பூமியானது பொறுத்திருப்பது, பொறையை அறமென்று கருதியே போலும்! 9

பிறர் குற்றம்போல் தம் குற்றத்தையும், புறங்கூறுவார் காண வல்லாராயின், நிலைபெற்ற உயிர்க்கு அவரால் துன்பம் உண்டா? 10

## 20. பயனிலசொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 1

பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது. 2

நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை. 3

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து. 4

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். 5

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். 6

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 7

அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். 8

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். 9

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 10

## 20. பயனைத் தராத சொற்களைச் சொல்லாமை

பலர் கேட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைக் கூறுகின்றவன் எல்லோராலும் இகழப்படுவான். 1

அறமற்ற செயல்களை தம் நண்பர்களிடம் செய்தலைக் காட்டிலும் பலர் முன்னே பயனற்ற சொற்களைக் கூறுதல் தீயதாகும். 2

பயனற்றவைகளை ஒருவன் விரித்துரைத்துக்கொண் டிருந்தால், அவ்வுரைகள் அவன் சிறப்பில்லாதவன் என்பதை நன்கறியச் செய்யும். 3

ஒருவன் பயனற்ற இழிச்சொற்களைப் பலரிடம் கூறுவானாயின், அவன் உரைகள் சிறப்பில்லாதனவாய் அவனை நன்மையிலிருந்து விலக்கிவிடும். 4

பயனற்ற சொற்களை நற்பண்பினர் சொல்லுவார்களானால், அவர்களுடைய உயர்வும், மதிப்பும் நீங்கிப்போகும். 5

பலமுறை பயனற்ற சொற்களையே சொல்லுகின்றவனை மனிதன் என்று கூறக்கூடாது. அவன் மனிதருள் பதர் என்று கூறவேண்டும். 6

சான்றோர் சிறப்பில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம்; பயனற்ற சொற்களைச் சொல்லாதிருந்தால் நல்லதாகும். 7

பண்பு மிகுந்த பொருள்களை ஆராயும் அறிவு படைத்தோர், மிக்க பயனற்ற சொற்களைச் சொல்லமாட்டார்கள். 8

மயக்கமற்ற, குற்றமற்ற அறிவுடையோர் மறந்தும் பயனற்றசொற்களைச் சொல்லவே மாட்டார்கள். 9

எதையாவது சொல்ல விரும்பினால் பயனுடைய சொற்களையே சொல்லுக; பயனற்ற சொற்களைச் சொல்லாது ஒழிக. 10

## 21. தீவினையச்சம்

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. 1

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 2

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். 3

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. 4

இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 5

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். 6

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வியாது பின்சென் றடும். 7

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வியா தடியுறைந் தற்று. 8

தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். 9

அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். 10

## 21. தீமைபயக்கும் செய்கைகளைச் செய்யஅஞ்சுதல்

தீவினை செய்தலாகிய அகந்தைக்கு தீவினையாளர் அஞ்சமாட்டார்கள்; தீவினையற்ற உயர்ந்தோர் அதற்கு அஞ்சுவர். 1

தீவினைகள் உண்மையில் துன்பத்தையே விளைவிப்பதால் தீய செயல்கள் தீயைப் பார்க்கிலும் கொடியன என்று அஞ்சப்படத்தக்கன. 2

அறிவோடு செய்யுஞ் செயல்களில் முதன்னையானது யாதெனில், தம்மைத் துன்புறுத்துவோர்க்கும் தீய செயல்களைச் செய்யாதிருத்தல். 3

மறந்தும் பிறனுக்கு தீமை பயக்கும் செய்கையை எண்ணக்கூடாது. எண்ணினுல் அவனுக்கு கெடுதி உண்டாக அறம் நினைக்கும். 4

தான் வறியவன் என்றெண்ணி தீயவைகளைச் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் மீண்டும் அதிக வறியவனுவான் 5

துன்பஞ் செய்யும் தன்மையுடைய பாவங்கள் தன்னை வருத்துதலை வேண்டாதவன் தீய செயல்களை தான் பிறருக்குச் செய்தல் கூடாது. 6

பெரும் பகையுடையாரும் அப்பகையிலிருந்து தப்பிப் பிழைத்துக் கொள்ளலாம்; ஆனுல் தீவினைப் பகையோ ஒருவனை நீங்காது தொடர்ந்து வருத்தும். 7

பிறருக்கு தீவினைகள் செய்தவர்கள் கேடு அடைதல் எவ்வாறெனில், ஒருவனின் நிழல் அவனை விடாது வந்து அடியில் தங்குவது போலாகும். 8

தன்னைத்தான் விரும்பி வாழ்பவன் தீவினைப் பகுதியாகிய செய்கைகளுள் எவ்வளவு சிறிதாயினும் பொருந்தாமல் நீங்க வேண்டும். 9

ஒருவன் நன்மார்க்கத்திலிருந்து வழுவிச் சென்று தீயவைகள் செய்யாதிருப்பானுனுல், அவன் கேடு இல்லாதவன் என்று அறியலாம். 10

50634 031,1B6T,T J3

## 22. ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு.

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 2

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற. 3

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 4

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 5

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கண் படின். 6

மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். 7

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். 8

நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யா தமைகலா வாறு. 9

ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 10

## 22. இடர் வந்தபோது உதவுதல்

நீர் சுரக்கும் மேகங்களுக்கு உயிர்கள் என்ன கைம்மாறு செய்யக் கூடும்? அதுபோல தக்கவர்கள் கடமையாகக் கருதிச் செய்யும் உதவிகள் கைம்மாறு வேண்டாதவை. 1

முயற்சி செய்து பெற்ற பொருள் முழுவதும் தக்கவர்களிடத்திருக்குமாயின், அது பிறருக்கு உதவி செய்வதற்கே பயன்படும். 2

வானுலகிலும், இவ்வுலகிலும் ஒப்புரவைப்போல வேறு நல்ல அறங்கள் செய்யக் கிடைப்பதரிது. 3

உலகத்திற்குச் செய்யவேண்டிய கடமையை அறிந்து செய்பவன் உயிர் வாழ்கின்றவனாவான்; அதனை அறிந்து செய்யாதவன் செத்தாரில் ஒருவனாகக் கருதப்படுவான். 4

உலக இயல்பறிந்து உதவும் மனமுடைய அறிவுடையோனின் செல்வம் ஊரார் நீர் உண்ணும் குளமானது நீரால் நிறைந்தாற் போன்றது. 5

செல்வமானது நன்மை செய்பவனிடம் சேர்ந்தால், அது கனிதரும் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போன்றது. 6

செல்வமானது உதவி செய்யும் நற்பண்பு படைத்தவனிடம்சேர்ந்தால், அது தன் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படும் மரத்தை ஒக்கும்' 7

இயற்கையாக கடமையை உணரும் அறிவினர், தம் செல்வம் சுருங்கிய காலத்தும் உபகாரஞ் செய்தற்கு தளரமாட்டார்கள். 8

ஒப்புரவு செய்யும் நல்ல பண்பு உடையவன் வறுமைப் படுதல் என்பது செய்யத்தக்க கடமைகளைச் செய்யாமல் வருந்தும் நிலையை அடைதலேயாம். 9

ஒப்புரவு செய்தலால் ஒருவனுக்கு கேடு வருமென்றால், அக்கேடு தன்னை விற்றாயினுங் கொள்ளத்தக்கது. 10

## 23. ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 1

நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 2

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. 3

இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு. 4

ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின். 5

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 6

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டல் அரிது. 7

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 8

இறத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல். 9

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈத லியையாக் கடை. 10

## 23. இல்லாதவர்க்கு இல்லையென்னாது கொடுத்தல்

பொருளில்லார்க்கு அவர் வேண்டியவற்றை கொடுப்பதே ஈகை எனப்படும். மற்றவை குறியை எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது. 1

ஏற்பது நல்லவழி என்றாலும் அஃது இழிவானது; மேலுலகம் கிடைக்காது என்று சொன்னாலும் பிறர்க்குக் கொடுப்பதே சிறந்தது. 2

'நான் ஏழை' என்னும் இழிவான சொல்லை ஒருவன் சொல்லுமுன் கொடுத்தல் நற்குடியில் பிறந்தாரிடத்தே காணப்படும் செய்கையாகும். 3

இரந்தவர் வேண்டிய பொருளைப் பெற்று முகமலர்ச்சியடைதலை பார்க்கும் வரை வறியவரால் இரக்கப்படுதல் துன்பமானது. 4

தவம் வல்லவருக்கு ஆற்றலாவது பசியைத் தாங்கிக் கொள்ளுதல்; அவ்வாற்றலும், அப்பசியை தமது ஈகையால் மாற்றுவாரது திறமைக்குப் பிற்பட்டதே. 5

ஏழைகளின் கடும் பசியைத் தீர்க்கவேண்டும். ஏனெனில், பொருள் தேடியவன் அப்பொருளைத் தனக்கு உதவும்படி வைக்குமிடம் அதுவே. 6

தான் உண்பதை பலருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணும் இயல்புடையவனைப் பசி எனும் தீய நோய் தீண்டாது. 7

தம் செல்வத்தை ஈயாது வைத்து இழந்துபோகும் கருமிகள் ஏழைகளுக்கு வேண்டியன கொடுத்து அவர்கள் மகிழ்வதைக் கண்டு மகிழ அறியார்கள் போலும்! 8

தம் பொருள் குறைவை நிரப்புவதற்காக பிறர்க்கு ஈயாமல் தாமே தனியாய் உணவு கொள்ளுதல், பிச்சை எடுப்பதைவிட துன்பந்தருவதாகும். 9

இறப்பைவிட துன்பமாவது வேறில்லை; ஆனால் ஏழைகள் விரும்பிய தொன்றைக் கொடுக்க முடியாத நிலை ஏற்படின் இறப்பதே இனியதாகும். 10

## 24. புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 1

உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ். 2

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். 3

நிலவரை நீள்புகழ் ஆற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு. 4

நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. 5

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 6

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன். 7

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். 8

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 9

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 10

## 24. நல்ல தன்மைகள்அழியாமல் நிற்பது

ஏழைகளுக்கு வேண்டுவதை கொடுக்க வேண்டும். அதனால் புகழ் உண்டாகும்படி வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர மக்களுயிருக்குச் சிறந்த பயன் கிடையாது. 1

சிறப்பாகப் புகழ்ந்து பேசுபவர் சொல்பவை யெல்லாம், இரப்பவர்கட்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பவர்பால் நிற்கின்ற புகழ் பற்றியே யாம். 2

தனக்கு இணையில்லாமல் ஓங்கிய புகழைத் தவிர உலகத்திலே அழியாமல் நிலை நிற்பது வேறொன்று மில்லை. 3

இவ் வுலகின் எல்லை வரை பரவி நிற்கும் புகழை நிலை நாட்ட வல்லவனுயின், வானுலகம் தேவரைப் புகழாது, அவனையே போற்றும். 4

புகழுடம்பு நிற்கப் பூதஉடம்புஇறக்கப் பெறுதலும்,புகழ் வளர்ச்சிக்கு ஏதுவாய பொருட் கேடுறுதலும், நிலையான அறிவாற்றலுடையவர் அன்றி மற்றவர்களுக்கு அரிது. 5

உலகில் தோன்றினுல் புகழோடு விளங்க வேண்டும். புகழில்லாதவர்கள் மனிதராய் பிறப்பதைக் காட்டிலும் பிறவாமை நன்று. 6

புகழ் தமக்கு உண்டாகுமாறு வாழ மாட்டாதவர்கள், அக்குறைக்காக தம்மை நொந்து கொள்ளுதலை விடுத்து தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்வதால் பயனென்ன? 7

தனக்கு பின்னர் நிற்கும் புகழ் எனும் சிறப்பை பெறு விட்டால், அதுவே உலகரனைவருக்கும் பழிபாகும் என்று அறிஞர் கூறுவர். 8

புகழ் பெருத்த உடலைத் தாங்கிய நிலமானது, வளமான விளைவு இல்லாமல் குன்றி விடும். 9

தம்மிடம் பழி உண்டாகாமல் வாழ்கின்றவர்களே உயிர் வாழ்பவர்கள். புகழ் உண்டாகாமல் வாழ்பவரே இறந்தவராவர். 10

## 25. அருளுடைமை

அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. 1

நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை. 2

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். 3

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. 4

அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லல்மா ஞாலங் கரி. 5

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். 6

அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு. 7

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது. 8

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். 9

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து. 10

## 25. உயிர்களிடத்துண்டாகும் இரக்கம்

பல்வகைச் செல்வங்களுள் அருட் செல்வமே சிறப்பான செல்வம். அஃது உயர்ந்தோர் மாட்டு உண்டாவது. பொருட் செல்வம் இழிந்தவரிடத்தும் உள்ளது. 1

நன்னெறியிலே நின்று அருளுள்ளவர்களாக விளங்க வேண்டும். பல வழிகளில் ஆராய்ந்து பார்த்தாலும் உயிர்க்குத் துணையாவது அருளேயாம். 2

அருள் நிறைந்த உள்ளம் படைத்தவர்களுக்கு இருள் நிறைந்த இன்னல் உலகில் புகுதல் இல்லையாம். 3

நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாத்து அருளை மேற்கொண்டவனுக்கு, தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீ வினைகள் உண்டாகா. 4

அருளை மேற்கொண்டவர்களுக்கு ஒரு துன்பமு மில்லை. அதற்கு காற்று இயங்குகின்ற வளமான பெரிய உலகில் வாழ்வோரே சான்றுவர். 5

அருள் அற்றவர்களாய் கொடுமைகளைச் செய்வோர், உறுதிப் பொருளை இழந்து விட்டு தாம் படும் துயரத்தையும் மறந்தவர் என்று நல்லோர் கூறுவர். 6

பொருளில்லாதவர்களுக்கு இவ் வுலக இன்பம் இல்லாதது போல, அருளில்லாதவர்களுக்கு வீட்டுலகத் தின்பம் இல்லை. 7

வறியாரானவர்கள் வறுமை நீங்கிய பின் சிறப்புறுதல் முடியும்; அருளில்லாதவர்கள் அழிந்து போனவரே; அவர்கள் சிறப்படைவ தில்லை. 8

அருளை மேற்கொள்ளாதவன் செய்யும் அறத்தை ஆராய்ந்து பார்த்தால், அது அறிவிலே தெளிவில்லாதவன் உண்மை பொருளை உணர்ந்தது போன்றது. 9

அருளை மேற் கொள்ளாதவன் தன்னினும் எளியனை தான் வருத்த முயலுங்கால், தன்னைவிட வலியவரின் முன் தான் பயந்து நிற்கும் நிலையை நினைக்க வேண்டும். 10

# 26. புலான்மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 1

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. 2

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம். 3

அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல். 4

உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. 5

தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில். 6

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின். 7

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன். 8

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. 9

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும். 10

## 26. ஊன் உண்ணுதலை ஒழித்தல்

தன்னுடல் வீங்குவதற்காக மற்றோர் உயிரை தின்பவன் எங்ஙனம் அருளுடையவனாக முடியும்? 1

பொருளினால் வரும் பயனை அடைதலை அதனைப் பாதுகாக்காதவற் கில்லை; அதுபோல அருளினால் வரும் பயனை அடைதல் ஊன் உண்பவர்க் கில்லை. 2

கொலைக் கருவியை கைகொண்டவனின் மனம் கொலையையே நோக்கும்; அதுபோல ஒருயிரின் உடலை சுவைத் துண்பவனின் மனம் ஊனையே நோக்கும் அருளைப் போற்றாது. 3

அருள் எது என்றால் கொல்லாமை; அருளல்லது எதுவெனில் கொல்லுதல்; அக் கொலையால் வந்த ஊனை உண்பது பாவம். 4

புலால் உண்ணாமை இருந்தால், சிலவகை யுயிர்கள் வாழ்வு பெறும். புலாலை உண்டால் அவனை விழுங்கிய நரகம் வாய் திறந்து உமிழாது. 5

புலால் உண்ணும் நோக்கத்துடன் உலகத்தார் உயிர் கொலை செய்யாரெனின், ஊனை விலைக்கு விற்பவர் எவரும் இல்லாமற் போவர். 6

வேறோர் உயிரின் புண்ணே புலால் என்னும் உண்மையை அறிவாராயின் எவரும் புலால் உண்ண மாட்டார்கள். 7

தெளிவுள்ள அறிஞர்கள், ர் உயிரிடத்தி லிருந்து பிரிந்த உடம்பாகிய ஊனை யுண்ணார். 8

அவிகளைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை விட, ஓர் உயிரை கொன்று உண்ணாமை இருப்பது மிக்க நல்லது. 9

உயிர் கொலை செய்யாதவனை, ஊன் உண்ணாதவனை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும். 10

## 27. தவம்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. 1

தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதில்லார் மேற்கொள் வது. 2

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம். 3

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 4

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 5

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. 6

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. 7

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும். 8

கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 9

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 10

## 27. துன்பங்களைப் பொறுத்து நலங்களைச் செய்தல்

தன்னுயிருக்கு ஏற்படும் துன்பங்களை சகிப்பதும், மற்ற உயிர்கட்கு துன்பம் உண்டு பண்ணாமை விருத்தலுமே தவத்தின் வடிவம். 1

தவம், தவமுடையவர்களுக்கே பொருந்துவ தாகும். அதனை தவ வொழுக்க மற்றவர்கள் மேற் கொள்வது வீணாகும். 2

இல்லறத்தார், துறவறத்தார்க்கு உணவு, உடை முதலியவை தந்துதவ வேண்டும் என்றுதான் தவத் தொழிலை மேற் கொள்ள வில்லை போலும்! 3

பகைவரை அடக்கலும், நண்பரை உயர்த்தலும் எண்ணிய வுடன் செய்யும் ஆற்றல் தவத்தால் வரும். 4

நினைத்த பயன்களை நினைத்தபடியே அடைய முடியும். கவே, செய்யத் தகுதியுடைய தவத்தை இன்னும் முயன்று சய்யலாம். 5

தம் கடமைகளைச் சரிவர செய்பவரே தவம் செய்பவர்; மற்றவர் ஆசைக்கு ஆட்பட்டு வீண் முயற்சி செய்பவர். 6

தீயினால் சுடும் பொன் சுட சுட தன்னோடு கலந்த குற்றம் நீக்கி ஒளியால் மிகுவது போல, துன்பம் வருத்த வருத்த தவம் செய்பவர்க்கு அறியாமை நீங்கி அறிவொளி மிகும். 7

தன்னுயிரைத் தான் தனக்குரித்தாகப் பெற்றவனை, அது பெறாதனவாகிய மன்னுயிர்க ளெல்லாம் தொழும். 8

தவத்தால் வரும் ஆற்றலைப் பெற்றவர்க்கு கூற்றத்தை வெல்லுதலும் கைகூடும். 9

ஆற்றல் அற்றவர்கள் பலராக இருப்பதன் காரணம் தவம் செய்பவர் சிலர், தவம் செய்யாதவர் பலராக இருப்பதுவே யாகும். 10

## 28. கூடாவொழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 1

வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்னெஞ்சந்
தான்அறி குற்றப் படின். 2

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. 3

தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. 4

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில். 6

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. 7

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். 8

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். 9

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். 10

## 28. தீய வொழுக்கம்

வஞ்சகனுடைய பொய்மையான ஒழுக்கத்தைக் கண்டு, அவனுடைய பஞ்ச பூதங்களும் தமக்குள்ளே சிரிக்கும். 1

தான் குற்றமென்று அறிந்ததன் கண்ணே தன் மனம் செல்லு மானால், ஒருவருக்கு வான்போலும் உயர்ந்த தவ வேடம் என்ன பயனைத் தரும்? 2

மனதை அடக்கும் ஆற்றல் இல்லாதவன் மேற்கொண்ட வலியுள்ள தவக் கோலமானது, பசு புலித் தோலைப் போர்த்துக் கொண்டு பயிரை மேய்ந்தது போன்றது. 3

தவ வேடத்தில் தன்னை மறைத்துக் கொண்டு தீயவை செய்தல், வேடன் புதரில் மறைந்து வலை வீசிப் பறவைகளைப் பிடிப்பது போன்றது. 4

'நாங்கள் பற்றற்றவர்கள்' என்று சொல்லுபவர்களின் பொய் யொழுக்கமானது, பின்னர் 'என்செய்தோம்' என்று தாமே இரங்கும்படியான இன்னல்களைக் கொடுக்கும். 5

உள்ளமாற பற்றுக்களை துறவாமல், துறந்தவரைப் போல் நடித்து வஞ்சனை செய்து வாழ்பவர்களைவிட இரக்க மற்றவர்கள் யாரு மில்லை. 6

வெளியில் குன்றிமணியைப் போல வேடத்தால் செம்மை வுடையராயினும், அதன் மூக்குபோல் மன மிருண்டிருப்பவரை யும் உடையது உலகம். 7

மனம் மாசுடையதாக இருக்க, தவ மகிமை பெற்றவர் போல் நீரில் மூழ்கிக் காட்டி மறைந்து நடக்கும் வஞ்சக மாந்தர் பலர் உளர். 8

அம்பு நேராக இருந்தாலும் அது கொடிது; யாழின் கொம்பு வளைந்திருந்தாலும் அது நல்லது. அது போலவே மாந்தர் குணங்களை செயல் முறையில் உணர்தல் வேண்டும். 9

உலகத்தார் பழிக்கும் தீமையை ஒழித்து விட்டால் மொட்டை யடித்தலும் வேண்டாம் சடை வளர்த்தலும் தேவை யில்லை. 10

## 29. கள்ளாமை

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. 1

உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வே மெனல். 2

களவினா லாகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும். 3

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். 4

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்பு பார்ப்பார்க ணில். 5

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர். 6

களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில். 7

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. 8

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். 9

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. 10

## 29. வஞ்சித்துக்கொள்ள கருதாமை

இழிவில்லாத வாழ்வை விரும்புகின்றவன், யாதொரு பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக்கொள்ள கருதாதவாறு நெஞ்சைக் காக்க வேண்டும். 1

குற்றங்களை நெஞ்சால் கருதுவதும் குற்றமாகும். ஆதலால் பிறன் பொருளை அவனுக்குத் தெரியாமல் வஞ்சித்துக் கொள்வோமென்று கருதாதே. 2

களவினால் கொள்ளும் பொருள் வளர்வதுபோலத் தோன்றித் தன் எல்லையைக் கடந்து கெட்டுவிடும். 3

பிறர் பொருளை வஞ்சித்து கொள்ளுதலில் உள்ள வேட்கை, அது பயன் கொடுக்கும்போது தொலையாத துன்பத்தைக் கொடுக்கும். 4

அருளின் உயர்வறிந்து அதன்மேல் அன்புடையாராதல், பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவரது சோர்வை பார்ப்பவரிடம் உண்டாகாது. 5

களவின் கண்ணே மிக்க வேட்கையை யுடையவர், உயிர் முதலியவற்றை அறத்தாலாகிய நெறியின்கண் நின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார். 6

களவு என்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினை யுடையாராதல், உயிர் முதலியவற்றை அளத்தல் என்னும் பெருமையை விரும்பினார்களிட மில்லை. 7

அளவறிந்து வாழும் நெஞ்சில் அறம் நிலைபெற்றாற் போல, களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை நிற்கும். 8

களவைத் தவிர பிறவற்றை அறியாதவர், அவ்வளவல்லாத தீய நினைவுகளை நினைத்தபொழுதே கெடுவர். 9

களவு செய்வோர்க்கு உயிருடன் கூடிய உடம்பு தவறும்; களவு செய்யாதவர்களுக்கு வானுலகம் வாய்க்கத் தவறாது. 10

## 30. வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனில் யாதொன்றுந்
தீமை இலாத சொலல். 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 2

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். 4

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும். 6

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று 7

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 8

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. 10

## 30. மெய் சொல்லுதல்

வாய்மை என்று சொல்லப் படுவது எதுவெனில், எவ்வகையான தீங்கு மில்லாத சொற்களைக் கூறுதலே யாகும். 1

குற்றமற்ற நன்மையைக் கொடுக்குமாயின் பொய்ச் சொற்களும், மெய்ச் சொற்கள் என்று கருதும் நிலையைப் பெறும். 2

மனதில் பட்டதை மறைத்து பொய் பேசுதல் கூடாது. அங்ஙனம் பொய் சொன்னால் தன் நெஞ்சே தனக்குத் துன்பத்தைக் கொடுக்கும். 3

தன் நெஞ்சறிய பொய் இல்லாமல் நடப்பானானால், உயர்ந்தோர் எல்லாருடைய உள்ளத்திலும் இருப்பவனாவான். 4

தன் மனத்திற்கு மாறுபடாத உண்மையைப் பேசுவாரானால், அவர் தானம், தவம் இரண்டையும் செய்தவரை விட சிறப்புடையவர். 5

பொய் யில்லாமல் வாழ்வதைப் போல புகழ் தருவது இல்லை. இது ஒருவனுக்கு சிறு உடல் வருத்தமும் இல்லாமல் நன்மைகளைத் தரும். 6

பொய்யாமையை மெய்மையாகப் போற்றி வாழ முடியுமானால், பிற அறங்களைச் செய்யா திருத்தலும் நன்மையே. 7

புற உடலின் சுத்தம் தண்ணீரால் உண்டாகும்; அது போல, உள்ளத்தின் சுத்தம் குற்றமற்ற மெய்மையால் உண்டாகும்.

வெளி யிருளைப் போக்கும் விளக்குகள் எல்லாம் சிறந்தன வல்ல; நல்லவர்களுக்கு உள்ளத்து இருளை போக்கும் மெய்மை விளக்கே சிறந்த விளக்கு. 9

நிலையான பொருளாக ஆய்ந் தறிந்தவற்றுள் எந்த விதத்திலும் மெய்மையை விட சிறந்த பொருள் நிச்சயமாக இல்லை. 10

## 31. வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென். 1

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற. 2

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்தல் அதனான் வரும். 3

நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்தின்
பகையும் உளவோ பிற. 4

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம். 5

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 6

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 7

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 8

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். 9

இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 10

## 31. சினங் கோள்ளாமை

தன்கோபம் பலிக்கு மிடத்தில் அது வராமல் தடுப்பவனே சினம் காப்பவன்; கோபம் பலிக்காத இடத்தில் அதனைத் தடுத்தா லென்ன? தடுக்கா விட்டா லென்ன? 1

தன்னிலும் வல்லவர்க ளிடத்து கோபங் கொள்ளுதல் கெடுதியை விளைவிக்கும். மெலியவ ரிடத்தில் அது உண்டானாலும் மிக்க கேட்டையே விளைக்கும். 2

ஒருவனுக்கு தீயன வெல்லாம் கோபத்தால் உண்டாகின்றன ஆகவே, யாரிடத்தும் கோபம் கொள்ளுதலை மறக்க வேண்டும். 3

புன்சிரிப்பையும், அன்பையும் அழிக்கும் கோபத்தை விட வேறு கொடிய பகைப் பொருள்கள் ஒருவனுக்கு உண்டா? 4

துன்பம் வராமல் தன்னைப் பாதுகாக்க விரும்பினால், தனக்கு கோபம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும் இல்லையெனில் அது தன்னையே அழித்து விடும். 5

தன்னை அடுத்தவரைக் கொல்லும் கோபம் என்னும் நெருப்பானது, கோபம் கொண்டவரின் சுற்றம் என்னும் கரை சேர்க்கும் தெப்பம் போன்றவரையும் சுட்டழிக்கும். 6

நிலத்தின்கண் கையை மோதினவன் துன்புறுதல் போல், தன் திறமையைக் காட்ட கோபத்தைக் கருவியாகக் கொண்டவன் கெட்டுப் போவான். 7

தொகுதியான தீச் சுடருன் தோய்ந்தாற் போலத் துன்பத்தை ஒருவன் செய்தபோதிலும், அவன் தன்னிடம் கூட வரும் போது கோபம் கொள்ளா திருத்தல் நன்று. 8

தன்னுடைய உள்ளத்தில் கோபத்தை ஒருக்காலும் நினையாதவனாயின் அவன் நினைத்த வெல்லாம் ஒருங்கே கைகூடும். 9

பெருஞ் சினம் கொண்டவர்கள் செத்தாரோ டொப்பர்; சினத்தை ஒழித்தவர் பற்றற்ற துறவிகட்கு ஒப்பாவர். 10

## 32. இன்னாசெய்யாமை

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 1

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 2

செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 3

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 4

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. 5

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 6

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணாசெய் யாமை தலை. 7

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். 8

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 9

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 10

## 32. துன்பஞ் செய்யாமை

பெருமையைத்தர வல்ல செல்வங்களைப் பெறுவதானாலும், பிறருக்கு துன்பஞ் செய்யா திருத்தலே குற்றமற்றவரின் கொள்கை. 1

ஒருவன் தன்மேல் செற்றங் கொண்டு இன்னல்களை விளை வித்தாலும் மீண்டும் அவனுக்கு தீங்கு செய்யாதிருத்தலே குற்ற மற்றவரின் கொள்கை. 2

தான் ஒரு தீமையும் செய்யாமலிருக்கத் தனக்குத் துன்பம் விளைவித்தவற்கும் தீங்கு செய்தால் தப்ப முடியாத துயரத்தைத் தரும். 3

தீங்கு செய்தவரை தண்டித்தல், அவர் வெட்கம் அடையும்படி அவருக்கு உவப்பானவற்றைச் செய்து அவர் கெடுதியையும், தான் செய்த நன்மையையும் மறந்து விடுதலே யாம். 4

பிற உயிர்களின் துன்பத்தை தன் துன்பம்போல் கருதி அதனைப் போக்காவிடில், தாம் பெற்ற அறிவினால் உண்டாகும் பயன் என்ன? 5

துன்பம் தருவன என்று தான் அறிந்தவற்றைப் பிறர்க்குச் செய்ய மனதால் கூட கருதா திருத்தல் வேண்டும். 6

தீங்கு தருவனவற்றை எக்காலத்திலும், எவ்வளவு சிறிதாக வாயினும் யாவருக்கும் மனதால்கூட செய்யாமை மிகச் சிறந்த தாகும். 7

பிறர் செய்யும் தீமைகள் தன்னுயிர்க்கு துன்பம் தருவதை உணர்பவன் பிற உயிர்களுக்கு தாம் தீமை செய்தல் எதனாலோ! 8

முற்பகலில் ஒருவன் மற்றவருக்குத் தீமை செய்தால் பிற் பகலில் அத் தீமைகள் அவனுக்குப் பிறர் செய்யாமல் தாமாகவே உண்டாகும். 9

தீமைகள் தீமை செய்வாரை வந்தடையும், ஆகவே துன்ப மின்றி வாழ விரும்புகின்றவர்கள் பிறர்க்கு இன்னல்கள் செய்ய மாட்டார்கள். 10

## 33. கொல்லாமை

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. 2

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 3

நல்லா றெனப்படுவது யாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி. 4

நிலையஞ்சி நீர்த்தாருள் எல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. 5

கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணுங் கூற்று. 6

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 7

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங் கடை. 8

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. 9

உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 10

## 33. உயிர்களைக் கொல்லா திருத்தல்

அறச் செயல் எதுவென்றால், எந்த உயிரையும் கொல்லா திருத்தல். கொலை செய்தல் அறத்திற்குப் புறம்பான பாவச் செயல்களுக்கு இட மாகும். 1

அறநூல் வல்லுநர் தொகுத்த அறங்களில் தலையான அற மானது; உண்பதை பகுத்துத் தந்து தானும் உண்டு, பல்லுயிர் களையும் காப்பாற்றுதலே யாகும். 2

எல்லா அறங்களிலும் தனிச் சிறப்புடையது கொல்லாமை அடுத்த நிலையில் சிறந்து நிற்பதற் குரியது பொய்யாமை யாகும். 3

நல்ல வழி என்று சிறப்பித்துச் சொல்லப் படுவது யாதெனின், எவ் வுயிரையும் கொல்லாத அறத்தை போற்றும் நெறி யாகும். 4

துன்ப நிலையை உணர்ந்து பயந்து துறந்தவர்கள் எல்லோரையும்விட, கொல்லாமை எனும் அறத்தை போற்றுபவனே சிறந்தவனாவான். 5

கொல்லாமை என்னும் கொள்கையை மேற்கொண்டு ஒழுகுபவனுடைய வாழ்நாளின்மேல், உயிரைக் கொண்டு செல்லும் யமன் செல்ல மாட்டான். 6

தன்னுயிர் போகக் கூடியதா யிருந்தாலும் அதை தடுக்கத் தான் வேறோர் உயிரை நீக்கும் தொழிலில் ஈடுபடக் கூடாது. 7

நன்மையானது கொலை செய்வதன் மூலம் அதிகமாகக் கிடைப்பினும், அந்த நன்மை கொலை காரணமாக வருவதால் அது சான்றோர்க்கு இழிவான தாகும். 8

கொலைத் தொழிலின் மிக்க இழிவை உணர்ந்தவராது உள்ளத்தில் கொலைத் தொழில் செய்பவர் புலைத் தொழிலுடையவராகவே கருதப் படுவர். 9

நோயுடம்புடனும், வறுமை மிகுந்த வாழ்க்கையினை யுடையார் முன்பு, பல உயிர்களை உடல்களி லிருந்து நீக்கினவர். 10

## 34. நிலையாமை

நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 1

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. 2

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 3

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின். 4

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 5

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. 6

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 7

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு. 8

உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 9

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சி லிருந்த உயிர்க்கு. 10

## 34. பொருள்களின் நிலையாமை கூறல்

நிலையற்றவைகளை நிற்பவை என்று கருதும் இழிந்த அறிவுடையராதல் இழி நிலையாகும். 1

பெருஞ் செல்வம் சேர்தல் கூத்தைக் காண கூட்டம் சேர்வது போன்றது. அச் செல்வம் நீங்கும்போதும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப்போலாகும். 2

நிலையாத இயல்பினை யுடையது செல்வம்; அதனைப் பெற்றால், உடனே நிலையான அறங்களை செய்ய வேண்டும். 3

காலத்தின் மெய்த் தன்மையை உணர்வாரைப் பெற்றால், நாள் என்பது ஒரு சிறு அளவு போல் காட்டி உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாகும். 4

சாங் காலத்தில் பேச முடியாமல் நாவடைத்து விக்கல் வருவதற்கு முன்னரே அறச் செய்கையை விரைந்து செய்யப்பட வேண்டும். 5

நேற்று வாழ்ந்தவன் இன்று இல்லை, யென்றும் சொல்லும் நிலையாமையாகிய இழிவை உடையது இந்த உலகம். 6

ஒரு கணப்போது கூட உலகில் வாழும் தன்மையை தெரிய மாட்டாதவர்கள், கோடிக்கு மேம்பட்ட பல வீணான எண்ணங்களை எண்ணுவார்கள். 7

உடம்புக்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பு முட்டையை விட்டு குஞ்சு ஓடிப் போனாற் போலுந் தன்மை யுடையது. 8

உறக்கம் வருவதைப் போல்வது சாவு; உறங்கி விழிப்பதைப் போல்வது, பிறப்பு. 9

உடம்பின் ஒரு மூலையில் குடியிருந் துழல்கின்ற உயிர்க்கு நிலையாய்ப் புகுந்து தங்கும் வீடு இன்னும் அமைய வில்லை போலும். 10

## 35. துறவு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 1

வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல. 2

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. 3

இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. 4

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பும் மிகை. 5

யான்எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். 6

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 7

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 8

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 9

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 10

## 35. ஆசையை விடுதல்

எவ்வெப் பொருள்களிலிருந்து தன் பற்றை நீக்கிக் கொள்ளுகின்றானோ அப்பொருள்களால் அவன் துன்புறுவ தில்லை. 1

நல்ல நிலைமை வேண்டுமெனில், பொருள்கள் உள்ள நல்ல காலத்திலேயே துறக்க வேண்டும். துறந்தபின் பல நன்மைகளைப் பெறக்கூடும். 2

ஐம்புலன்களையும் அடக்கி வெல்லுதல் வேண்டும். அதற்கு ஐம்புலன்களின் உணர்ச்சிக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் விட்டுவிட வேண்டும். 3

ஒரு பற்றும் இல்லாதிருத்தலே தவம் செய்வதற்கு இயல் பாகும். பொருளுடைமை (பற்று) மீண்டும் மயங்குவதற்கு வழி செய்யும். 4

பிறப்பறுத்தலை மேற்கொண்டவர்க்கு உடலே வேண்டாத பொருளாகும், ஆகவே உடலால் அனுபவிக்கும் மற்ற பொருள் களின் தொடர்பு எதற்கு தேவை? 5

உடம்பைத் தானென்றும், பொருளைத் தனதென்றும் என்னும் மயக்கத்தை ஒழித்தவன் வானவர்க்கும் எட்டாத உயர்ந்த நிலை பெறுவான். 6

இருவகைப் பற்றினுக்கு முரிய பொருள்களை விரும்பி துறக்காதவர்களை, துன்பங்கள் இறுகப் பற்றிக்கொண்டு விடமாட்டா. 7

முற்றும் துறந்தவர் மேல் நிலையை அடைந்தவராவர். மற்ற வர்கள் அறியாமை உடையவராகி இன்னல் வலையுள் அகப்பட்டவ ராவர். 8

இருவகைப் பற்றும் தொலைந்த உடனே அஃது அவன் இன்னலைப் போக்கும். பற்றுதபோது பிறந்திறந்துழலும் நிலையில் லாத் தன்மையே காணப்படும். 9

எதன்மீதும் பற்றில்லாத முதல்வனை அடைவதற்கான அன்பினைப் பற்றிக்கொள்ள வேண்டும். உலகப் பற்றுகளை விட் டொழிப்பதற்கு அவ்வன்பினை கடைபிடித்தல் வேண்டும். 10

## 36. மெய்யுணர்தல்

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 1

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 2

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. 3

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. 4

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 5

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. 6

ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. 7

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. 8

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய். 9

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். 10

## 36. தத்துவ ஞானம்

பொய்ப்பொருளை மெய்ப்பொருள் என்று தவறாகக் கருதும் மயக்கத்தாலே சிறப்பில்லாத பிறப்பு உண்டாகும். 1

மயக்கத்திலிருந்து தெளிந்து மாசற்ற மெய்யுணர்வுடையவர்க்கு, அம்மெய்யுணர்ச்சி துன்பம் போக்கி இன்பந் தரும். 2

ஐய உணர்ச்சி நீங்கி தெளிவாக உண்மைப் பொருளையுணர்ந்தார்க்கு இவ்வுலகைவிட வீட்டுலகம் அண்மையில் இருப்பதாகும். 3

ஐம்புல உணர்ச்சியை தன் வயமாகப் பெற்றிருந்தாலும், அதனால் மெய்யுணர்வு அற்றவர்களுக்கு நிலையான பயன் இல்லை. 4

எந்த பொருள் எந்தவித இயல்புடையதாகத் தோன்றினாலும், அந்தப் பொருளின் உண்மையான இயல்பை அறிவதே தெளிந்த அறிவாகும். 5

கற்க வேண்டியவைகளைக் கற்றறிந்து உண்மைப் பொருளை யுணர்ந்தவர்கள் மறுபடியும் பிறவா நெறியை அடைவர். 6

அறிவானது உண்மையை ஆராய்ந்து, அதனை அநுபவித்து உணருமாயின், அவனுக்குப் பிறவி உண்டென்று திண்ணமாக எண்ணவேண்டாம். 7

பிறவிக்கு ஏதுவான அறியாமை நீங்கும் பொருட்டு, முத்தி நிலைக்கு ஏதுவான இன்ப மெய்ப்பொருளைக் காண்பதே சிறந்த அறிவாகும். 8

எப்பொருளுக்கும் சார்பாகிய மெய்ப்பொருளை யுணர்ந்து பற்றுக் கெடுமாறு ஒழுகினால், சாரக்கூடிய துன்பங்கள் அவனைச் சாராது. 9

விருப்பு, வெறுப்பு, அறியாமை என்னும் மூன்று குற்றங்களும் கெடும்படி ஒழுகினால், துன்பமென்பதே தொலைந்து ஒழியும். 10

## 37. அவாவறுத்தல்

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 1

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 2

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில். 3

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 4

அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர். 5

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. 6

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். 7

அவாஇல்லார்க் கில்லாகுந் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். 8

இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின். 9

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். 10

## 37. பற்றினை யொழித்தல்

அவா என்பது எல்லா உயிர்க்கும் எந்தக் காலத்தும் நீங்காது வருகின்ற துன்பப் பிறப்பினை விளைவிக்கும் வித்தாகும். 1

ஒன்றை விரும்ப வேண்டினால் பிறவாமையையே விரும்ப வேண்டும். ஒரு பொருளையும் விரும்பாமலிருந்தால் அப்பிறவாமை தானே ஏற்படும். 2

எப்பொருளையும் விரும்பாமையைப் போல் சிறந்த செல்வம் உலகில் இல்லை; எவ்வுலகத்திலும் நிச்சயமாக இல்லை. 3

களங்கமற்ற புனிதத் தன்மை என்பது பற்றறற்றிருத்தலே; அது மெய்ப் பொருளைப் பற்றிக்கொண்டால் தானே உண்டாகக் கூடியது. 4

துன்பமற்றவர் என்று கூறப்படுபவர் ஆசையை ஒழித்தவரே; மற்றவர் முழு துன்பத்தினின்றும் நீங்கியவரல்லர். 5

ஒருவனை ஏமாற்றி துன்பத்தின் கண்ணே வீழ்த்தி கெடுப்பது ஆசையாகும். அவ்வாசைக்கு பயந்து அது வராமல் தடுப்பதே அறமாகும். 6

ஆசையினை முழுவதும் தொலைக்க வல்லவனாயின், அவன் கெடாமல் வாழ்வதற்கு ஏற்ற நன்முயற்சி அவன் விரும்பிய வழியிலேதானே ஏற்படும். 7

ஆசையற்றவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லை; ஆசை ஏற்பட்டுவிட்டாலோ துன்பங்கள் மேன்மேலும் தொடர்ந்து வரும். 8

துன்பங்களுக்குத் தலையான அவா என்னும் துன்பங் கெட்டு அழிந்தால், இவ்வுலகில் இடையறாமல் இன்பம் வாய்க்கும். 9

ஒருகாலும் நிரம்பாத தன்மை பொருந்திய அவாவினை ஒழிப்பானேயானால், அந்த நிலை அவனுக்கு அப்போதே மாறாத இயற்கை இன்பம் தரும். 10

## 38. ஊழ்

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. 1

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. 2

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். 3

இருவே றுலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. 4

நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. 5

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 6

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. 7

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின். 8

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 9

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். 10

## 38. இருநிலைப் பயன்களும் நாடிநிற்கும் முறை

கைப்பொருள் சேர்வதற்கு உரிய ஊழானல் நல்லமுயற்சி உண்டாகும்; கைப்பொருள் ஒழிவதற்கு உரிய ஊழானல் சோம்பல் உண்டாகும். 1

பொருள் இழத்தற் கேதுவான விதி அறியாமையைத் தரும்; பொருள் சேர்வதற் கேதுவாகிய விதி அறிவை விரிவு செய்யும். 2

நுண்ணிய பல நூல்கள் கற்றுணர்ந்தாலும் அவனுக்கு விதிக்கேற்றவாறே அறிவு மேற்பட்டு நிற்கும். 3

உலக இயல்பு ஊழினலே இரு வேறு வகைப்படும்; செல்வம் உடையராவதற்குரிய ஊழ் வேறு; அறிவுடையராதற் குரிய ஊழ் வேறு. 4

பொருள் சேர்த்தற்கு நல்லவாயுள்ள கருவிகளெல்லாம் தீய ஊழினல் பயன்படாது போகும். தீயவை நல்லவையாய் ஆதலும் உண்டு. 5

ஊழினல் நம்மிடம் நிலைக்கக்கூடாத பொருள்களைக் காப்பாற்றினாலும் நில்லாது. நம்மிடம் நிற்கவேண்டியவைகளை கொண்டுபோய் எறிந்தாலும் போகா. 6

கோடிக்கணக்கான பொருளைச் சேர்த்தவர்க்கும் வகுத்தான் (ஊழ்) விதித்த வகையல்லாமல் நுகர முடியாது. 7

நேரக்கூடிய துன்பங்கள் வந்து வருத்தாமல் நீங்குமனால், ஏழைகள் துறவறத்தை மேற்கொள்வர். 8

நல்வினை நன்மை பயக்கும்போது அவற்றைக் கருதி மகிழ்கின்றவர், தீவினை விளையுங் காலத்து மன வருத்தப்படுதல் ஏனே? 9

ஊழைவிட அதிக வலிவுடையன எவை? அதனை விலக்க சூழ்ச்சியைக் கைப்பிடித்தாலும் அந்த ஊழ்தான் முற்பட்டு நிற்கும். 10

# 2. பொருட்பால்

## 39. இறைமாட்சி

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 1

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 2

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு. 3

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு. 4

இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. 5

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 6

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. 7

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். 8

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 9

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. 10

## 39. அரசனது பெருந்தகைமை

படை, குடி, பொருள், அமைச்சர், நண்பர், அரண் ஆகிய ஆறு உறுப்புகளையும் உடையவன் அரசருள் அரிமா போல்வான். 1

மன உறுதி, கொடை, அறிவு, ஊக்கமுடைமை என்னும் நான்கு குணங்களும் குறையாமல் இருத்தலே மன்னர்க்கு இயல்பாகும். 2

புவியாளும் மன்னவனுக்கு விடாமுயற்சியும், கல்வியும், ஆண்மையும் ஆகிய மூன்றும் எப்போதும் நீங்காமலிருக்க வேண்டும். 3

அறநெறி தவறாது, குற்றங்களை நீக்கி, வீரத்தினின்று தவறாத மேம்பாட்டை உடையவனே மன்னனாவான். 4

பொருள் வரும் வழிகளை அதிகமாக உண்டாக்குதலும், வந்த பொருளைச் சேர்த்தலும், பாதுகாத்தலும், அவற்றை நாட்டு நலத்திற்கு செலவிடுதலிலும் வல்லவனே அரசன். 5

காண்பதற்கு எளியவனாய், எவரிடமும் கடுஞ்சொல் சொல்லாதவனாகில், அம்மன்னனை உயர்த்திப் பேசுவார் உலகோர். 6

இனிமை சொற்களுடன் வேண்டியதைக் கொடுத்துக் காக்கக்கூடிய அரசனுக்கு, உலகம் அவன் நினைத்த அளவு அவனுடையதாகும். 7

நடுநிலை தவறாது நின்று குடிகளைக் காப்பாற்றும் அரசன் மக்களுக்குத் தலைவன் என்று கருதப்படுவான். 8

நல்லவர்கள் பொது நன்மையின் பொருட்டு சொல்லும் கடுஞ்சொற்கள் காதுக்கு வெறுப்பாயிருந்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் மன்னன் குடைநிழலிலே உலகம் அடங்கும். 9

ஈவும், இரக்கமும், நடுநிலையும், தளர்ந்த குடிகளைப் பேணுதலும் ஆகிய நான்கு நற்செயல்கள் உடையான் அரசர்களுக் கெல்லாம் ஒளிபோல்வான். 10

## 40. கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 1

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 2

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 3

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 4

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். 5

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 6

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. 7

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. 8

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 9

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. 10

## 40. அறிவுதரும் நூல்களைக் கற்றல்

ஒருவன் கற்க வேண்டியவற்றைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்றபின் அக்கல்விக்கு தகுதியான முறையில் நடக்க வேண்டும். 1

எண்ணென்று சொல்வனவும், எழுத்தென்று சொல்வனவும் வாழும் மக்களுக்கு கண்ணென்று அறிவுடையோர் சொல்வர். 2

கண்ணுடைய ரென்று உயர்த்திச் சொல்லப்படுபவர் படித்தவர்களே. படிக்காதவர்கள் முகத்தில் இரண்டு புண்களை கண்களாக உடையவர்கள். 3

யாவரும் மகிழும் வணணம் கூடி, 'இனி என்று இவருடன் கூடுவோம்' என்று நினைக்குப்படி பிரிதலே கற்றோரது செய்கை. 4

செல்வர் முன் ஏழைகள் விரும்பி நிற்பது போல, (ஆசிரியரிடம்) விரும்பி நின்று கற்றவரே உயர்ந்தோர் அவ்வாறு கல்லாததவர் இழிந்தவர். 5

மணலிற் றோண்டிய ஊற்று, தோண்டும் அளவே நீர் சுரக்கும், அதுபோல மக்களுக்குக் கற்ற அளவே அறிவு விளக்க மடையும். 6

கற்றோனுக்கு என் நாடும் தன்னுடாகும்; எவ்வூரும் தன்னூராகும்; அப்படி யிருந்தும் சாகும் வரையில்கல்லாமலிருப்பது எதனால்? 7

ஒருவனுக்கு ஒரிடத்தில் தான்கற்ற கல்வியானது, பலவிடங்களிலும் சென்று உதவும் சிறப்பினை உடைத்து. 8

தாம் இன்புறும் கல்வியால் உலகம் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்தவர்கள் மேலும் மேலும் கற்க ஆசைப்படுவர். 9

ஒருவனின் அழிவற்ற சிறந்த செல்வமாவது கல்வி; மற்றவை யெல்லாம் சிறந்த நிலைத்த செல்வமல்ல. 10

## 41. கல்லாமை

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 1

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 2

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். 3

கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளார் அறிவுடை யார். 4

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 5

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். 6

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. 7

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. 8

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றார் அனைத்திலர் பாடு. 9

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 10

## 41. கற்றற்குரிய நூல்களைக் கல்லாமை

அறிவு நிறைந்த நூல்களைக் கல்லாது அவையின் கண் ஒன்றைச் சொல்லுதல், சூதாடும் இடத்தை அமைக்காமல், சூதாடு கருவியை உருட்டுவது போன்றது. 1

கல்வி யில்லாதவன் அவையில் பேசுதலை விரும்புதல் இருமுலையும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்புவது போன்றது. 2

கற்றவர் முன் பேசாதிருப்பாராயின் கல்லாதவர்களும் மிகவும் நல்லவராவார். 3

கல்லாதவனுடைய அறிவு மிகவும் செம்மையாக இருந்தாலும், அறிவுடையோர் அதனை அறிவாகக் கொள்ள மாட்டார்கள். 4

கல்லாத ஒருவனது பெருமை, கற்றோர் முன் சென்று உரையாடும் போது அவ்வுரையாடலினால் கெட்டொழியும். 5

கல்லாதவர் உலகில் உயிருடன் இருக்கின்றார் என்னும் அளவினரே யன்றி, விளையாத களர் நிலத்துக்கு ஒப்பாவர். 6

நுண்ணிய பல நூல்களில் நுழைந்து பார்க்கும் அறிவற்றவனுடைய தோற்றமும், அழகும் மண்ணினால் அழகாகச் செய்த 'பொம்மையின்' அழகும் தோற்றமும் போன்றது. 7

கல்லாதவரிடத்து நின்ற செல்வம், கற்றவரிடத்து நின்ற வறுமையை விட மிக்க துன்பந் தருவதாகும். 8

கல்லாதவர் உயர் குடியில் பிறந்தவரா யிருந்தாலும், தாழ் குலத்திற் பிறந்தும் கல்வியுடையவர் போல் பெருமை இல்லாதவர். 9

மக்களை நோக்க விலங்குகள் எவ்வளவு இழிந்ததோ, அது போலவே கற்றாரை நோக்க கல்லாதவர் இழிந்தவராவார். 10

## 42. கேள்வி

செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. 1

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 2

செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து. 3

கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை. 4

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். 5

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 6

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். 7

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. 8

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது. 9

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென். 10

## கேட்க வேண்டியவைகளை கற்றவரிடம் கேட்டல்

செல்வங்களுள் சிறப்புடைய செல்வம் கேள்வியால் பெறும் அறிவுச் செல்வம்; அந்தச் செல்வமானது மற்ற செல்வங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது. 1

செவிக்குணவாகிய கேள்வி யில்லாதபோது வயிற்றுக்குஞ் சிறிது உணவு கொடுக்கலாம். 2

செவியுணவாகிய கேள்வியினை உடையவர் அவி உணவை ஏற்றுக் கொள்ளும் வானேரோடு ஒப்பாவர். 3

நூல்களைக் கற்கவில்லை யானாலும், அவற்றை கற்றறிந்தார் சொல்லக்கேட்க வேண்டும். அஃது அவனுக்கு தளர்ச்சி வந்த போது ஊன்று கோல் போல் துணையாகும். 4

நல்லொழுக்க முடையவரது வாயிலிருந்து வரும் சொல் வழுக்கும் நிலத்து நடப்பவருக்கு ஊன்று கோல் போல் உதவும். 5

எவ்வளவு சிறிதாயினும் நல்ல கேள்விகளைக் கேட்க வேண்டும். அது கேட்ட அளவிற் சிறந்த பெருமையைத் தரும். 6

நுண்ணியதாக ஆராய்ந்தறிந்ததோடு கேள்வி யறிவினையும் உடையவர், தாம் ஒன்றைத் தவருக உணர்ந்தாலும் பேதைமை யானவற்றைக் கூறுர். 7

நல்ல நூல்களைக் கேள்வியால் துளைக்கப்படாத செவிகள், கேட்பினும், செவிடாந் தன்மை யுடையன. 8

நுட்பமாகிய கேள்வியை கேளாதவர்கள் பணிவான மொழிகளை உடையவர் ஆவது இல்லை. 9

காதுகளால் நுகரும் இன்பத்தை உணராது, வாயால் நுகரும் இன்பத்தை மட்டும் உணர்வார் இறந்தாலும், வாழ்ந்தாலும் உலகிற்கு வருவதென்ன? 10

## 43. அறிவுடைமை

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். 1

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. 2

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 3

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. 4

உலகந் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு. 5

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. 6

அறிவுடையா ராவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 7

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில். 8

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். 9

அறிவுடையா ரெல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 10

## 43. பகுத்தறிவுடைமை

அறிவே அழிவு வராமல் காவல் செய்யும் கருவியாகும்; அன்றியும் பகைவர்க்கும் உட்புகுந்து அழிக்க முடியாத அரணுமாகும். 1

மனம் சென்றவிடத்தில் செல்லவிடாது, தீமையை விட்டு நீங்கி நன்மையின் பால் செலுத்துவது அறமாகும். 2

யாதொரு பொருளை யார் யார் சொல்லக் கேட்பினும் அப் பொருளின் உண்மையான பொருளைக் காண்பதே அறிவாகும். 3

தாம் சொல்வதை கேட்பவர் மனங்கொள்ளும்படி எளிதாய் விளங்கும்படி சொல்லி, பிறர்பேசும் பேச்சின் நுண்ணிய பொருள்களைக் காண்பதே அறிவு. 4

உயர்ந்தோரை நட்பாக்கிக் கொள்வது அறிவு. அந் நட்பினிடம் மகிழ்தலும், சிதைத்தலும் இல்லாது ஒரு நிலையிலிருப்பது அறிவு. 5

எவ்வாறு உலகம் நடக்கிறதோ அவ்வாறே உலகைத் தழுவி நடப்பதே அறிவாகும். 6

பின் வருவதனை முன் அறிய வல்லாரே அறிவுடையவர். அவ்வாறு அறிய மாட்டாதவர் அறிவில்லாதவர் ஆவர். 7

அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாதிருப்பது அறிவின்மையாகும். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுதல் அறிவுடையார் செய்கையாகும். 8

பின் வருவனவற்றை முன்னறிந்து காக்கும் அறிவுடையோர்க்கு நடுங்கும்படி வருந்துன்பமொன்று மில்லை. 9

அறிவுடையோர் வேறொன்று மில்லாதவரானாலும் எல்லாம் உடையராவர்; அறிவில்லாதார் எல்லாமுடையவ ராயினும் ஒன்று மில்லாதவராவர். 10

## 44. குற்றங்கடிதல்

செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 1

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. 2

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 3

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை. 4

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 5

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு. 6

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். 7

பற்றுள்ள மென்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. 8

வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 9

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். 10

## 44 மனக் குற்றங்களை நீக்குதல்

இறுமாப்பும், வெகுளியும், சிறுமைக் குணமும் இல்லாதவருடைய செல்வம் மதிக்கப்படும் தன்மை உடையது. 1

ஈயாத தன்மையும், நன்னெறியற்ற உள்ளமும், அளவுக்கு மீறிய மகிழ்ச்சியும் அரசனாக இருப்பவனுக்கு குற்றங்களாகும். 2

பழிக்குப் பயப்படுபவர் தினை அளவு குற்றம் தம்மிடம் ஏற்பட்டாலும் அதனை பனையளவான கேடுள்ளதாய் கருதுவர். 3

தனக்கு முடிவைத் தரும் பகை குற்றமே யாகும், ஆகவே குற்றத்தை தம்மிடம் வராமல் தடுக்க வேண்டும். 4

குற்றம் வருமுன்னர் அதனை வராமற் காவாதவனுடைய வாழ்வானது, குற்றம் வந்தபோது நெருப்பின் முன்னர் வைத்த வைக்கோல் போர் போல அழியும். 5

முதலில் தன் குற்றத்தை நீக்கிப்பிறகு பிறருடைய குற்றத்தைக்கண்டு கடியவல்லானாயின், அரசனுக்கு என்ன குற்றம் உண்டாகும்? 6

செல்வத்தால் செய்யவேண்டியவைகளை செய்யாமல் அதன் மீது பற்றுள்ளம் வைத்தவனது செல்வம் பின் நிலைக்கும் தன்மையின்றி அழியும். 7

செல்வத்தை செலவிட வேண்டிய இடத்துச் செலவு செய்யாத பற்றுள்ளம் என்னும் ஈயாத்தன்மை, பிற குற்றங்கள் எல்லாவற்றினுங் கெட்டதாகக் கருதப்படும். 8

தன்னைத்தானே எப்போதும் வியந்து பேசுதல் கூடாது. நன்மை பயவாத செயல்களை விரும்புதலும் கூடாது. 9

தான் விரும்பும் விருப்பத்தை பிறரறியா வண்ணம் நுகரவல்லனாயின், பகைவரது கெடுக்க நினைக்கும் நினைப்பு பயன் படாமல் கெட்டொழியும். 10

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். 1

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 2

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 3

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 4

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 5

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். 6

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். 7

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். 8

முதலிலார்க் கூதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. 9

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 10

## 45. சான்றோரை துணைக் கோள்ளுதல்

அறத்தின் கூறுபாட்டை நன்கு அறிந்த முதிர்ந்த அறிவுடையவரது நட்பை கொள்ளும் முறை அறிந்து பெற்றுக் கொள்ள வேண்டும். 1

வந்த துன்பத்தை போக்கி, மேலும் துன்பம் வாராமல் முன்னறிந்து காக்க வல்ல தன்மையரை விரும்பித் துணையாகக்கொள்ள வேண்டும். 2

பெரியவர்களை விரும்பி அவரைத் தமக்கு உற்றாராக்கிக் கொள்ளுதல், அரியவற்றுள் அரியதாகும். 3

தம்மினும் அறிவில் பெரியவர்களை தமக்கு உற்றாராகக் கொள்ளுதல் எல்லா வலியினும் முதன்மையானது. 4

அரசன் அமைச்சர்களைக் கண்ணாகக் கொண்டு ஆட்சி புரிவதால், அவர்களை நன்கு ஆராய்ந்து தமக்குத் துணையாகக் கொள்ள வேண்டும். 5

தக்க பெரியவர்களைத் துணையாகக் கொண்டு நடக்க வல்லவனுக்குப் பகைவரால் செய்யப்படும் கெடுதிகள் ஒன்றுமில்லை. 6

குற்றங்களைக் கடிந்துரைக்கும் பெரியாரின் துணைகொண்டவரை, கெடுக்கும் வலியுடையவர் யார்? எவருமில்லை. 7

தன் குற்றத்தை இடித்துரைக்கும் பெரியாரைத் துணையாகப் பெறாத பாதுகாப்பற்ற மன்னன், தனக்கு பகைவர் இல்லையாயினும் தானே கெடுவான். 8

முதல் இல்லாத வணிகருக்கு ஊதியம் இல்லை; அதுபோல தன்னைத் தாங்கும் துணையில்லார்க்கு நிலைத்து நிற்கும் நிலையில்லை. 9

நல்லோர் நட்பை கைவிடுதல், பலருடன் பகை கொள்வதை விட மிக்க தீமை உடையதாகும். 10

## 46. சிற்றினஞ் சேராமை

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 1

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. 2

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல். 3

மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு. 4

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். 5

மனந்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. 6

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும். 7

மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து. 8

மனநலத்தி னாகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து. 9

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில். 10

## 46. இழிந்தவர் கூட்டத்தில் கலவாதிருத்தல்

பெரியவர்கள் சிற்றினத்தைச் சேர அஞ்சுவார்கள்; சிறியவர்கள் அதனைச் சுற்றமாக எண்ணிச் சேர்த்துக் கொள்வார்கள். 1

நிலத்தின் தன்மையால் நீரின் தன்மை மாறுபடும்; அது போல, மக்கள் அறிவானது தாஞ்சார்ந்த இனத்தின் தன்மையை அடையும். 2

மக்களின் பொது அறிவு அவரவர் மன இயல்பிற் கேற்றவாறிருக்கும்; இவன் இத்தகையன் என்று சொல்லப்படும் சொல்லானது அவன் சேரும் கூட்டத்திற் கேற்றவாறிருக்கும். 3

சிறப்பறிவு ஒருவர்க்கு மனத்து உள்ளது போலக்காட்டி அவன் சேர்ந்த இனத்தினால் உண்டாகும். 4

உள்ளத்தூய்மை, செய்யும் வினைத்தூய்மை ஆகிய இரண்டும், தான் சேர்ந்த இனத்தின் தூய்மையைத் துணையாக கொண்டு வரும். 5

உள்ளத் தூய்மை உடையவர்களுக்கு, புகழ், பொருள்கள் முதலியன நல்லவை. இனத்தூய்மை உள்ளவர்களுக்கு கைகூடாத முயற்சியில்லை. 6

மக்களின் உள்ளச் சிறப்பு மேன் மேலுயர்ச்சியைத் தரும். அவர்கள் சேரும் இனச் சிறப்பு எல்லாப் புகழையுந் தரும். 7

சான்றோர்கள் மனச் செம்மை உறுதியாக உடையவராயினும், அவர்கள் சேருங் கூட்டச் சிறப்பு அவர்களுக்கு நல்ல பாதுகாப்பாகும். 8

மனச் செம்மையினால் மறுமை இன்பம் உண்டாகும். அம்மனச் செம்மையும் இன நலத்தால் வலிவு பெறும். 9

உலகில் நல்ல இனத்தைவிடச் சிறந்த துணையில்லை. தீய இனத்தைவிடத் துன்பப்படுத்துவதும் வேறொன்றும் இல்லை. 10

## 47. தெரிந்து செயல்வகை

அழிவதூஉம் ஆவதூஉ மாகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். 2

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 3

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர். 4

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. 5

செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். 6

எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. 7

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 8

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 9

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. 10

## 47. ஆராய்ந்து செய்யும் திறம்

ஒரு காரியத்தைச் செய்யுமுன் அதனால் கெடக் கூடியதும், ஆகக் கூடியதும், பின் உண்டாகும் மிச்சமும் இன்னதென்று ஆராய்ந்து செய்ய வேண்டும். 1

தக்க நண்பர்களுடன் கலந்து செய்யத் தக்கதை ஆய்ந்து தாமும் சிந்தித்து காரியத்தை செய்ய வல்லவர்களுக்கு செய்வதற் கருமையான காரியம் ஒன்றுமில்லை. 2

இனி உண்டாகக் கூடிய ஊதியத்தை எண்ணி, போட்ட முதலை இழக்கக்கூடிய முயற்சியை அறிவுடையோர் செய்ய முயல மாட்டார்கள். 3

தமக்கு இகழ்ச்சி என்னும் குற்றத்திற்கு அஞ்சுவோர், நன்மை பயக்குமென்று தெளிவாக விளங்காதவைகளைச் செய் யார். 4

ஒரு முயற்சியின் திறன்களை நன்கு எண்ணிப் பாராது, அதனை செய்யத் துவங்குதல், பகைப் பயிரை நல்ல நிலத்தில் நிலை பெறச் செய்யும் வழியாகும். 5

ஒருவன் செய்யத் தகாதவற்றைச் செய்தாலும் கெடுவான்; செய்ய தகுவனவற்றைச் செய்யாமையாலும் கெடுவான். 6

செய்யும் செயலை நன்கு ஆராய்ந்த பின்னரே தொடங்குக; தொடங்கியபின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும். 7

செயல் முடியும் வழியில் முயலாத முயற்சி, துணைவர் பலர் நின்று குற்றம் வராது காப்பினும் இழுக்குப் படுதல் கூடும். 8

அவரவருடைய இயல்பை அறிந்து அவரவர்க்குத் தக்க படி செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும் குற்றம் உண்டாதல் கூடும். 9

உயர்ந்தோர் இகழாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும். உயர்ந்தோர் தம் நிலையோடு பொருந்தாத செயல்களை நல்லன என்று ஏற்றுக் கொள்ளார். 10

8

## 48. வலியறிதல்

வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். 1

ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். 2

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 3

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 4

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். 5

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 6

ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி. 7

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 8

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 9

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். 10

## 48. வலிமையை அளந்து அறிதல்

தான் செய்யும் செயலின் வலிமையும், தன்னாற்றலையும், எதிரியின் வலிமையையும் இருவருக்கும் துணை நிற்பவரின் வலிமையும் சீர் தூக்கிப் பார்த்து செய்ய வேண்டும். 1

ஒரு தொழிலை முடிக்கும் தன் திறனையும், அதற்குரிய வேண்டிய வலியையும் அறிந்து அதனிடம் நிலைத்து முயல்கின்றவர்க்கு முடியாத காரியமில்லை. 2

தம் வலியின் அளவை அறியாது மன வெழுச்சியால் ஒரு வினையைத் தொடங்கி, முயற்சி முடிவதற்கு முன்னே கெட்டவர் உலகிற் பலர். 3

மற்றவர்களோடு பொருந்தி ஒழுகாதவனாகி, தன் வலியின் அளவை அறியாது தன்னைப் பெரிதாக எண்ணிப் பிறரைப்பகைத்தவன் விரைவில் கெடுவான். 4

மிக மெல்லியதான மயிலிறகை ஏற்றிய வண்டியும், அம் மயிலிறகு மிகவும் மிகுதியாக ஏற்றினால் அச்சு முறியும். 5

மரக் கொம்பின் நுனியிலே ஏறி நின்றவர் அதனைக் கடந்து அப்பாலும் ஏற முயன்றால், அம் முயற்சி அவர்களது உயிர்க்கு முடிவை உண்டாக்கும். 6

பொருள் வருவாயின் அளவினை அறிந்து அதற்குத் தக்கபடி கொடுத்தல் வேண்டும்; அது பெற்றுள்ள பொருளை பேணி யொழுகும் முறையாகும். 7

பொருள் வரும் வழி சிறியதா யிருப்பினும் கெடுதல் இல்லை; அப்பொருள் போகும் வழியின் அளவு, வந்த வழியைவிட விரியாதாயின். 8

தனக்குள்ள பொருளின் அளவைத் தெரிந்து அதற்கு ஏற்ப வாழாதவன் வாழ்க்கை, உள்ளது போலத் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டுப்போம். 9

தன் பொருளின் அளவை ஆராயாது செய்த உதவியால், ஒருவனின் பொருளின் அளவு விரைவிற் குறைந்துபோம். 10

## 49. காலமறிதல்

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 1

பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு 2

அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின் 3

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி இடத்தாற் செயின் 4

காலங் கருதி இருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர் 5

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து 6

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர் 7

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காந் தலை 8

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல் 9

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து 10

## 49. காலத்தை அறிந்து கொள்ளல்

பகலிலே காக்கையானது தன்னினும் வலிய ஆந்தையை வெல்லும், அதுபோல பகைவரை வெல்லக் கருதும் மன்னர்கட்கு காலம் இன்றியமையாதது. 1

காலத்தோடு ஒத்த முயற்சி செய்தொழுகுதல், செல்வத்தை நீங்காமல் கட்டும் கயிறாகும். 2

செயல் செய்வதற்குரிய கருவிகளுடன் ஏற்ற காலத்தையும் அறிந்து செய்தால், செயற்கரிய செயல்கள் என்பன உண்டா? 3

காலமறிந்து இடமறிந்து இரண்டிற்கும் பொருந்த முயற்சி செய்தால், உலக முழுவதையும் பெற நினைத்தாலும் பெறக் கூடும். 4

உலக முழுவதையும் கைப்பற்றக் கருதும் மன்னன் ஏற்ற காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு, அது வருமளவும்மனந்தளராம லிருப்பர். 5

ஊக்கமுடையான் எதிரிமேல் செல்லாது ஒதுங்கி யிருத்தல், போர் செய்யும் ஆட்டுக்கடா தன் பகையாட்டை தாக்க பின் வாங்கும் தன்மையை ஒக்கும். 6

அறிவுடையோர் பகைவர் கெடுதி செய்தவுடனே வெளிப் படையாக வெகுளி கொள்ளாது, அவரை வெல்லும் காலத்தை எதிர்பார்த்து மனதில் சினங்கொண் டிருப்பர். 7

தாம் வெல்லுதற் கேற்ற காலம் வரும்வரை பகையரசரைக் கண்டால் பணிதல் வேண்டும். அப் பகைவருக்கு முடிவு காலம் வந்தால் அவர்கள் தலை கீழே விழும். 8

ஏற்ற காலம் வாய்த்த விடத்து, அப்போதே தாம் செய்வதற்குரிய செயல்களை செய்து முடிக்க வேண்டும். 9

வினைமேல் செல்லாது அடங்கி யிருக்கும் காலத்தில் கொக்கை போல் இருக்க வேண்டும். காலம் வாய்த்தபோது கொக்கு மீனைக்குத்துவது போல தவறாமல் முடிக்க வேண்டும். 10

## 50. இடனறிதல்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது 1

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவுந் தரும் 2

ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின் 3

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் 4

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 5

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து 6

அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின் 7

சிறுபடையான் செல்லிடஞ் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும் 8

சிறைநலனுஞ் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோ டொட்ட லரிது 9

காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு 10

## 50. செயல்களுக்கு ஏற்ற இடத்தை அறிதல்

பகைவரை வளைத்துச் சூழ்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்ட பின் அல்லாமல், யாதொரு செயலையும் தொடங்காதிருக்க வேண்டும்; அவரை இகழ்தலும் கூடாது. 1

மாறு கொள்ளவல்ல மிக்க வலிவுடையவர்களுக்கும் அரசனைச் சேர்ந்து ஆகின்ற ஆக்கம் பல பயன்களைத் தரும். 2

வலிவற்றவர்களும், எதிரிகளை வெல்லும் இடமறிந்து அங்கு தம்மைக் காத்துக்கொண்டு, பகைவர்களுக்கு எதிரிடையாக முயற்சி செய்தால் வலிவு பெற்று வெல்வர். 3

போர் செய்தற்கேற்ற இடத்தை அறிந்து அதனைப் பற்றிக் கொண்டவர்கள், அதனை விடாது வெற்றி பெற முயன்றால், வெல்லக் கருதிய பகைவர் அவ்வெண்ணத்தை இழப்பர். 4

முதலையானது ஆழமுள்ள நீரில் பிற உயிர்களை வெல்லும்; அது அந்நீரை விட்டு வெளிவருமாயின் அதனை மற்ற உயிர்கள் வெல்லும். 5

நிலத்திலோடும் வலிய சக்கரங்களை உடைய தேர் கடலில் ஓட முடியாது; கடலின்கண் ஓடும் கப்பல்களும் நிலத்தில் ஓட முடியாது. 6

செய்ய வேண்டியவைகளை யெல்லாம் தவறாமல் எண்ணி தக்க இடத்தில் செய்வாராயின் அச்செயலுக்கு மன உறுதியை தவிர வேறு துணை தேவையில்லை. 7

சிறு சேனை உடையவனது தக்க இடத்தில் பெருஞ் சேனை உடையவன் சென்றால், சிறு சேனையினால் பெருஞ் சேனையுடையோன் தன் பெருமையை இழப்பான். 8

அழிக்க முடியாத அரணும், பெருமையும் இல்லாதவராயினும், அவர்கள் உறைகின்ற இடத்தில் சென்று வெல்லுதல் அரிது. 9

பாகர்க்கு அடங்காதவையும், வேல் தைத்த முகத்தை உடையவையுமாகிய ஆண் யானைகளை, கால்கள் புதையும் சேற்று நிலத்தில் பட்டபோது, நரிகள் கொல்லும். 10

## 51. தெரிந்து தெளிதல்

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும் 1

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு 2

அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு 3

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் 4

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல் 5

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி 6

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும் 7

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும் 8

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள் 9

தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவுந்
தீரா இடும்பை தரும் 10

## 51. தெரிந்து ஒருவரிடம் நம்பிக்கை வைத்தல்

அறம், பொருள், இன்பம் தன்னுயிரின் பொருட்டு அச்சம் என்னும் நான்கு கூறுபாட்டையும் ஆராய்ந்த பிறகே ஒருவனை நம்ப வேண்டும். 1

நற்குடியில் பிறந்து, குற்றங்களில்லாதவனாய் பழிச்சொல் வரக் கூடாதென்று அஞ்சும் மான முடையவ னிடத்தே நம்பிக்கை வைத்தல் நல்லது. 2

அருமையான நூல்களைக் கற்று குற்றம் நீங்கினவர்களாய் இருப்பவரிடத்தும், ஆராய்ந்து நோக்கின் அறியாமை இல்லா திருத்தல் அருமையாகும். 3

ஒருவனுடைய குணங்களையும் ஆராய்ந்து, அவன் குற்றங்களையும் ஆராய்ந்து இவ்விரண்டிலும் மிக்கவற்றை தெரிந்து அவற்றை உடையவனாக அவனைக் கருத வேண்டும். 4

மக்களுடையும் பெருமைக்கும் மற்றை சிறுமைக்கும் அவரவர் செய்யுஞ் செய்கையே உரைகல்லாம். 5

சுற்றம் இல்லாதவரை நம்புதல் வேண்டாம். அவர்கள் உலகத்துடன் தொடர்பில்லாதவர் ஆகையால் பழிக்குப் பயப்பட மாட்டார்கள். 6

அறிய வேண்டியவற்றை அறியாதாரை நம்புதல், ஒருவனுக்கு எல்லா வகையான அறியாமையையும் தரும். 7

அடுத்தவனைப்பற்றி ஆராயாமல் நம்புகிறவனுடைய வழி முறையினும் முடிவில்லாத துன்பத்தைக் கொடுக்கும். 8

யாரையும் ஆராயாது நம்புதல் கூடாது. ஆராய்ந்த பின்னர் நம்பத்தக்கவைகளை சந்தேகப்படாமல் நம்ப வேண்டும். 9

ஒருவனை ஆராயாமல் நம்புவதும், ஆராய்ந்த பிறகு சந்தேக முறுதலும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். 10

## 52. தெரிந்துவினையாடல்

நன்மையுந் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும் 1

வாரிபெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை 2

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு 3

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர் 4

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. 5

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல் 6

இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் 7

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல் 8

வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு 9

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு 10

## தொழில்களை யறிந்து அவைகளிலே செல்லுதல்

ஒரு முயற்சியின் நன்மையையும், தீமையையும் ஆராய்ந்து நல்லதையே செய்யும் இயல்புடையவன், சிறந்த செயல்களுக்கு பயன் படுவான். 1

பொருள் வரும் வழிகளை விரிவுபடுத்தி, அதனால் பொருள் வளத்தை வளர்த்து, இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவன் தொழில் செய்ய வேண்டும். 2

அன்பு, அறியும் அறிவு, ஆராய்ந்து துணிதல், பேராசை யின்மை ஆகிய நான்கும், நிலையாக உள்ளவனிடம் தெளிவு வேண்டும். 3

எல்லா வகையாலும், ஆராய்ந்து தெளிந்த விடத்தும், செய்யும் செயலின் வகையினால் மனம் வேறுபடும் மக்கள் உலகில் பலராவர். 4

செய்யும் வழிகளை அறிந்து, அதனை செய்யும் போதுண்டாகும் இடையூறுகளைப் பொறுத்து செய்பவனை அல்லாமல், இவன் அன்புடையான் என்பது மட்டும் கருதி வேலை யேவுதல் கூடாது.

செய்பவனுடைய திறத்தை ஆராய்ந்து, செய்யப்படும் வேலையையும் ஆராய்ந்து, முடிவு பெறுங் காலத்தோடு பொருந்த வேலையேவுதல் வேண்டும். 6

இச்செயலை, இன்னவழியில், இத்தகையவன் முடிப்பான் என்று ஆராய்ந்து, அச்செயலை அவனிடம் விடல் வேண்டும். 7

ஒருவன் ஒரு வேலைக்கு தகுதியுடைய னென்று ஆராய்ந்து தெளிந்த பிறகு, அவனை அந்த வேலைக்கு உரிமை உடையவனாகச் செய்ய வேண்டும். 8

எப்போதும் தன் தொழிலின்கண் முயற்சியுடையவனது நட்பை, பாராட்டாது வேறுபாடாகக் கருதுபவனை விட்டு செல்வம் நீங்கும். 9

தொழில் செய்பவன், கோணாது கடமை செய்வானாயின், உலகமும் கோணாது; ஆதலால் மன்னவன் நாள் தோறும் அவன் நிலைமையை ஆராய வேண்டும். 10

## 53. சுற்றந்தழால்

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள 1

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும் 2

அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று 3

சுற்றத்தாற் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன் 4

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தான் சுற்றப் படும் 5

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத் தில் 6

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள 7

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர் 8

தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும் 9

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல் 10

## 53. உறவினரைப் பேணுதல்

ஒருவன் செல்வமிழந்து வறியவனான போதும் அவனுடைய பழைய நிலைமையைப் பாராட்டி உடன் வாழும் தன்மை சுற்றத்தாரிடத்தே காணப்படும். 1

அன்பு நீங்காத சுற்றத்தார் ஒருவனுக்கு அமைவாரானால் அஃது அவனுக்கு நீங்காத வளரும் பல செல்வங்களையும் கொடுக்கும். 2

உறவினரோடு மனங்கலந்து பழகாதவனுடைய வாழ்வு, குளப்பரப்பு கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போலாகும். 3

செல்வம் பெற்றதனால் அடைந்த பயனாவது, சுற்றத்தாரால் தான் சூழப்படும்படி அவர்களைத் தழுவி நடத்தலாம். 4

வேண்டுவன கொடுத்தலும், இன்சொல் சொல்லுதலும் செய்ய வல்லானாயின், அவன் தொடர்ந்து சுற்றத்தாரால் சூழப்படுவான். 5

மிகுந்த கொடையுடையவனாய் வெகுளியை விரும்பாதவனாயின், அவனைப் போல சுற்றமுடையார் உலகில் இல்லை. 6

காக்கையானது இரையைக் கண்டதும் மறைக்காது தம் இனத்தை அழைத்து உண்ணும்; அத்தகைய இயல்பினருக்கே சுற்றப் பெருக்கமும் உண்டாகும். 7

மன்னன் அனைவரையும் ஒரே தன்மையாக நோக்காது, தகுதிக் கேற்ப நோக்கிச் செய்வன செய்தால், அச் சிறப்பை நோக்கிச் சுற்றத்தார் அவனைச் சூழ்வர். 8

முன் சுற்றமாக இருந்து, பின் தம்மைப் பிரிந்தவர்கள் பிரிந்ததற்கு ஏற்பட்ட காரணத்தை ஒழித்துவிட்டால் மீண்டும் பழைமை பாராட்டி உறவாகச் சூழ்ந்திருப்பார். 9

காரணமின்றி தம்மிடமிருந்து பிரிந்து, பின் காரணத்தோடு வந்த உறவினனை அரசன் அவன் நோக்கத்தை நிறைவேற்றி ஆராய்ந்து தழுவிக் கொள்ள வேண்டும். 10

## 54. பொச்சாவாமை

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு 1

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு 2

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு 3

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு 4

முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும் 5

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில் 6

அரியவென் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின் 7

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யாது
இகழ்ந்தார்க் கெழுமையும் இல் 8

இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து 9

உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின் 10

## 54. மறதியின்மை

பெருங் களிப்பால் வரும் மறதியானது, அளவிறந்த கோபத்தைக் காட்டிலும் தீமையானது. 1

விடாமல் தொடரும் நிலைத்த வறுமையானது அறிவைக் கெடுத்தல் போல மறதியானது புகழைக் கெடுக்கும். 2

மறதி உடையவர்களுக்கு புகழ் இல்லை; அது உலகத்தி லுள்ள எத்தகைய நூற் கொள்கை யுடையார்க்கும் ஒப்ப முடிந்த முடிபு. 3

அச்சம் உடையவர்களுக்குப் புறக்காவல் இருந்தும் பயன் இல்லை. அதுபோல மறதிஉடையோர்க்கு செல்வங்கள் இருந்தும் பயன் இல்லை. 4

முன்னர் வரக்கூடிய துன்பங்களை வராமல் காக்க மறந் திருப்பவன், துன்பங்கள் வந்த பிறகு தன் தவறுதலை நினைத்து வருந்துவான். 5

மறவாம விருக்கும் தன்மை யாரிடத்தும், எப்போதும் தவறுமல் வாய்க்குமாயின், அதற்கு ஒப்பாகும் நன்மை வேறில்லை.

மறவாமை என்னும் கருவியால் எதனையும் பாதுகாத்துச் செய்தால், செய்வதற்கு அரியவை என்று கருதி செய்ய முடியாத காரியங்கள் இல்லை. 7

அறிஞர்கள் சிறந்த கடமைக ளென்று புகழ்ந்து கூறிய வற்றை கடைபிடித்துச் செய்தல் வேண்டும். இதனைச் செய்ய மறந்தவருக்கு என்றும் நன்மை யில்லை. 8

தாம் மகிழ்ச்சியால் இறுமாப்பு கொள்ளும்போது, முன்பு அம் மகிழ்ச்சியால் ஏற்பட்ட மறதியால் அழிந்த வரை நினைத்துப் பார்க்க வேண்டும். 9

தான் அடைய எண்ணியதை இடை விடாமல் நினைத்து முயல்வாளுயின், நினைத்ததை, அடைதல் எளிதாகும். 10

## 55. செங்கோன்மை

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை 1

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி 2

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் 3

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு 4

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு 5

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின் 6

இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் 7

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும் 8

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் 9

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் 10

## 55. நடுநிலையாக ஆளும் ஆட்சியின் தன்மை

செய்த குற்றத்தை ஆய்ந்து, எவரிடத்தும் இரக்கம் காட்டாது, நடுநிலை தவறாது, குற்றத்திற்கு தக்க தண்டனை விதிப்பதே ஒழுங்கான முறையாகும். 1

மழையை எதிர்பார்த்து உலகத்து உயிரெல்லாம் வாழும்; அதுபோல மன்னனின் செங்கோலை எதிர்பார்த்து மக்கள் வாழ்கின்றனர். 2

அறவோர் செய்த நூலில் கூறப்படும் அறத்திற்கு அடிப்படையான துணையாய் நிற்பது மன்னனின் செங்கோல். 3

மக்களை ஆதரவுடன் தழுவி செங்கோல் செலுத்தும் பெருநில வேந்தன் அடியை உலகத்தார் தழுவி நிற்பர். 4

அறவியல்புக்கு மாறாமல் செங்கோல் செலுத்தும் மன்னனது நாட்டில் பருவ மழையும், குறையாத விளைவும் ஒருசேர உண்டாகும். 5

மன்னவனுக்கு வெற்றியை அளிப்பது அவன் கைவேலல்ல; செங்கோலே யாகும். ஆனால் அச் செங்கோல் கோணாது செம்மையாக இருக்க வேண்டும். 6

மன்னவன் உலகைக் காப்பான்; அவன் முறை தவறாமல் செங்கோல் செலுத்துவானானால் அம்முறையே அவனைக் காக்கும்.

முறையிட வந்தவர்களின் காட்சிக் கெளியனாய், அவர்கள் கூறியதை ஆராய்ந்து நீதிமுறை செய்யாத மன்னன், தாழ்ந்த நிலையில் தானே கெடுவான். 8

மக்களை எவரும் வருத்தாமல் பார்த்து, தானும் வருத்தாமல் காத்து, குற்றம் செய்தால் தண்டித்து அக் குற்றத்தை ஒழித்தல் அரசனுக்குக் குற்றமாகாது. அஃதவன் தொழில். 9

மன்னன் சில கொடியவர்களை கொலைத் தண்டனையால் தண்டித்து மற்றவர்களைக் காத்தல், உழவன் பயிரைக் காப்பாற்றக் களையை பிடுங்கி யெறிவதோ டொக்கும். 10

## 56. கொடுங்கோன்மை

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து 1

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றான் இரவு 2

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும் 3

கூழுங் குடியும் ஒருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு 4

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை 5

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னுவா மன்னர்க் கொளி 6

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு 7

இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின் 8

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் 9

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின் 10

## 56. நடுநிலையின்றி ஆளும் ஆட்சியின் தன்மை

குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு அறமல்லாத வற்றை செய்து நடக்கும் வேந்தன், கொலைத் தொழிலை மேற் கொண்டொழுகுவாரினும் கொடியன். 1

அரசன் குடிமக்களிடம் பொருள் கேட்டல், தனிவழியிலே வேல் வைத்துக் கொண்டு நின்ற கள்வன், வழி செல்வோனை 'பொருளைக் கொடு' என்று கேட்பது போலாகும். 2

நாட்டில் நாள்தோறும் உண்டாகும் நன்மை தீமைகளை ஆராய்ந்து முறை செய்யாத மன்னன் நாளுக்கு நாள் தன் நாட்டை இழப்பான். 3

பின் விளைவறியாமல், முறை தவறி ஆளும் மன்னன் பொருளையும், குடிகளையும் ஒருசேர இழந்து விடுவான். 4

மக்கள் துன்புற்று அதனைப் பொறுக்க முடியாமல் அழுத கண்ணீரல்லவா கொடுங்கோல் மன்னனது செல்வத்தைக் குறைக் கும் ஆயுதம்? 5

செங்கோன்மையினுல்தான் மன்னருக்கு புகழ்நிலை பெறு கின்றது. அந்தச்செங்கோன்மை இல்லையெனில் பிறநலத்தால்வரும் புகழ் நிலை பெருது. 6

உலகத்திற்கு மழை யில்லாமை எத்தகைய துன்பத்தைத் தருமோ, அவ்வாறே அரசன் கீழ் வாழும் குடிகளுக்கு அவன் இரக்கமற்றத் தன்மை துன்பம் தரும். 7

முறை தவறிய மன்னனின் கொடுங்கோலின் கீழ் வாழ்ந் தால், ஏழ்மையைக் காட்டிலும் செல்வமுடைமை துன்பந் தருவ தாகும். 8

மன்னன் நெறிதவறி ஆண்டால், பருவமழை தவறி வேண் டும்போது மேகம் மழை பொழியாது. 9

நாடாளும் மன்னன் மக்களை முறையுடன் காவாக்கால், மக் கள் முயற்சியால் ஆகும் பயன் குறையும், அறியும் தொழிலுடைய கலைஞர் நூல்களைக் கற்க மறப்பர். 10

## 57. வெருவந்தசெய்யாமை

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து. 1

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 2

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 3

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். 4

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. 5

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். 6

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். 7

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு. 8

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 9

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. 10

## 57. அஞ்சத்தக்க செயல்களைச் செய்யாமை

ஒருவன் செய்த குற்றத்தைத் தக்க முறையாலாராய்ந்து, மறுபடியும் குற்றம் புரியாதபடி, குற்றத்திற் கேற்றவாறு தண்டிப்பதே மன்னன் கடமை. 1

நீண்டகாலம் தம்மிடம் ஆக்கம் நிலைபெறுதலை விரும்புவோர், குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது தொடக்கத்தில் கடுமையாகக் காட்டி அளவு கடவாமல் செய்ய வேண்டும். 2

குடிகள் அஞ்சுஞ் செயல்களை செய்து அரசாளும் கொடுங்கோலனால் அவன் நிச்சயமாக விரைவில் கெட்டொழிவான். 3

குடிமக்கள் தம் மன்னவனை 'கொடியன்' என்று கூறும் பழிச் சொற்குக் காரணமான மன்னவன் வாழ்நாள் குறைந்து விரைவில் கெடுவான். 4

தன்னைக் குறையிரப்போர் எளிதில் காண இடம் தராமலும், கண்டாலும் கடுமையான முகத்தை யுடையவனாய் இருப்பதானது பயந்தரும் பொருளைக் கண்டு பயப்படுவது போன்றது. 5

கடுமையான சொற்களை உடையவனாய் இரக்கமற்றவனாய் உள்ள மன்னன் செல்வம் நீடிக்காமல் அப்போதே கெடும். 6

கடுஞ்சொல்லும், மிக்க தண்டனையும் பகைவரை வெல்லும் வேந்தன் வலிமையைக் குறைக்கும் அரமாகும். 7

மன்னன் அமைச்சர்குழு முதலானவரிடம் கலந்து ஆராயாது சினத்தின் வழி சென்று அவர்களைக் கோபித்தால் அவருடைய செல்வம் குறையும். 8

யுத்தம் ஏற்படுவதற்கு முன்னரே அரண்களைச் செய்துகொள்ளாத மன்னன், போர் வந்தவுடன் பாதுகாப்பின்மையால் பயந்து விரைவில் கெடுவான். 9

கொடுங்கோல் மன்னன் மூடர்களை தனக்குத் துணையாக்கிக் கொள்வான். அவர்கள் கூட்டம் புவிக்கு சுமையே அன்றி வேறல்ல. 10

## 58. கண்ணோட்டம்

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு. 1

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 2

பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண். 3

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினான்
கண்ணோட்ட மில்லாத கண். 4

கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும். 5

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். 6

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையு மில். 7

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு. 8

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 9

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 10

## 58. வேண்டியவர் சொல்லை மறுக்க முடியாமை

கண்ணோட்டம் என்று சொல்லப் படும் மிகச் சிறந்த அழகு இருப்பதால்தான், இவ்வுலகம் நிலைபெற் றிருக்கிறது. 1

உலக நடைமுறைக் கண்ணோட்டத்தினால் நடை பெறு கிறது. அந்தக் கண்ணோட்டம் இல்லாதவர்கள் இருப்பது புவிக்குப் பாரமே யாகும். 2

இசையானது பாட்டோடு பொருந்த வில்லையானால் இசை யினால் என்ன பயன்? அதுபோல கண்ணுக்கு கண்ணோட்டம் இல்லையானால் என்ன பயன்? 3

தேவையான அளவு கண்ணோட்டம் இல்லாத கண் முகத் தில் இருப்பது போலத் தோன்றுவதைத் தவிர வேறு என்ன நன் மையைத் தரும். 4

கண்ணிற்கு இயற்கையாக உள்ள ஆபரணம் கண்ணோட் டம். அந்தக் கண்ணோட்டம் இல்லையெனில் கண், புண் என்று கருதப் படும். 5

இரக்கத்தோடு காணும் கண்ணையுடையவரா யிருந்தும், கண்ணோட்டம் மில்லாதவர் மண்ணோடு பொருந்தி யிருக்கும் மரத்திற்கு ஒப்பாவர். 6

கண்ணோட்ட மற்றவர்கள் கண்ணில்லாதவர்க ளாவர்; கண்ணுடையவர்கள் கண்ணோட்ட மில்லா திருத்தல் இல்லை. 7

காரியத்தில் கெடுதி யில்லாமல் கண்ணோட்டம் செய்ய வல்லார்க்கு இவ்வுலகம் உரிமை உடையதாகும். 8

தண்டனை தருவதற்குரியவர்க ளிடத்தும், கண்ணோட்டம் செய்து அவர் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பே தலையானது. 9

எல்லோராலும் விரும்பத் தக்க கண்ணோட்டத்தை விரும்பு கின்ற நாகரிகம் உடையவர்கள், பழகியவர்கள் விஷத்தைத் தந்தா லும் குடித்து பின்னும் அவரோடு கலந்திருப்பர். 10

## 59. ஒற்றாடல்

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். 1

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில். 2

ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். 3

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதார் என்றாங்
கனைவரையும் ஆராய்வ தொற்று. 4

கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே யொற்று. 5

துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து
என்செயினுஞ் சோர்வில தொற்று. 6

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பா டில்லதே யொற்று. 7

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். 8

ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும். 9

சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தா னாகும் மறை. 10

## 59. மறைவாக இருந்தறிந்து கூறுபவர்

ஒற்றரும், சிறந்த அரசியல் அறநூலும் ஆகிய இரண்டும், தனக்கு இரு கண்கள் என்று மன்னன் தெரிய வேண்டும். 1

ஒற்றர் மூலம், எல்லாரிடமும் நிகழ்கின்ற எல்லாவற்றையும் எப்போதும் மிக்க விரைவில் அறிதல் மன்னனுக் குரிய தொழிலாகும். 2

எல்லா நிகழ்ச்சிகளையும் மறைமுகமாக ஒற்றர் மூலம் அறிந்து அதன் பயனை ஆராயாத மன்னன், வெற்றி பெற வேறு வழி எதுவு மில்லை. 3

காரியம் செய்வோர், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப் படும் அனைவரையும் ஆராய்வதே ஒற்றனின் வேலை யாகும். 4

எவரும் சந்தேகம் கொள்ளாத உருவுடன், எவர் கண் நோக்குக்கும் பயங்கொள்ளாது, மன்னனைத் தவிர பிறருக்கு மனதிலுள்ளதை வெளிப்படுத்தாம லிருக்க வல்லவனே ஒற்றனாவான். 5

தவக்கோலம் பூண்டு புகமுடியாத இடங்களுக்குச் சென்று, எல்லாம் ஆராய்ந்து, எதனாலும் சோர்வடையாது தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான். 6

மறைவாகச் செய்தவைகளை வேண்டியவர் மூலம் கேட்டறிய வல்லவனாய், அறிந்தவைகளை சந்தேக மின்றி முடிவு கட்டுபவனாய் உள்ளவனே ஒற்றனாவான். 7

ஓர் ஒற்றன் மறைவாக அறிந்து வந்து வெளியிட்ட செய்தியை, வேறோர் ஒற்றன் மூலம் அறிந்து வரச் செய்து ஒப்பிட்டுப் பார்க்க வேணடும். 8

ர் ஒற்றனை வேறோர் ஒற்றன் அறிந்து கொள்ளாதபடி பார்த்துக் கொள்வதுடன் செய்தியை அறிந்து வர சென்ற மூன்று ஒற்றர்களும் கூறுவது ஒத்திருந்தால் மெய்யென்றுதெளியலாம். 9

பிறர் அறியும் வண்ணம் ஒற்றனுக்குச் சிறப்புகள் செய்யக் கூடாது. செய்தால் மறைக்க வேண்டிய இரகசியத்தை மன்னனே வெளிப்படுத்தியவனாவான். 10

## 60 ஊக்கமுடைமை

உடையரெனப்படுவது ஊக்கம்அஃ தில்லார்
உடைய துடையரோ மற்று. 1

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 2

ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார். 3

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையான் உழை. 4

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. 5

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. 6

சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு. 7

உள்ள மிலாதவர் எய்தார் உலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. 8

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 9

உரமொருவற் குள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. 10

## 60. மனந்தளர்வின்றிக் கிளர்ச்சி யுறுதல்

ஒருவரை உடையர் என்று சிறப்பித்துச் சொல்லப் படுவது ஊக்கமே யாகும். அஃதில்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் உடையவர் ஆவரோ? ஆகார். 1

ஒருவனுக்கு நிலையான செல்வம் ஊக்கமுடைமையே யாகும், பொருளுடைமை நிலையாது ஒரு காலத்தில் நீங்கி விடும். 2

உறுதியான ஊக்கத்தைக் கைப் பொருளாக உடையவர்கள், தங்கள் செல்வத்தை இழந்தபோதும், இழந்தோமே என்று வருந்தார். 3

தளராத ஊக்கம் உடையவர்களிடம், செல்வமானது தானே வழிகேட்டு கொண்டு சென்று அடையும். 4

நீர்ப் பூவினது நீளம் நீரினது ஆழத்தின் அளவின தாகும். அதுபோல மக்களின் உயர்வும் ஊக்கத்தின் அளவின தாகும். 5

கருதுவன வெல்லாம் உயர்வானவைகளையே கருத வேண்டும். அவ் வுயர்வு கைகூடாவிடினும், எண்ணுதலைக் கைவிடல் கூடாது. 6

அம்புகளால் புண்பட்ட போதும் தன் பெருமையை நிலை நிறுத்தும் யானை; அதுபோல தன் உயர்வுக்கு அழிவு வந்தாலும் கலங்காமல் தம் பெருமையை நிலைநிறுத்துவர் ஊக்க முடையவர்.

ஊக்க மற்றவர்கள் உலகத்திலே தாங்கள் இவ்வுலகில் வன்மை யுடையோம் என்னும் மதிப்பை அடைய மாட்டார்கள்.

யானைக்குப் பருத்த உடலும், கூர்மையான கொம்பும் இருந்தாலும், புலி தன்மீது பாய்ந்தால் மனந்தளர்ந்து அஞ்சும். 9

ஒருவனுக்குச் சிறந்த வலிவானது ஊக்கமாகிய செல்வமே; ஊக்க மற்றவர்கள் மரமாவர்; உருவத்தால் மக்களாய் இருப்பதே வேறு பாடாகும். 10

## 61. மடியின்மை

குடியென்னுங் குன்று விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். 1

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். 2

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினும் முந்து. 3

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு. 4

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 5

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பய னெய்தல் அரிது. 6

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர். 7

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும். 8

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். 9

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. 10

## 61. சோம்பற்குண மில்லாமை

ஒருவன் தோன்றிய குடியாகிய அணையா விளக்கு, அவனது சோம்பல் என்னும் மாசு அதிகமாக, ஆக மங்கி அணைந்து விடும். 1

தாம் தோன்றிய குடியை மேலும் உயர்த்தி நற்குடியாக்க விழைவோர் சோம்பலைக் கடிந்து முயற்சியுடையவ ராதல் வேண்டும். 2

தள்ள வேண்டிய சோம்பலைத் தன்னுள்ளே கொண்டிருக்கும் அறிவில்லாதவன் தோன்றிய குடி அவனுக்கு முன்பே அழியும். 3

சோம்பலில் ஆழ்ந்து விட்டுச் சிறந்த முயற்சிகளில் ஈடுபடாதவருடைய குடி கெட்டு, குற்றமும் அதிகரித்துப் பட்டுப் போகும். 4

சோம்பல், தாமதித்து செய்தல், மறதி, தூக்கம் ஆகிய நான்கும் அழியும் இயல்புடையார் விரும்பி ஏறும் கப்பலாகும். 5

நாடாளும் மன்னனுடைய உறவு இயற்கையாகக் கிடைத்தாலும், சோம்பலுடையவர்கள், அதனால் எவ்விதச் சிறந்த பயனையும் அடைவ தில்லை. 6

சோம்பலை விரும்பி நல்ல முயற்சியைக் கைவிடுபவர்கள், மிக்க கடுமையாகப் பிறர் இழித்துக் கூறும் சொல்லைக் கேட்கும் நிலையை அடைவர். 7

நற்குடியில் தோன்றியவனிடம் சோம்பல் வந்து சேர்ந்தால் அப்போது அவனை அவன் பகைவர்களுக்கு அடிமைப் படுத்தி விடும். 8

ஒருவன் தன்பாலுள்ள சோம்பலை ஒழித்து விட்டால் அவன் தனது குடும்பத்தை நடத்துவதில் ஏற்பட்ட குற்றங்கள் பலவும் நீங்கும். 9

சோம்ப லில்லாத மன்னன், தான் முன்பு சோம்ப லடைந்ததால் தன்னை விட்டு நீங்கிய செல்வத்தை யெல்லாம் ஒருங்கே அடைவான். 10

## 62. ஆள்வினையுடைமை

அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் 1

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு 2

தாளாண்மை யென்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு 3

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும் 4

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன் றுந் தூண் 5

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் 6

மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள் 7

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி 8

தெய்வத்தா னாகா து எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் 9

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர் 10

## 62. விடாமுயற்சி யுடைமை

இச் செயல் நம்மால் செய்ய முடியா தென்று மனத் தளர்ச்சி அடையா திருக்க வேண்டும். இடைவிடாத முயற்சி அச் செயலை செய்வதற் கேற்ற வலிமையைத் தரும். 1

ஒரு காரியத்தை செய்து முடிக்காது அரை குறையாக விட்டாரை உலகம் விட்டுவிடும். ஆதலால் செய்யும் காரியத்திலே முயற்சி குறை ஏற்படாதவாறு செய்து முடிக்க வேண்டும். 2

எல்லோருக்கும் உதவிபுரிதல் என்னும் மேம்பாடு முயற்சி என்னும் உயர்ந்த தன்மையினாலே நிலைத்திருக்கின்றது. 3

படை கண்டஞ்சும் பேடியின் கையில் உள்ள வாள் ஆண்மையற் றிருப்பது போல, முயற்சி யற்றவனது உதவி செய்யும் தன்மை பயனற்றதாய் முடியும். 4

தன் இன்பத்தை விரும்பாதவனாகி, எடுத்த காரியத் தையே முடிக்க விரும்புகின்றவன் தன் உறவினரின் துன்பத்தை நீக்கி அதனைத் தாங்கும் தூண் ஆவான். 5

முயற்சியானது ஒருவனுக்கு செல்வத்தை வளர்க்கும். முயற்சி யில்லாமை அவனுக்கு வறுமையை உண்டாக்கி விடும். 6

கரு நிறமுடைய மூதேவி ஒருவனுடைய சோம்பலில் வீற் றிருப்பாள்; திருமகள் சோம்ப லில்லாதவனுடைய முயற்சியின் கண்ணே வீற்றிருப்பாள் என்று கூறுவர். 7

செல்வ மில்லா திருப்பது எவருக்கும் குற்ற மாகாது; அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி யில்லாம லிருந்தலே குற்ற மாகும். 8

செய்த முயற்சி கருதியபடி பெரும் பயனைக் கொடுக்கா விட்டாலும், உடம்பு வருந்திய வருத்தத்தின் அளவு கூலி தரும். வீண் போகாது. 9

தளர்ச்சி இல்லாமல் முயற்சியில் குறைவில்லாமல் முயல் கின்றவர், ஊழையும் புறங்காட்டி ஓடச் செய்வர். 10

## 63. இடுக்கணழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில் 1

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும் 2

இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர் 3

மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து 4

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும் 5

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர் 6

இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல் 7

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்ப முறுதல் இலன் 8

இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துள்
துன்ப முறுதல் இலன் 9

இன்னாமை இன்ப மெனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு 10

# 63. இடையூறால் மனங்கலங்காமை

இடையூறு உண்டாகும்போது அதற்காக மனங்கலங்காமல் மகிழ வேண்டும். துன்பத்தைக் கடப்பதற்கு மகிழ்ச்சியை போல வேறு கருவி கிடையாது. 1

வெள்ளமென பெருகி வருகின்ற துன்பமானது அறிவுடையார் நெஞ்சில் அதனை நீக்க நினைத்த அளவிலே கெட்டொழியும். 2

இடையூறு வந்தபோது அதற்காக வருந்தாதவர்கள் துன்பத்திற்கு துன்பத்தை உண்டாக்கி அதனை விரட்டி விடுவர். 3

தடை உண்டான இடங்களி லெல்லாம் தன் பலத்தால் தளர்வின்றி வண்டியை இழுத்துச் செல்லும் எருதுபோல் விடா முயற்சி உடையானை அடைந்த துன்பம் துன்பப் படும். 4

இடை விடாது மேலும் மேலும் துன்பங்கள் வந்தாலும் தன் முயற்சியை விடாதவனுக்கு ஏற்பட்ட துன்பங்கள் துன்பப் பட்டுப் போகும். 5

பொருள் வந்து சேர்ந்தபோது 'செல்வம் அடைந்தோம்' என்று போற்றி காத்தறியாதவர், வறுமை வந்தகாலத்தில் 'பொருள் போயிற்றே' என்று துன்பப் படுவர்களோ? 6

உடலானது துன்பத்திற்கு இலக்கானது என்று அறிந்து, துன்பத்தை துன்பம் என்று கருதி அதனைப் பொருட்படுத்த மாட்டார்கள் மேலோர். 7

இன்பம் உண்டானபோது அதனை விரும்பாது, துன்பம் தான் இயல்பாக உண்டாகும் என்று அறிபவன் என்றும் துன்பத்தை அடைய மாட்டான். 8

இன்பம் நேர்ந்தபோது அந்த இன்பத்தை விரும்பாதவன், துன்பம் நேர்ந்தபோதும் அத் துன்பத்தால் துன்பம் அடைய மாட்டான். 9

துன்பமே நமக்கு இன்பம் என்று ஒருவன் கருதிக் கொள்வானேயானால், அவனுடைய எதிரிகளும் விரும்பிப் போற்றும் சிறப்பினை அடைவான். 10

## 64. அமைச்சு

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு 1

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு 2

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு 3

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு 4

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை 5

மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை 6

செயற்கை யறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை யறிந்து செயல் 7

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் 8

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும் 9

முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர் 10

## 64. மந்திரியின் குணஞ் செயல்கள்

ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டிய கருவிகளை யும், ஏற்ற காலத்தையும், அதன் இயல்பையும் அறிந்து செய் வதை முறையாக சிந்தித்துச் செய்ய வல்லவனே அமைச்சன். 1

திடமும், குடிகளைக் காத்தலும், அறநூல்களைக் கற்றறித லும், விடாமுயற்சியும், ஐம்பொறித் தூய்மையும் திருத்தமாக உடையவனே அமைச்சன். 2

பகைவருக்கு துணையாயினோரை அவரிடமிருந்து பிரித்த லும், தம்மவரை பிரிந்து போகாமல் காத்தலும், பிரிந்து சென்ற வர்களை சேர்த்துக் கொள்ளுதலும் செய்ய வல்லவனே அமைச்சன். 3

எதனையும் ஆராய்ந்து அறிதலும், ஆராய்ந்து செய்தலும் சந்தேகமில்லாமல் துணிந்து சொல்லுதலும் வல்லவனே அமைச்ச னுவான். 4

நீதி நெறியைத் தெரிந்து, பொருள் நிறைந்த சொல்லை யுடையவனாய் எப்போதும் செயலாற்றும் வழிகளை நன்கறிந்த வனாய் இருப்பவனே அரசனுக்கு சிறந்த துணைவன். 5

இயற்கையான நுண்ணறிவும், அதனோடு செயற்கையான நூலறிவும் உடையவர்கள் முன்னர், எந்த நுட்பமான சூழ்ச்சிகள் தான் எதிர் நிற்க முடியும்? 6

நூல் வழியாக காரியஞ் செய்யும் முறைகளை அறிந்திருந்தா லும், அதனை செய்யும் காலத்திலுள்ள உலக நிலையை அறிந்து அதற்குப் பொருந்த செய்ய வேண்டும். 7

அறிந்து சொல்வாரின் அறிவையும் ஏற்றுக் கொள்ளாமல் தானும் அறிவில்லாதவனாக இருந்தாலும், மன்னனுக்கு உறுதி மொழிகளை எடுத்துக் கூறுதல் அமைச்சனின் கடமையாகும். 8

மன்னனுக்குத் தீங்கு விளைவிக்க எண்ணும் அமைச்சன் ஒருவனை காட்டிலும், எழுபது கோடி பகைவர் ஏற்படுதல் பொறுத்துக் கொள்ளத் தக்கது. 9

எடுத்த காரியத்தை முடிக்கும் திறமையற்றவர்கள் முன் னரே செய்யும் முறையை எண்ணி வைத்துக்கொண் டிருந்தாலும், செய்யும்போது முற்றுபெறு வண்ணமே அவற்றைச் செய்வர். 10

## 65. சொல்வன்மை

நாநலமென்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று 1

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு 2

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல் 3

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில் 4

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து 5

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள் 6

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது 7

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் 8

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர் 9

இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார் 10

## 65. திறம்பட சொல்லும் ஆற்றல்

நாவன்மை என்னும் சிறப்பு ஒருவனுக்கு செல்வமாகும்; அந்தச் சிறப்பு மற்றெந்த சிறப்புகளுள்ளும் அடங்காது. அஃதெல்லாவற்றினும் மிக்கதாகும். 1

வாழ்வும் தாழ்வும் சொல்லும் சொல்லினுல் ஏற்படக்கூடியதாதலின், சொல்லில் சோர்வும், தவறும் உண்டாகா வண்ணம் காக்க வேண்டும். 2

கேட்பவரது உள்ளத்தை கவருந் தன்மை யுடையதாய்ப் பகைவரும் அந்தச் சொல்லின் நயத்தை விரும்பும் வண்ணமும் சொல்லப் படுவதே 'சொல்' எனப்படும். 3

கேட்பவரின் உள்ளப் பான்மையை நன்கறிந்து சொல்லக் கருதுவதை சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லப்படும் சொல்லிற்கு மேம்பட்ட அறமும், பொருளு மில்லை. 4

தாம் சொல்லக் கருதிய சொல்லை வெல்லக் கூடிய மற்றொரு சொல் இல்லை என்பதை நன்கறிந்த பிறகே அச் சொல்லை சொல்லுதல் வேண்டும். 5

தாம் சொல்லும்போது பிறர் விரும்பும்படி சொல்லி, பிறர் சொல்லும்போது அந்தச் சொல்லின் பயனை தாம் அறிந்து கொள்ளுதல் சிறந்த குணமுடைய குற்றமற்றவர்களின் கடமை. 6

தான் எண்ணியதை பிறருக்கு சொல்லுந் திறமை யுடையவனுய், சொற்றளர்ச்சி இல்லாதவனுய் இருப்பவனை சொல்லால் வெல்லுவது என்பது எவராலும் முடியாது 7

சொல்லும் கருத்துக்களை ஒழுங்காகத் கோத்து இனிமையாக பேசும் ஆற்றலுடைய வரைப் பெற்ருல், உலகம் விரைந்து அவர் ஏவலை கேட்டு நடக்கும். 8

குற்றமற்றவையாகச் சில சொற்களைத் தெளிவாக விளக்கிச் சொல்ல அறியாதவர்கள், பல சொற்களை சொல்லிக்கொண்டிருக்கவே விரும்புவர். 9

தாம் கற்றவைகளை பிறர் அறிய விளக்கமாகச் சொல்லத் தெரியாதவர்கள், மலர் கொத்திலே இருந்தும் மலர்ந்து மணம் வீசாத பூவைப் போல்வார். 10

## 66. வினைத்தூய்மை

துணை நலம் ஆக்கந் தரூஉம் வினை நலம்
வேண்டிய எல்லாந் தரும் 1

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை 2

ஓஓதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை
ஆஅதும் என்னு மவர் 3

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 4

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று 5

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை 6

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை 7

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும் 8

அழக்கொண்ட வெல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை 9

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள் நீர் பெய்திரீ இயற்று 10

## 66. நற்செயல்கள் செய்தல்

ஒருவனுக்குத் துணைவர்களால் ஆகும் நன்மை செல்வத்தை மட்டும் தரும்; செய்யும் வேலையின் செம்மையானது விரும்பிய யாவற்றையுங் கொடுக்கும். 1

புகழ் தராத, நன்மை பயக்காத காரியங்களை எந்தக் காலத்திலும் ஒருவன் செய்யாமல் நீக்குதல் வேண்டும். 2

மேலோங்கி உயர வேண்டும் என்று எண்ணுபவர் தங்களது மதிப்பைக் கெடுக்கும் செயல்களைச் செய்யாதிருக்க வேண்டும். 3

கலங்காத தெளிந்த அறிவுடையோர் தாம் துன்பத்தில் அகப்பட்டுக் கொண்டாலும், அத் துன்பத்தைத் தீர்ப்பதற்கு இழிவான செயல்களைச் செய்ய மாட்டார். 4

'என்ன தவறு புரிந்து விட்டோம்' என்று தானே நினைத்து வருந்தக் கூடிய செயல்களை செய்யக் கூடாது. ஒருகால் தவறி செய்து விட்டாலும் பின்னும் அதனை செய்யக்கூடாது. 5

தன்னைப் பெற்றத் தாய்பசி நோயினால் துன்புற்றாலும், நல்லோர்கள் பழிக்கும் செயல்களை அப்பசி நீங்கும் பொருட்டு செய்தல் கூடாது. 6

தீய செயல்களைச் செய்து அதனால் நேர்ந்த பழியை மேற்கொண்டு பெற்ற செல்வத்தை விட, பழியை மேற்கொள்ளாத சான்றோரது மிக்க வறுமையே மேலான தாகும். 7

நல்லவர்கள் செய்யத் தகாதவைகள் என்று விலக்கிய செயல்களை, இகழ்ந்து ஒதுக்காமல் முயன்றவர்களுக்கு, அவை கை கூடினாலும் துன்பத்தையே தரும். 8

பிறர் அழும்படி துன்புறுத்தி கைப்பற்றிய பொருளெல்லாம், அவனும் அழுது துன்புறும் படியே அவனை விட்டு நீங்கும் நன்னெறியில் வந்த பொருள் இழப்பினும் பின் வந்தடையும். 9

தீய செயல்களால் பொருள் சேர்த்து காப்பாற்றுதல், பச்சை மண்ணாலான கலத்தினுள் தண்ணீரை ஊற்றி அதனைக் காப்பாற்றுவது போலாம்! 10

## 67. வினைத்திட்பம்

வினைத்திட்ப மென்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள் 2

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும் 3

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல் 4

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும் 5

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் 6

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னா ருடைத்து 7

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல் 8

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை 9

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு 10

## 67. செயல் முடிப்பதற்கான மன உறுதி

எடுத்துக் கொண்டச் செயலைத் தவறாமல் முடிப்பதற்குரிய வன்மை என்பது மனவன்மையே யாகும். மற்ற வன்மை யெல்லாம் வன்மை என்று சொல்லத்தக்க தன்று. 1

ஆராய்ந்தறிந்த அறிவுடையோர் கொள்கையாவது, இடையூறு வருவதற்கு முன்பே நீக்கிக் கொள்ளுதலும், மீறி வந்தால் மனந்தளராமையும் ஆகிய இரண்டின் வழியாக உள்ளது என்பர்.

செய்வதை முடிவில் வெளிப்படும்படி அதனை மறைத்து செய்தலே திறமை யாகும். அஃதிடையிலே வெளிப்பட்டால் அது தீராத துன்பத்தைத் தரக் கூடும். 3

இவ்விதம் இந்தக் காரியத்தை முடிக்கலாம் என்று கூறுதல் எல்லோர்க்கும் எளிது. கூறிய வண்ணமே காரியத்தைச் செய்து முடித்தல் அருமையாம். 4

எண்ணத்தால் சிறந்து மனஉறுதி உடையவர்களின் தொழில் வலிமையானது, மன்னன் மனதிற்கு உவப்பு தந்து மதிக்கப் பட்டு விளங்கும். 5

ஒரு காரியத்தைச் செய்து முடிக்க எண்ணியவர் தாம்எண்ணிய எண்ணத்தில் திண்ணிய உறுதி யுடையராவா ரெனின் நினைத்தவற்றை நினைந்தபடியே அடைவர். 6

உருளுகின்ற தேருக்கு அமைந்த சிறிய அச்சாணியைப் போல திண்மை உடையவர்களை உலகம் பெற்றிருக்கிறது. அவர்கள் உருவில் சிறியவரா யிருப்பினும் இகழக் கூடாது. 7

மனக் கலக்கமற்று தெளிந்து செய்யத் துணிந்த தொழிலினிடத்து சோர்வில்லாமல் காலம் கடத்தாமல் விரைந்து செய்ய வேண்டும். 8

இறுதியில் இன்பம் பயக்கும் நன் முயற்சியை செய்யும் போது இடையில் இடையூறுகள் அதிகமாக வந்தாலும் துணிவு கொண்டு அதனைச் செய்து முடிக்க வேண்டும். 9

மற்றெந்த உறுதி உடையவரா யிருந்தாலும் செய்யும் காரியத்தில் உறுதி இல்லாதவரை உலகம் மதியாது; ஏற்றுக் கொள்ளாது. 10

## 68. வினைசெயல்வகை

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது 1

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை 2

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல் 3

வினைபகை யென்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும் 4

பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் 5

முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல் 6

செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவா னுள்ளங் கொளல் 7

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று 8

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல் 9

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து 10

## 68. செயல்களைச் செய்யுந் திறம்

ஆராய்ச்சியின் முடிவு தெளிவான உறுதியைப் பெறுவதாகும், அவ்வாறு உறுதி பெற்ற பின் காரிய மாற்றுமல் காலங் கடத்துவது குற்றமாகும். 1

நீட்டித்துச் செய்ய வேண்டியவற்றை நீட்டித்துச் செய்ய வேண்டும். விரைவில் செய்ய வேண்டியவைகளை சுணங்காமல் செய்ய வேண்டும். 2

முடியும் இடத்திலெல்லாம் நலம் பயக்கும் செயலை செய்து முடித்தல் நல்லது; முடியாத இடங்களில் அது முடியும் இடம் பார்த்துச் செய்ய வேண்டும். 3

எடுத்துக் கொண்ட முயற்சி, களையத் தொடங்கிய பகை என்ற இரண்டின் மிச்சம் ஆராய்ந்து பார்த்தால் முற்றிலும் அணையாத தீ போல கெடுதி விளைக்கும் தன்மையன. 4

ஒரு காரியத்தில் ஈடுபடும்போது, வேண்டிய பொருள், துணைக் கருவி, ஏற்ற காலம், செய்கையின் தன்மை, செய்யுமிடம் ஆகிய ஐந்தையும் சந்தேக மற ஆராய்ந்து செய்ய வேண்டும். 5

காரியஞ் செய்யத் தொடங்குங்கால், அது முடிவதற்கு வேண்டிய முயற்சியும், முயலும்போது வரும் இடையூறும் முடிந்த பின்னர் எய்தும் பயனும் எண்ணிப் பார்த்துச் செய்க.

செய்வதொன்றைச் செய்ய முயல்பவன் அதனைச் செய்யும் முறை எதுவெனில், செய்து கை தேர்ந்தவன் பழக்கத்தை தானறிந்து அதன்படி அதனைச் செய்வ தாகும். 7

செய்கின்ற தொழிலிலே மற்றோர் செயலையும் முடித்துக் கொள்ளுதல் மதத்தால் நனைந்த கன்னத்தையுடைய ஒரு யானையிலே மற்றொரு யானையைக் கட்டியதுபோலாகும். 8

நண்பருக்கு நன்மை செய்வதைக் காட்டிலும், பகைவர்களுக்கு பகைவரா யிருப்பவரை நமக்கு நண்பராக்கிக் கொள்ளுதல் விரைந்து செய்யத் தக்கது. 9

சிறு நாட்டை யாள்வோர், தம்மினும் வலியார் எதிர்த்த போது தம்மவர் நடுக்கத்திற்கு அஞ்சி உடன்படிக்கை செய்து கொள்ள இசைந்தால், அதனைப் பணிவுடன் ஏற்பர். 10

## 69. தூது

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு 1

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று 2

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு 3

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு 4

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது 5

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது 6

கடனறிந்து காலங் கருதி இடனறிந்
தெண்ணி யுரைப்பான் தலை 7

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு 8

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன் 9

இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது 10

## 69. தூது செல்வோர் தன்மை

தம்மவரிடம் அன்புடன் இருத்தலும் நற்குடியில் பிறத்தலும் மன்னன் விரும்பும் குணப்பண்பு உடையவனு யிருத்தலும் தூது சொல்வானது தன்மைகள். 1

தன் மன்னனிடம் அன்பும், ஆவதை அறியும் அறிவும், ஆராய்ந்து சொல்லும் திறமையும் தூது பேசுவார்க்கு இன்றியமையாத மூன்று குணங்களாகும். 2

வேல் தாங்கும் வேற்று மன்னரிடம் சென்று தன் மன்னனுக்கு வெற்றி தரும் செய்தியை யுரைப்பாருக் குரிய இலக்கணமாவது, அறநூலை அறிந்தவருள் சிறந்த புலவனாகுதலாம் 3

இயற்கையான அறிவும், பொலிவுள்ளத் தோற்றமும், ஆராய்ந்து கற்ற கல்வியும், ஆகிய இம்மூன்றும் நன்கு அமையப் பெற்றவனே தூது செல்ல வேண்டும். 4

சுருங்கத்தொகுத்துச்சொல்லியும், கடுஞ் சொற்களை விலக்கியும் இனிய சொற்களை கேட்போர் மன மகிழ எடுத்துரைத்தும் தன் அரசனுக்கு நன்மை உண்டாக்குபவனே தூதனுவான். 5

பகை மன்னர் கோபப் பார்வைக்கஞ்சாது சொல்ல வேண்டியவைகளை நன்கறிந்து அவர் மனங் கொள்ளும்படி சொல்லி, காலநிலை யறிந்து காரியத்தை முடிக்க வழி யறிபவனே தூதன். 6

வேற்று மன்னனிடம் நடந்துகொள்ளும் முறை தெரிந்து, காலம் பார்த்து, சொல்லுதற்கேற்ற இடம் அறிந்து, சொல்ல வேண்டியதை ஆய்ந்து சொல்பவன் சிறந்த தூதனுவான். 7

கடமை தவறுமையும், தக்கத் துணையாகும் இயல்பும், அஞ்சாத மன உறுதியும் ஆகிய மூன்றையும் உண்மையாக உடையவனே தலையாய தூதுவன். 8

தன் மன்னனுக்கு இழிவைத் தரும் சொற்களை மறந்தும் சொல்லாத உறுதி யுடையவனே, தன் அரசன் சொல்லி அனுப்பிய சொல்லை வேற்றரசனுக்கு சொல்லும் தகுதி யுடையான். 9

உயிருக்கே முடிவு ஏற்பட்டாலும், அதற்காக அஞ்சி சொல்ல வேண்டியவற்றைக் குறைத்துக் கூறுமல் மன்னனுக்கு நன்மை தரும் சொற்களைச் சொல்ல வல்லவனே தூதன். 10

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் 1

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கந் தரும் 2

போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கு மரிது 3

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து 4

எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை 5

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல் 6

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல் 7

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும் 8

கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர் 9

பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும் 10

## 70. மந்திரிகள் மன்னரைச் சேர்ந்து ஒழுகுமுறை

மன்னரைச் சேர்ந்து வாழ்பவர்கள் அவரை மிகவும் நெருங்காமலும் மிகவும் விலகிப் போகாமலும் நெருப்பின் முன் குளிர் நீக்கிக் கொள்பவர் போல் இருக்க வேண்டும். 1

மன்னன் விரும்புவனவற்றை தாம் விரும்பாம லிருந்தால் மன்னரால் நிலைப் பெற்ற செல்வத்தை கொடுக்க வழி செய்யும். 2

தங்களைக் காத்துக் கொள்ளக் கருதினால் அரிய பிழைகள் நேராமல் காத்துக் கொள்ள வேண்டும். அப் பிழைகள் தம்பால் நேர்ந்து மன்னன் ஐயுற்றால் பின் அவனைத்தெளிவித்தல் முடியாது.

பேரரசன் பக்கலில் இருந்தால், அவர் முன் இரகசியம் பேசுதலும், அத்துடன் சேர்ந்து சிரித்தலும் ஒழித்து நடக்க வேண்டும். 4

மன்னன் இரகசியம் பேசும்போது செவி கொடுத்துக் கேளாமலும், 'அஃதென்ன' என்று வினவாமலும், அவரே தம் மிடம் தெரிவித்தால் கேட்டு கொள்ளுதலும் வேண்டும். 5

மன்னனிடம் ஒன்றைச் சொல்லக் கருதினால், அவன் மனக் குறிப்பறிந்து, காலமறிந்து, வெறுப்புண்டாக்காமல் விரும்பும் படி எடுத்துச் சொல்ல வேண்டும். 6

மன்னர் மனம் விரும்பப் படுவன வற்றை எடுத் தெடுத்துச் சொல்லவேண்டும், பயனல்லாதவற்றை மன்னனே கேட்பினும் சொல்லுதல் கூடாது. 7

மன்னர் என்னிலும் இளையவர் என்றும், எம் உறவினர் என்றும் அவமதியாது, அவரது அதிகார நிலைக்குப் பொருந்த நடந்து கொள்ள வேண்டும். 8

நிலைபெற்ற நல்லறிவுடையோர், நாம் மன்னரால் மதிக்கப் பட்டோம் என்று எண்ணி இறுமாந்து அம்மன்னன் விரும்பாத தவறானவற்றை செய்ய மாட்டார்கள். 9

மன்னனிடம் தமக்குள்ளப் பழைமை பாராட்டி தாம் தகுதி யற்றவைகளைச் செய்வதில் உரிமை கொண்டாடினால் அவ்வுரிமை கேட்டினைத் தரும். 10

# 71. குறிப்பறிதல்

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி 1

ஐயப்படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல் 2

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல் 3

குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போர் அனையரால் வேறு 4

குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண் 5

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம் 6

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினுங்
காயினுந் தான்முந் துறும் 7

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின் 8

பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின் 9

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற 10

## 71. பிறர் எண்ணத்தைக் கூறாமுன்னமே அறிதல்

எவரும் கூறாமலே ஒருவர் முகத்தைப் பார்த்து அவர் உள்ளக் கருத்தை அறியவல்லவன் எக்காலத்தும் வற்றாத கடல் நீரால் சூழப்பட்ட உலகிற்கு ஓர் அணியாவான். 1

ஒருவன் உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை சந்தேகமின்றி உறுதியாக உணரவல்லானை தெய்வமெனக் கருதி மதிக்க வேண்டும். 2

முகக் குறியினால் உள்ளக் குறிகளை யறியவல்ல ஆற்றலுள்ளவரை, தன் உறுப்புகளில் எதைக் கொடுத்தாவது தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும். 3

வாயால் கூறாமல் குறிப்பாலுணர்த்தியதை நன்கு அறியும் ஆற்றலுடையவரோடு, அவ்விதம் அறியமாட்டாதவர் உறுப்புகளால் ஒத்திருந்தாலும் அறிவால் வேறுபட்டவரே யாவர். 4

முகக் குறிப்பால் உள்ளக் குறிப்பை அறியும் ஆற்றலை பெறாவிட்டால், மற்ற உருப்புகளில் சிறந்த கண்ணானது வேறென்ன பயன் செய்யப் போகிறது? 5

தனக்கு நேர் வைத்தப் பொருளின் உருவை தானாகவே நன்கு காட்டும் பளிங்கு கண்ணாடியைப் போல,ஒருவன் உள்ளக் குறிப்பை முகம்தானேகாட்டி விடும்' 6

ஒருவனது மனம் ஒன்றை விரும்பலும், வெறுத்தலும் செய்தால், அதனை எல்லோர்க்கும் முன்னதாக முகமானது தெரிவித்து விடும். ஆகவே அம்முகத்திலும் அறிவு மிக்கது உண்டோ?

தன் மனக் குறிப்பை நோக்கி தனக்கு நேர்ந்ததை அறியவல்லவரைப் பெற்றால், அவர் முகம் நோக்கி நிற்றலே இடர் ஒழித்தற்குப் போதுமானது. 8

கண் குறிப்புகளை நன்கு உணர வல்லாரைப் பெற்றால், பிறர் மனத்துள்ள பகையையும், நட்பையும் அவர் சொல்லாமலே அவர் கண்கள் கூறி விடும். 9

'நுண்ணிய அறிவுடையோம்' என்போர் குறிப்பை அறிவதற்குப் பயன்படுத்தும் அளவு கோல் எதுவென ஆராய்ந்தால் அவை கண்களே யன்றி வேறல்ல. 10

## 72. அவையறிதல்

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் 1

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர் 2

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல் 3

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல் 4

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு 5

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு 6

கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து 7

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று 8

புல்லவையுள் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார் 9

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல் 10

## 72. சபையின் நிலை அறிந்து பேசுதல்

சொற்களைத் தொகுத்து உரைப்பதிலுள்ள பயன் அறிந்த தெளிவுடையவர்கள, அவையின் தன்மையை ஆராய்ந்தறிந்து அதற்கேற்றவாறு பேச வேண்டும். 1

சொற்களின் நல்ல நடையை ஆராய்ந்த நல்லறிவாளர், ஒன்றை சொல்லுமிடத்து அவையை ஆராய்ந் தறிந்து சொல்வதை வழுவாமல் தெரிந்து சொல்ல வேண்டும். 2

அவையின் தன்மையை நன்கறியாது பேசத் தொடங்குபவர்கள், சொல்லின் கூறுபாடுகளைத் தெரியாதவர்கள். அவர் சொல்ல வல்லதும் கிடையாது. 3

அறிஞர் அவையின்முன் அறிவுடையவனாகப் பேசுதல் வேண்டும். அறிவற்றவர்கள் அவையின்கண் வெண்மையான சுண்ணாம்பைப்போல்(அறிவில்லாதவன் போல்)இருக்க வேண்டும்.

தன்னிற் சிறந்த அறிஞர் அவையின் கண் தான் முந்திச் சென்று ஒன்றை சொல்லாத பணிவு நல்லவை என்று கூறப்பட்டவைகளுள் மிக்க சிறப்புடையது. 5

விரிந்த அறநூற் பொருளைக் கேட்டு அறிய வல்லவர் முன்னர் குற்றமுண்டாகும்படி சொல்லுதல், நல்லொழுக்க நெறி நின்றவன் அதனின்றும் தவறியது போலாகும். 6

குற்றமறச் சொல்லின் பொருளை ஆராய்வதில் வல்லவருடைய அவைக்கண் பலநூல்களையும் கற்றறிந்தவருடைய கல்வியானது சிறந்து விளங்கும். 7

தாமே உணரவல்ல அறிவுடையார் முன்னர் ஒன்றைத் தெளிவாகக் கூறுதல், தானாக வளரும் பயிரையுடைய பாத்தியில் நீரை ஊற்றியதுபோலாகும். 8

அறிஞர்கள் அவையில் நல்ல பொருள்களை மனதிற் பதியும்படி சொல்ல வல்லவர், அறிவற்றவர்கள் கூட்டத்தில் மறந்தும் பேசுதல் கூடாது. 9

நல்லவர் அறிவிலே தம் இனத்தவர் அல்லாதவர் அவையில் எதையும் பேசக் கூடாது, அவ்விதம் பேசும் சொற்கள் அசுத்தமான இடத்தில் சிந்திய அமிழ்தம் போன்றது. 10

# 73. அவையஞ்சாமை

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் 1

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார் 2

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர் 3

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருள் மிக்க கொளல் 4

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு 5

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை யஞ்சு பவர்க்கு 6

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்(து)
அஞ்சு மவன்கற்ற நூல் 7

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார் 8

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்து(ம்)
நல்லார் அவையஞ்சு வார் 9

உளரெனினும் இல்லாரொ(டு) ஒப்பர் களனஞ்சிக்
கற்றசெலச் சொல்லா தார் 10

## 73. பேசத்தொடங்கிய பிறகு நடுங்காமை

சொற்களது தொகையை அறிந்த தெளியுடையோர், அறிஞர் அவை இது மூடரவை இது என்று தெரிந்து கற்று வல்லவர் அவையில் வாய் தப்பி பிழையாகப் பேச மாட்டார். 1

கற்றவர்கள் முன்னிலையில், தாம் கற்றவற்றை அவர் மனதில் கொள்ளுமாறு சொல்ல வல்லார் கற்றவர்களுள் கற்றவராகக் கருதப் படுவார். 2

விரோதிகளின் நடுவே அஞ்சாமல் புகுந்து இறப்பர் பலர். அவையின் கண்ணே அஞ்சாமல் புகுந்து பேச வல்லார் சிலரே. 3

கற்றறிந்தவர்கள் முன் தாங் கற்றவற்றை அவர் மனங் கொள்ளும்படி கூறி, தம்மினும் அதிகமாக கற்றவரிடம் தாம் கற்க வேண்டிய மிகுதியைக் கற்றுக் கொள்ள வேண்டும். 4

அவையில் கேட்கப் படும் கேள்விகளுக்கு நடுங்காமல் மறுமொழி கொடுக்க தாம் முறையாகக் கற்க வேண்டிய நூல்களை நன்கு பொருளறிந்து படிக்க வேண்டும். 5

வீரமற்றவர்களுக்கு வாளோடு என்ன தொடர்பு இருக்கிறது; அதுபோல நுண்ணிய அறிவுடையோரின் அவைக்கு பயப்படுபவற்கு நூலோடு என்ன தொடர்புண்டு? 6

அறிஞர் அவைக்குப் பயப்படுகின்றவன் படித்த நூல், பகைவர்கள் நடுவே பேடி கையிலேந்திய கூர்மையான வாளைப் போன்ற தாகும். 7

அறிஞர் அவையில் நல்ல பொருளை கேட்போர் மனங் கொள்ளும்படி சொல்ல மாட்டாதவர், பல நூல்களைக் கற்றும் பயனற்றவர்களே யாவர். 8

நன்கு கற்றறிந்திருந்தும் அறிஞர் அவைக்குப் பயப்படுகின்றவர்கள், கல்லாதவரைக் காட்டிலும் இழிந்தவர்கள் என்று உலகம் சொல்லும். 9

சபைக்குப் பயந்து தாம் கற்றவைகளை சபை ஏற்க எடுத்துச் சொல்ல முடியாதவர்கள் உயிருடனிருந்தும் இறந்தவரோடு ஒப்பாவர். 10

## 74. நாடு

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு 1

பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு 2

பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு 3

உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு 4

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பும் இல்லது நாடு 5

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை 6

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு 7

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து 8

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு 9

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு 10

# 74. நாட்டின் அமைப்பு

தவறாமல் விளையும் விளைபொருள் எடுப்போரும், பொதுப் பணிப் புரியும் அறிஞர்களும், குறையாத செல்வமுடையோரும் ஒன்று சேர்ந்திருப்பதே நாடாகும். 1

பொருள் வளமுடையதாய், அனைவரும் விரும்பத்தக்கதாய், கெடுதல் இல்லாததாய் அதிகமான விளைபொருள் தரக் கூடியதாய் இருப்பதே நாடாகும். 2

வேற்று நாட்டு மக்கள் குடியேறினல் அந்தச் சுமையைத் தாங்க வல்லதாய், தன் மன்னனுக்குரிய வரிப் பணம் முழுவதும் கொடுக்க வல்லதாய் இருப்பதே நாடாகும். 3

அதிகமான பசிப்பிணியும், நீங்காத உடற் பிணியும், அழிவு செய்யும் பகைப் பிணியும் தன்னிடம் சேராமல், அமைந்ததே நாடாகும். 4

மாறுபட்ட கொள்கையுடைய பல கூட்டங்களும், உடனிருந்தே கெடுக்கும் பகையும், அரசனைத் துன்புறுத்துகின்ற கொலைத் தொழிலுடைய சிற்றரசும் இல்லாதது நாடாகும். 5

விரோதிகளால் கெடுக்கப்படாததாய், அப்படிக் கெட்டுப் போனாலும், தன் வளம் குன்றாததாய் இருக்கும் நாடே தலை சிறந்த நாடாகும் என்பர். 6

ஊற்று நீர், மழை நீர் ஆகிய இருவகை நீர் வளமும், வளம் தந்து பயன்படும் மலையும், மலையிலிருந்து வரும் ஆறும், வன்மையான அரண்களும் நாட்டின் சிறந்த உறுப்புக்களாம். 7

உடல் வளம், பொருள் வளம், விளைவு வளம், இன்ப வாழ்வின் வளம், நற்காவல் வளம் என்னும் இந்த ஐம்பெரும் வளங்களும் ஒரு நாட்டிற்கு அழகு தருவன என்பர். 8

வருந்தாமல் தானே வளத்தைத் தரும் நாடுகளே நல்ல நாடுகள் என்று கூறுவர்; வருந்தி முயன்ற பின் வளம் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல. 9

மன்னனோடு மக்கள் அன்போடு பொருந்துதலில்லாத நாட்டில் மேற்சொன்ன எல்லா நன்மைகளும், வளங்களும் இருந்தாலும் அவற்றால் பயன் இல்லாமல் போகும். 10

## 75. அரண்

ஆற்று பவர்க்கும் அரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள் 1

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடு முடைய தரண் 2

உயர்வகலந் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கு நூல் 3

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்ப தரண் 4

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண் 5

எல்லாப் பொருளும் உடைத்தா யிடத்துதவும்
நல்லா ளுடைய தரண் 6

முற்றியும் முற்றா தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண் 7

முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண் 8

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண் 9

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண் 10

## 75. நாட்டின் பாதுகாப்புகள்

வலிகொண்டு பிறர் மேற் படை எடுப்பவர்க்கும் அரண் மிக்க சிறந்தது. வலிவற்றுப் பகைவர்களுக்குப் பயந்து தன்னை காத்துக்கொள்ள எண்ணுவார்க்கும் அது சிறந்தது. 1

வற்றாத நீர் உள்ள அகழும், நீரும் நிழலுமற்ற நிலமும், மலையும், குளிர்ந்த மர நிழல் செறிந்த காடும் அடுத்தடுத்துடையதே அரணாகும். 2

உயரமும், அகலமும், உறுதியும், பகைவர் கடக்க அருமையும் ஆகிய நான்கும் அமையப் பெற்றதே அரண் என்பர் நூலோர். 3

எதிரியைத் தடுத்தற்குரிய இடம் சிறியதாய், பெரிய இடத்தை உள்ளடக்கி, நெருங்கிய எதிரிகளின் ஊக்கத்தை அழிப்பதாயிருப்பதே அரணாகும். 4

எதிரிகளால் கைப்பற்ற முடியாததாய், வேண்டிய உணவுப் பொருள் தன்னிடம் உள்ளதாய், உள்ளிருந்து எளிதாக நின்று போர் புரிய வசதியாய் அமைந்திருப்பதே அரணாகும். 5

எப்பொருளையும் தன்னுள்ளிருப்பவர்க்கு தர முடிந்ததாய், எதிரிகள் தாக்கும்போது போர் புரிந்துதவும் சுத்த வீரரை உடையதாயிருப்பதே அரணாகும். 6

சூழ்ந்து முற்றுகையிட்டும், அன்றி ஒருமுகமாகப் போர் புரிந்தும், சூழ்ச்சியால் வாயிற் கதவைத் திறப்பித்தும், கைப்பற்ற முடியாததே அரணாகும். 7

மிக்க வலியுடையவராய்ப் புறத்தே சூழ்ந்து முற்றுகையிட்டவரை, தன்னுள்ளிருந்தவர்கள் இடம் விட்டுப் பெயராமல் வெல்லும்படி செய்வதே அரணாகும். 8

போர் துவங்கியதும், பகைவர் மனம் தளர்ந்துருகும்படி தன்னகத்துள்ளோர் செய்யும் போர் திறைமையினால் சிறப்புற்று பேர்பெற்றதே அரணாகும். 9

எவ்வளவு மேன்மை உடையதாயினும் போராற்றல் இல்லாதவரிடம் உள்ள அரண் சிறந்த பாதுகாப்பு ஆவதில்லை. 10

## 76. பொருள்செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் 1

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு 2

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று 3

அறனீனும் இன்பமும் ஈனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் 4

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் 5

உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் 6

அருளென்னும் அன்பின் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு 7

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை 8

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃதனிற் கூரிய தில் 9

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு 10

## 76. பொருளும் அதனைச் செய்யும் வகையும்

ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும், மதிப்புடையவராகச் செய்யவல்ல பொருளையல்லாமல் சிறந்த பொருள் வேறு இல்லை. 1

நல்லவராயினும் பொருள் இல்லாதவரை எல்லோரும் இழித்துக் கூறுவார்கள், பொருளுடையவரை எல்லோரும் போற்றுவார்கள். 2

பொருள் என்னும் அணையாத திருவிளக்கு, தன்னை உடையார் நினைத்த இடத்திற்குச் சென்று அவர்களின் இடையூறு என்னும் இருளைக் கெடுக்கும். 3

நல்ல வழியில், எவருக்கும் தீமை செய்யாமல், தேடிய செல்வம், அறத்தையும் தரும், நல் இன்பத்தையும் கொடுக்கும். 4

குடிமக்களிடம் செலுத்தும் அருளுடனும், அவர் தம்மிடம் செலுத்தும் அன்புடனும் கூடி வராத செல்வத்தை அரசன் ஏற்றுக்கொள்ளாது நீக்கிவிட வேண்டும். 5

உடையரில்லாது தானே வந்து சேர்ந்த செல்வமும், சுங்க வரிப்பணமும், தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் மன்னனுக்குரிய பொருளாகும். 6

'அன்பு' என்னும் அன்னை பெற்றெடுத்த 'அருள்' என்னும் குழந்தையானது, 'பொருள்' என்னும் செல்வம் படைத்த வளர்ப்புத் தாயால் வளர்வதாகும். 7

தன் கைப் பொருள் வைத்துக்கொண்டு ஒரு காரியத்தை செய்தல், மலை மேல் ஏறி நின்று யானைப் போரை பார்ப்பதோடொக்கும். 8

பொருளை ஒருவன் நன்கு சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவனுடைய பகைவரின் செருக்கை அறுக்க அதனினும் கூர்மையான ஆயுதம் வேறு இல்லை. 9

நல்ல வழியில் வந்த பொருளை மிகவும் அதிகமாக ஈட்டியவர்களுக்கு மற்றைய அறனும் இன்பமும் ஒருங்கே எளிதில் கிடைக்கும் பொருளாகும். 10

## 77. படைமாட்சி

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை 1

உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது 2

ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும் 3

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை 4

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை 5

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு 6

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து 7

அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும் 8

சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை 9

நிலைமக்கள் சால உடைத்தெனினுந் தானை
தலைமக்கள் இல்வழி யில் 10

## 77. படைச்சிறப்பு

யானை, குதிரை, தேர், காலாள், என்னும் நால்வகை உறுப்புகளும் நிறைந்து, போரின் கண் உண்டாகும் துன்பத்திற் கஞ்சாத படையானது, மன்னனது செல்வங்களில் தலையானது. 1

தான் சிறிதாகப் போனவிடத்தும் போரினால் வரும் கேட்டிற்கு அஞ்சாது அரசைப் பாதுகாக்கும் உறுதி பரம்பரையாக பயிற்சிசெய்துவரும் மூலப்படைக்கல்லாமல் உண்டாகாது. 2

எலியாகிய படை திரண்டு கடல்போல் கூச்சலிட்டால் நாகப் பாம்புக்கு என்ன துன்பம் நேரும்? அப் பாம்பு மூச்சுவிட்டவுடன் எலிக் கூட்டம் அஞ்சி விடும். 3

போரில் எளிதில் கேடடையாமலும், பகைவரால் வஞ்சித்து பிரிக்கப்படாமலும், பரம்பரையாய் வருகின்ற அஞ்சாமை உடையதே படையாகும். 4

கூற்றமே சினந்து போர் புரிய வந்தாலும் அஞ்சாது அதன் எதிர் நின்று போர் செய்யும் ஆற்றல் உடையதே படையாகும். 5

வீரமும், மானமும், முன்னோர் சென்ற நல்வழியில் நடத்தலும், மன்னன் நம்பிக்கைப் பெறுதலும் ஆகிய நான்கும் ஒரு படையைப் பாதுகாக்கும் குணங்களாகும். 6

தன் மேல் வந்து போரைத் தொடுக்கும் எதிரிகளை வெல்லும் முறையறிந்து, அப்பகைவரது தூசிப்படை தன் மேல் வராமல் தடுத்து தான் அதன் மேற் செல்லவல்லதேசிறந்த படை. 7

மேற்சென்று தாக்கும் திறமையும், எதிர்த்த படையை யோட்டும் வன்மையும் இல்லையானாலும், அணி வகுப்பு முதலிய தோற்றப் பொலிவுடைய படை சிறப்படையும். 8

அளவில் குறைதலும், நீங்காத வெறுப்பும், வறுமையும் இல்லையானால் படையானது பகைவரை வெல்லுந் திறமையுடையதாகும். 9

போரில் பின் வாங்காது நிலைத்து நிற்கும் வீரர் மிகுதியாக இருந்தாலும், படைத் தலைவர் இல்லாதபோது படையானது பாரில் நிலைத்து நிற்காது. 10

# 78. படைச்செருக்கு

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்நின்று கல்நின் றவர் 1

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்த லினிது 2

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு 3

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும் 4

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு 5

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து 6

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து 7

உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர் 8

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர் 9

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோள் தக்க துடைத்து 10

## 78. படைகளின் ஆண்மை மிகுதி

பகைவர்களே! எம் தலைவர் முன் எதிர்த்து நின்று அவரால் இறந்து நடுகல்லாயினர் பலர். ஆகையால் நீங்கள் உயிரை விரும்பினால் எம் தலைவனை எதிர்க்காதீர்கள். 1

காட்டில் ஓடும் முயலைத் தப்பாமல் எய்த அம்பை ஏந்துவதைவிட, வெட்ட வெளியில் நின்ற யானையை எறிந்து தப்பிய வேலை ஏந்துதல் சிறந்தது. 2

பகைவரை எதிர்க்கும் பெரும் வீரத்தை ஆண்மை என்பர்; பகைவர்களுக்குத் தாழ்வு வந்தால் அதனை தீர்க்கும் உதவியை அவ் வீரத்தின் கூர்மை என்பர். 3

தன் கையிலிருந்த வேலினை வந்த யானையின் மேலெறிந்து மீள்கின்ற வீரன், வரும் யானையை யெறியத் தன்னுடம்பில் தைத்திருந்த வேலைப்பிடுங்க நேர்ந்தபோது அதற்காக மகிழ்வான். 4

பகைவரைக் கோபத்துடன் நோக்கிய கண்ணை, எதிரி வேலினை எறிந்தபோது அதற்கஞ்சி மூடித்திறப்பாராயின் அதுவும் வீரருக்குப் புறங் கொடுத்தலோடொக்கும். 5

வீரன் கழிந்த நாட்களைக் கணக்கிட்டு முகத்திலும், மார்பிலும் புண்படாத நாட்களையெல்லாம் வீணாகக் கழிந்த நாட்களாக எண்ணுவான். 6

உலகைச் சூழ்ந்து நிற்கும் புகழை விரும்பி உயிர் வாழாத வீரர், வீரக்கழலை அணிந்து கொள்ளுதல் அழகு செய்யும் தன்மை உடையது. 7

யுத்தம் நேர்ந்தபோது அதனை விரும்பி உயிர் விட அஞ்சாத வீரர், அரசன் சினந்தாலும் தாங்கள் சிறப்பில் குறைவு படார். 8

தாம் சூளுரைத்த வண்ணமே போர் செய்து இறக்கவல்ல வீரரை குற்றங்கூறி தண்டிக்கவல்லார் யார்? 9

தம்மைக் காத்த மன்னன் கண்களில் நீர் வடிக்கும்படி போர் செய்து இறக்கக் கூடுமானால், அந்த மரணத்தை பிச்சை எடுத்தாகிலும் பெற்றுக்கொள்ளத்தக்கது. 10

# 79. நட்பு

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு 1

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு 2

நவிறொறும் நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு 3

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு 4

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு 6

அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு 7

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு 8

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
ஒல்லும்வா யூன்றும் நிலை 9

இனையர் இவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னும் நட்பு 10

# 79. சிநேகம் இன்னதென்பது

நட்பைப் போல பெற்றுக்கொள்வதற்கு அருமையானவை எவையுள்ளன? பெற்றுக்கொண்டால் அதுபோல எதிரிகளின் செயலைத் தடுப்பதற்கருமையான பாதுகாப்புகள் எவையுள்ளன?

நற்பண்புடையாருடைய நட்பு வளர்பிறை போன்றது, தீ நெறியுடையாருடைய நட்பு தேய்பிறை போன்றதன்மையுடையது. 2

படிக்கப் படிக்க நூலின் நயம் இன்பம் பயத்தல்போல, பழகப் பழக நற்பண்புடையவர்களின் நட்பானது மிக வளர்ந்து இன்பந்தரும். 3

ஒருவரை ஒருவர் நேசிப்பது சிரித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல, தன் நண்பன் தீநெறி செல்லும்போது முற்பட்டு சென்று அதனை இடித்துக் கூறுவதற்காகவேயாகும். 4

ஒருவனை ஒருவன் நேசிப்பதற்கு தொடர்பும், நீண்ட நாட்பழக்கமும் தேவையில்லை. உணர்வு ஒத்திருந்தால் அதுவே நட்பாதற்குரிமை தரும். 5

கண்ட இடத்தில் முகத்தை மலர்த்திக் காட்டுவது உண்மையான நட்பாகாது; உண்மையான அன்பினால் உள்ளம் மலரும்படி நேசிப்பதே நட்பாகும். 6

நண்பனுக்கு கேடு நேரும்போது, அவற்றை நீக்கி அவனை நல்ல வழியில் நடக்கச் செய்து, அவன் துன்புற்றால் அத்துன்பத்தை உடனிருந்து நுகர்வதே நட்பாகும். 7

ஆடை அவிழ்ந்தவனுடைய கைகள் விரைந்து சென்று ஆடை நெகிழாமல் உதவுவதுபோல், நண்பனுக்குத் துன்பம் வந்தபோது விரைந்து சென்று உதவுவது நட்பாகும். 8

நட்பிற்கு சிறந்த நிலை எதுவென்றால், எப்போதும் மாறுபாடில்லாமல், முடிந்த அளவு நண்பனுக்கு உதவி செய்து அவனைத் தளராமல் தாங்கும் உறுதியேயாகும். 9

இவர் எமக்கு இத்தகைய அன்புடையவர், நான் இவர்க்கு இத்தகைய தன்மையினேன் என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசினாலும் நட்பின் பெருமை கெடும். 10

## 80. நட்பாராய்தல்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
விடில்லை நட்பாள் பவர்க்கு

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும் 2

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இன்னும் அறிந்தியாக்க நட்பு 3

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு 4

அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்

கேட்டினு முண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல் 6

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் 7

உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு 8

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும்

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு 10

# 80. நட்பை ஆராயுந்திறன்

நட்புக்கொள்ள விரும்புவோர்க்கு நட்பு செய்த பின் தன் ண்பரை விடுதல் என்பது முடியாது ஆதலின் ஆராயாமல் நட்பு செய்வதைக் காட்டிலும் கேடு தருவது வேறு இல்லை. 1

பல வகையிலும் குணம், செயல்கள் இவைகளை நன்கு ஆராய்ந்து நட்புக்கொள்ளாதவனுக்கு அந்நட்பு முடிவில் தான் சாவதற்கேதுவான துன்பந்தரும். 2

ஒருவனோடு நட்புக் கொள்ளும்போது, அவனுடைய குணத்தையும், நற்குடிப் பிறப்பையும், குற்றத்தையும், குறை யாத சுற்றத்தினையும் ஆராய்ந்து அறியவேண்டும். 3

நல்ல குடியில் பிறந்து தன்பால் அணுகும் பழிக்குப் பயந்து நாணுபவனை அவன் விரும்பும் பொருள் கொடுத்தாயி னும் நட்புக் கொள்ளவேண்டும். 4

தவறுகளைச் செய்யக் கருதினால் அழும்படி சொல்லியும், மேலும் செய்யாமல் கண்டித்துரைத்தும் உலக வழக்கை நன் றிந்து அறிவிக்க வல்லவரின் நட்பை ஆராய்ந்து கொள்க. 5

வறுமை வந்தபோதும் ஒரு விதமான நன்மை உண்டு; அந்த வறுமை தனது நண்பர்களின் தன்மையை நன்றாக ஆராய்ந் தறியும் ஓர் அளவு கோலாகும். 6

ஒருவனுக்கு ஊதியம் என்பது என்ன வென்றால் அறி வற்ற மூடர்களிடம் கொண்ட நட்பினைவிட்டு நீங்குவதேயாகும். 7

ஊக்கம் குன்றுவதற்குக் காரணமானவைகளை செய்ய நினை யாதிருக்கவேண்டும். அதுபோல நமக்குத் துன்பம் வந்தபோது கைவிடுகின்றவரின் நட்பையும் கொள்ளாதிருக்கவேண்டும். 8

நமக்கு துன்பம் வந்தபோது நம்மைவிட்டு நீங்கியவனின் நட்பானது, இறக்கும்போது நினைத்தாலும் மனதை மிகவும் வருத்தும். 9

குற்றமில்லாதவர்களின் நட்பைத் தேடிக்கொள்ளவேண் டும்; நற்குணமற்ற தீயவரின் நட்பை ஏதாவது கொடுத்தாயினும் விட்டுவிடவேண்டும். 10

## 81. பழைமை

பழைமை எனப்படுவ தியாதெனில் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்(கு)
உப்பாதல் சான்றோர் கடன் 2

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை 3

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின் 4

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 6

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 7

கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நாட்டார் செயின். 8

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. 9

விழையார் விழையப்படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

## 81. நண்பரிடம் பழமை பாராட்டுதல்

பழைமை என்று சொல்லப்படுவது யாதென்று ஆராய்ந்தால், பழகியவர் உரிமையால் செய்வனவற்றை சிறிதும் விலக்காமல் அதற்கு உடன்படும் நட்பு. 1

நட்பிற்கு நல்ல உறுப்பாவது, நண்பர் உரிமை பாராட்டுவதேயாகும்; அந்த உரிமைக்கு இனியராயிருத்தல் சான்றோர் கடமையாகும். 2

நண்பர்கள் உரிமையுடன் செய்தவற்றை தாம் செய்தவை போல் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவரோடு பழகிய நட்பு என்ன பயனைத் தரும். 3

தன் பழைய நண்பர்களை உரிமை காரணமாக தம்மைக் கேளாது எதையாவது செய்தால், அது விருப்பப்படத்தக்கதாகவின் அதனை விரும்பி ஏற்பர் அறிவுடையோர். 4

தாம் வெறுக்கத்தக்கவற்றை தம் நண்பர்கள் செய்தால், அதற்குக் காரணம் அறியாமை, அல்லது அளவு கடந்த உரிமை என்று கொள்ளவேண்டும். 5

நட்பின் வரம்பைக் கடவாமல் நிற்பவர், தம்மோடு பழைமை பாராட்டும் நண்பர்களது தொடர்பை அவரால் தமக்கு கேடுவந்த காலத்திலும் விடமாட்டார். 6

உண்மையான அன்பு கொண்டு பல நாட்கள் பழகிய நட்பினையுடையவர், நண்பர் தமக்கு கெடுதலைச் செய்தாலும் அவர்பாலிருந்த அன்பைக் குறைக்கமாட்டார். 7

நண்பர் செய்த பிழையைப் பிறர் சொன்னாலும் பொருட்படுத்தாது, பழைமை பாராட்டும் பண்புடையவர்களுக்கு நண்பர் பிழை செய்தால் அந்நாள் மிக்க நன்னாளாகும். 8

பிரியாமல் பழைமை பாராட்டி வந்த நண்பரது நட்பினைக் கைவிடாதவரை உலகத்தார் விரும்புவர். 9

தமது பழைய நண்பர்களிடம் வைத்திருந்த உண்மையான அன்பினை கை நெகிழவிடாதவர் பகைவராலும் நேசிக்கப் படுவர். 10

# 82. தீ நட்பு

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது. 1

உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினு மென். 2

உறுவது சீர் தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரும் நேர். 3

அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. 4

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. 5

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும். 6

நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும். 7

ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 8

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 9

எனைத்துங் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு. 10

## 82. கெட்ட குணமுள்ள நட்பின் தன்மை

கண்ணினால் நம்மை விழுங்குவார்போல அன்பு காட்டினாலும், நற்குண நற்செய்கைகளில்லாதவர்களிடம் நட்பு வளர்வதை விடக் குறைவது நல்லது. 1

தனக்கு பயன் தேவையானதுபோது நட்புக்காட்டுவதும், பயன் இல்லாதபோது விலகிப் போதலுமுடைய தகுதியற்றவர்கள் நட்பு இருந்தென்ன? போயென்ன? 2

நட்பை விட்டுநட்பின்பயனை அளந்து பார்க்கும் நண்பரும், பணங்கொடுப்பவரை ஏற்காது பணத்தையே பெரிதெனக் கொள்ளும் விலை மாதரும், கள்வரும் ஒரு நிகரானவர். 3

யுத்தம் புரியும்போது தம்மை கீழே தள்ளிவிட்டு ஒடும் அறிவற்ற குதிரைப்போன்றவர்களின் நட்பைக் காட்டிலும் தனித்திருத்தல் சிறந்ததாகும். 4

நட்பு செய்து வைத்தாலும் தனக்கு பாதுகாப்பாகப் பயன்படாத கீழ் மக்களது தீய நட்பானது ஒருவனுக்கு ஏற்படுவதைக் காட்டிலும் இல்லாதிருத்தல் நல்லது. 5

அறிவில்லாதவனுடைய மிக நெருங்கிய நட்பைக் காட்டிலும், அறிவுடையவரது விரோதம் கோடி மடங்கு நன்மை தரும். 6

உள்ளன்பில்லாமல், மேலுக்கு சிரித்து விளையாடுதல் செய்பவருடைய நட்பை காட்டிலும், எதிரிகளால் வருந்துன்பங்கள் பத்துக் கோடி மடங்கு நல்லது. 7

நம்மால் ஆகக் கூடிய காரியங்களை ஆகவொட்டாமல் செய்து கெடுப்பவரின் நட்பை பேசாமல் தளரவிடவேண்டும். 8

பேசும் சொல் ஒன்று, செய்யும் செயல் வேறாக இருப்பாரது நட்பானது கனவிலும் துன்பத்தை விளைவிக்கும். 9

நமது வீட்டில் உண்மையான நண்பன்போல் அளவளாவியிருந்து வெளியில் நம்மைப் பழித்துப் புறங்கூறுபவர்களுடைய நட்பை கொஞ்சமும் நெருங்காமல் தடுக்கவேண்டும். 10

## 83. கூடாநட்பு

சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 1

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 2

பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதன் மாணார்க் கரிது. 3

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். 4

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றுஞ்
சொல்லினால் தேறற்பாற் றன்று. 5

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை யுணரப் படும். 6

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 7

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. 8

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று. 9

பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்டு
அகநட் பொரீஇ விடல். 10

## 83. நண்பர் போல் நடித்தல்

உள்ளன்புடன் நட்புச் செய்யாமல், புறத்தில் பொருந்தி நடப்பவரின் நட்பு, இடம் வாய்க்கும்போது அடித்தற்குதவும் கொல்லன்பட்டறையிலுள்ள அடித் தகடுபோலாம். 1

உறவினர் போல இருந்து உண்மையான உற்றூராய்ப் பயன்படாதவர் நட்பு, விலைமாதர்களின் மனம்போல் மாறுபடும். 2

பற்பல நல்ல நூல்களைக் கற்றுணர்ந்திருந்தாலும், மனம் மாறி நல்ல நண்பராதல் தீயோர்க்கு கடினமாம். 3

மேல் பார்வைக்கு நண்பன்போல சிரித்து பழகி, உள்ளத்தில் கேடு நினைக்கும் வஞ்சகர்களுக்கு அஞ்சுதல் வேண்டும். 4

உள்ளத்தால் நம் மீது நட்புக்கொள்ளாது, உதடுகளால் அவர் கூறும் சொல்லை கேட்டு எதையும் நம்புதல் கூடாது. 5

உண்மையான நண்பர்போல் நல்லவற்றைச் சொன்னாலும், விரோதிகள் சொற்கள் வேறு என்பதை விரைவில் அறிந்து கொள்ளலாம். 6

வில் வளைந்து இருப்பது அம்பெய்தி கேடு செய்ய பயன்படும்; அதுபோல பகைவரின் இன்சொல்லுமாம். ஆகவே அவர்கள் சொல்லின் வணக்கத்தை நன்மை எனக்கொள்ளற்க. 7

பகைவர் கும்பிடும் கைக்குள் கொலைக் கருவியடங்கியிருக்கும், பகைவர் அழுத கண்ணீரும் அத்தன்மையானதே. 8

புறத்தில் நட்பினைப் புகழ்ந்து பாராட்டி, அகத்தே இகழும் பகைவரை, புறத்தே அவர் மகிழும்படி செய்து அகத்தேஅம் மகிழ்ச்சி சாகும்படி நடக்கவேண்டும். 9

பகைவர் நண்பராகப் பழகவந்தால், முகத்தால் அவரிடம் நட்புகொண்டு, அகத்தால் அந்நட்பொழித்து, பின் புறநட்பையும் விடவேண்டும். 10

## 84. பேதைமை

பேதைமை யென்பதொன் றியாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல். 1

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். 2

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். 3

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். 4

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையுந்
தான்புக் கழுந்தும் அளறு. 5

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். 6

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 7

மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். 8

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். 9

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். 10

## 84. யாதும் அறியாமை

அறியாமை என்பது எல்லாக் குற்றங்களிலும் மிக்க தொன்று. அது எதுவெனில், தீமையை கை கொண்டு நன்மையை கை விடுதல். 1

ஒருவனுக்கு அறியாமையிலெல்லாம் அறியாமையாவது, தனக்கு ஒழுங்கல்லாதனவற்றில் விருப்பங்கொள்ளுதல். 2

வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கப்படாமை, நாட வேண்டியவற்றை நாடாமை, அன்பில்லாமை, போற்றவேண்டு வனவற்றை போற்றாமை இவை அறிவற்றவன் தொழில். 3

நூல்களைக் கற்றறிந்தும், அவற்றை பிறருக்கு எடுத்துரைத்தும், தான் அடங்கி நடவாத அறிவில்லானைப் போல அறிவில்லான் உலகில் இல்லை. 4

எழு பிறவியிலும் உழன்று அனுபவிக்க வேண்டிய துன்பத்தை, ஒரே பிறவியில் செய்து கொள்ள வல்லவனாவான் அறிவில்லாதவன். 5

எதையும் முறையாக செய்யத் தெரியாத அறிவில்லாதவன் ஒரு காரியம் செய்ய முற்பட்டால், அந்தக் காரியமும் கெடும் அவனும் விலங்கு பூணுவான். 6

மூடர் பெருஞ் செல்வத்தை அடைந்தால், அதனை அயலார் அனுபவிப்பர். ஆனால், அவன் சுற்றத்தார் பசித்திருப்பர். 7

அறிவில்லாதவன் தன் கையில் ஒரு உடைமையைப் பெற்றால் ஒரு பித்தன் கள்ளைக் குடித்து வெறியால் மகிழ்ந்தாற் போலக் களிப்பான். 8

அறிவில்லாதவரிடம் நட்பு கொள்ளுதல் நல்லதே எனெனில் பிரிவு ஏற்படும்போது எவ்விதத் துன்பமும் அதனால் நேராது. 9

அறிவில் சிறந்தவர் அவையில் மூடன் புகுதல், அசுத்தத்தை மிதித்துக் கழுவாத காலை சுத்தமான படுக்கையில் வைத்தாற்போலும். 10

## 85. புல்லறிவாண்மை

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு. 1

அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம். 2

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது. 3

வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. 4

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயந் தரும். 5

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி. 6

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. 7

ஏவவுஞ் செய்கலான் தான் தேறான் அவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். 8

காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு. 9

உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். 10

## 85. அறிவின்மை

வறுமையுள் மிக்க வறுமையானது அறிவில்லாமையே யாகும், மற்ற இல்லாமைகளை இல்லாமை என்று கருதமாட்டார் உயர்ந்தோர்.

புல்லறிவுடையோன் மனம் மகிழ்ந்து ஒரு பொருளை ஒருவனுக்குக் கொடுத்தற்குக் காரணம், அப்பொருளைப் பெறுகின்றவனுடைய தவமேயன்றி வேறொன்றுமில்லை. 2

புல்லறிவுடையவர்கள் தமக்குத் தாமே செய்து கொள்ளும் துன்பத்தை பகைவரும் அவர்களுக்கு உண்டாக்க முடியாது. 3

புல்லறிவுடையன் என்பது என்னவென்றால், தம்மைத் தாமே 'நல்லறிவுடையர்' என்று சொல்லிக்கொள்ளும் மயக்கமாம். 4

புல்லறிவாளர்கள் கல்லாத நூல்களையும் கற்றவர்போலக் காட்டிக்கொண்டு நடத்தலானது, அவர்கள் குற்றமறக் கற்ற நூலிடத்தும் பிறர்க்கு ஐயப்பாட்டைத் தரும். 5

புல்லறிவாளர் தம்மிடம் உள்ள குற்றங்களைக் கடிந்தொதுக்காது, தமது உறுப்புகளை மட்டும் ஆடையால் மறைத்துக்கொள்ளுதல் இழிந்த அறிவுடைமைக்கு அடையாளமாகும். 6

சிறந்த அறிவுப் பொருளை காத்து வைக்காமல், கைவிடும் புல்லறிவாளன் தனக்குத் தானே பெருந்துன்பத்தை வருவித்துக்கொள்வான். 7

நல்லவர் நல்லதைச் செய்யச் சொன்னாலும் செய்யான்; தானும் நல்லது இதுவென்றுணரமாட்டான்; அத்தகையோன் உலகைவிட்டு நீங்கும்வரை பொருந்தற்கரிய ஒரு நோயாவான். 8

எதையும் அறியாதவனுக்கு எதையாவது அறிவிக்கப் புகுந்தவன் அறியாதவனாக எண்ணப்படுவான்; முழுதும் அறியும் திறமில்லாதவன விடாப்பிடியினால் அறிந்தவனாகக் கூடும். 9

உயர்ந்தவர்கள் உண்டு என்று அறிந்து கூறுவதை இல்லை என்று அறியாமல் கூறுபவன், உலகத்தவரால் பேயாகக் கருதப்படுவான். 10

## 86. இகல்

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். 1

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. 2

இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கந் தரும். 3

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின். 4

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். 5

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலும் நணித்து. 6

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். 7

இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. 8

இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணுங் கேடு தரற்கு. 9

இகலானாம் இன்னாத வெல்லாம் நகலானாம்
நன்னயம் என்னுஞ் செருக்கு. 10

## 86. மாறுபடுதல்

எல்லா மக்கட்கும், ஒருவரோடொருவர் கூடாமை என்னும் தீய குணத்தை வளர்க்கும் நோயை, மாறுபாடு என்று சொல்வர் அறிவுடையோர். 1

பிரிவுண்டாகக் கருதி ஒருவர் வெறுப்பன செய்தாலும், மாறுபாடு விளையாமைப் பொருட்டு அவனுக்குத் துன்பஞ் செய்யாமலிருப்பது சிறந்தது. 2

மாறுபாடு என்னும் துன்பத்தைக் கொடுக்கும் நோயை ஒருவன் தன் மனத்தைவிட்டு நீக்குவானாயின், அது அழிவில்லாத குற்றமற்ற புகழைத் தரும். 3

துன்பங்கள் எல்லாவற்றிலும் மிக்க துன்பமான மாறுபாடு என்னும் நோயை ஒருவன் நீக்கிவிட்டால், அஃது இன்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்த இன்பத்தைக் கொடுக்கும். 4

மாறுபாட்டை ஏற்றுக்கொள்ளாமல் நடக்கவல்லாரை, வெல்லக் கருதும் தன்மையுடையவர் யார்? ஒருவருமில்லை. 5

மாறுபடுவதில் மேலும் சென்றுகொண்டிருப்பது நன்று என்று கருதுபவனுடைய வாழ்வானது, மிக்க விரைவில் புதைபடுதலும் அழிதலும் கூடும். 6

மாறுபாட்டையே விரும்புகின்ற தீய அறிவுடையவர்கள் வெற்றிப் பொருந்துதலையுடைய உண்மைப் பொருளை அறியமாட்டார்கள். 7

மாறுபாட்டை ஏற்றுக்கொள்ளாத தன்மை ஒருவனுக்கு செல்வம் வளர வழி அமைக்கும். மாறுபாட்டினை அதிகமாக ஏற்றுக்கொண்டால் கேட்டினை உண்டாக்கும். 8

தனக்கு ஆக்கம் வரும்போது மாறுபாட்டை நினையான், தனக்கு கேடு செய்துகொள்ளும்போது, அந்த மாறுபாட்டினை மிகுதியாக நினைப்பான். 9

ஒருவனுக்கு மாறுபாட்டினாலே தீமையெல்லாம் உண்டாகும்; நட்புக்கொள்வதினாலே நல்லறம் என்னும் பெருஞ் செல்வமுண்டாகும். 10

## 87. பகைமாட்சி

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. 1

அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. 2

அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்ச மெளியன் பகைக்கு. 3

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது. 4

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. 5

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். 6

கொடுத்துங் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 7

குண னிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க் (கு)
இன னிலனாம் ஏமாப் புடைத்து. 8

செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 9

கல்லான் வெகுளுஞ் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி. 10

## 87. பகையின் சிறப்பு

தம்மினும் வலியவர்க்கு பகைவராகி அவர்களை எதிர்த்தல் ஒழிக; தம்மினும் மெலியார் மீது பகையாகி எதிர்த்தலை ஒழியாது மேற்கொள்க. 1

தன் சுற்றத்தின் மேல் அன்பில்லாதவனாகி, வேண்டிய அளவு துணையில்லாதவனாய், தானும் திறமில்லாதவனாய், இருப்பவன், பகைவனது வலிமையை எவ்வாறு ஒழிப்பான்? 2

அஞ்சவேண்டியதற்கு அஞ்சாதவனாய், அறிவில்லாதவனாய் பிறருடன் இயைந்து நடவாதவனாய், கொடுக்கும் குணம் இல்லாதவனாய் இருப்பவன் பகைவர்க்கு மிக எளியவனாவான். 3

ஒருவன் கோபம் நீங்காதவனாய், மனதை அடக்கியாளும் தன்மை இல்லாதவனாய் இருப்பவனை வெல்லுதல் எப்போதும் எவ்விடத்தும் யார்க்கும் எளிதேயாகும். 4

நன்னெறியை ஆராயாதவனாய், பொருத்தமானவற்றைச் செய்யாதவனாய், பழியைப் பார்க்காதவனாய், நற்பண்பில்லாதவனாய் இருப்பவன் பகைவரால் எளிதில் எதிர்க்கப்படுவான். 5

ஒன்றையும் பாராத கோபம் உடையவனாய், மிகப் பெரும் ஆசையுடையவனாய் இருந்தால் அவனது பகைமை விரும்பிக் கொள்ளப்படும். 6

தன்னை அடுத்து இருந்தும் பொருத்தமில்லாதவற்றையே தனக்குச் செய்வானுடைய பகையை சில பொருள் கொடுத்தாயினும் கட்டாயங்கொள்ளவேண்டும். 7

நற்குணம் ஒன்றும் இல்லாதவனாய் பல குற்றங்கள் உடையவனாயிருப்பின், அவன் துணையில்லாதவன். அவன் துணையற்ற நிலை பகைவர்க்குப் பாதுகாப்பாகும். 8

அறிவில்லாத, அஞ்சும் தன்மையுள்ள பகைவரைப் பெற்றால், அவரை வெல்லுவார்க்கு வெற்றியின்பம் தூரமாகப் போகமாட்டாது. 9

அறநூல்களைக் கல்லாதவனுடன் பகைக்கும் எளிய செயலை செய்ய இயலாத ஒருவனிடம் புகழ் எப்போதும் வந்து பொருந்தாது. 10

## 88. பகைத்திறந்தெரிதல்

பகையென்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 1

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. 2

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 3

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு. 4

தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவன்
இன்றுணையாக் கொள்கவற் றினொன்று. 5

தேறினுந் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். 6

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. 7

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. 8

இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. 9

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 10

## 88. பகைவன் திறங்களை ஆராய்தல்

பகை என்று கூறப்படும் தீமையை ஒருவன் விளையாட்டிற்காகக் கூட விரும்புதல் கூடாது. 1

ஒருவன் வில்லைக் கலப்பையாகக் கொண்ட போர்ப்படையாருடன் பகை கொண்டாலும், சொல்லை கலப்பையாகவுடைய சொற்போர் வீரர்களுடன் பகை கொள்ளுதல் கூடாது. 2

தனக்கு பக்கத்துணையில்லாமல் தனியாக இருந்து, பலருடைய பகை கொள்பவன், பித்தரைக் காட்டிலும் அறிவற்றவன். 3

வேண்டியபோது பகைவரையும் நண்பராக்கிக்கொண்டு வாழும் இயல்புடையவனது பெருமையுள் இவ்வுலகம் அடங்கியதாகும். 4

தனக்கு துணைவர் ஒருவருமில்லாமல், தன் பகைவர் இருவர் ஒன்று சேர்ந்திருப்பாரானால், அவர்களுள் ஒருவரைத் தனக்கினிய துணையாக்கிக் கொள்ளவேண்டும். 5

பகைவனை முன்னரே ஆராய்ந்து தெரிந்திருந்தாலும், தெரிந்துகொள்ளாதிருந்தாலும், தனக்குத் தாழ்வுற்றபோது, அவனைச் சேராமலும், நீங்காமலும் நடுநிலையில் இருக்கவேண்டும். 6

தான் வருத்தமுற்றதை உணராத நண்பர்க்குத் தன் வருத்தத்தை கூறக்கூடாது; பகைவரிடத்து தனது வலிவின்மையைக் காட்டக்கூடாது. 7

போர் செய்து வெற்றி பெறக்கூடிய வகை அறிந்து அது முடியும் வண்ணம் முயன்று, மறதி புகாமல் தன்னைக் காத்துக்கொள்வானாயின் அவனது பகைவரின் களிப்பு கெடும். 8

முள்ளுடைய மரத்தைச் சிறியதாய் இருக்கும்போதே பிடுங்கி எறியவேண்டும். அது முற்றி வளர்ந்த பின் அதனைப் பிடுங்குவோருடைய கைகளை வருத்தும். 9

தம் பகைவரின் செருக்கை அடக்க முடியாத மன்னர் மூச்சுவிடும் அளவிற்கும் உயிருடன் இருப்பர் அல்லர், விரைவில் அழிவர். 10

## 89. உட்பகை

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். 1

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 2

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 3

மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா
ஏதம் பலவுந் தரும். 4

உறன்முறையான் உட்பகை தோன்றின் இறன்முறையான்
ஏதம் பலவுந் தரும். 5

ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்ற லரிது. 6

செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
உட்பகை யுற்ற குடி. 7

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை யுற்ற குடி. 8

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாங் கேடு. 9

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று. 10

## 89. உடனிருந்து கெடுக்கும் பகை

நிழலும் நீரும் நோயை உண்டாக்கக் கூடியவானால் அவை தீயனவே; அதுபோலவே தீமை உண்டாக்கும் சுற்றத்தாரின் இயல்புகளும் பகைத் தன்மையுடையதே. 1

வெளிப்படையாக வெட்டும் வாள்போல உள்ள வெளிப் பகைக்கு அஞ்சற்க. நண்பர்போல் வெளியே இனிக்கப் பேசி உள்ளே பகை கருதுவோர் தொடர்புக்கு அஞ்சவேண்டும். 2

உட்பகையானவர்களைக் கண்டு அஞ்சித் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும். தனக்குத் தளர்ச்சி ஏற்பட்டபோது குயவன் மட்கலமறுக்கும் கருவிபோலத் தப்பாமல் கெடுப்பர். 3

அகந்திருந்தாத உட்பகை ஒருவனுக்கு உண்டாகுமானால், அது அவன் சுற்றத்தார் நல்லவராகாத குற்றம் பல புரியும். 4

வெளிக்கு உறவாடும் உறவுமுறை ஒருவனுக்கு உண்டாகுமானால், அவன் கெட்டொழிவதற்குரிய குற்றங்கள் பலவற்றையும் அது விளைக்கும். 5

உட்பகையானது இனத்தவர்பால் ஏற்படுமாயின், எப்போதும் அழியாத நிலைபெறுதலை ஒருவன் அடையமாட்டான். 6

செப்பின் மூடிகள் வெளியே சேர்ந்திருப்பதுபோல, உட்பகை ஏற்பட்ட குடியிலுள்ளோர் கூடி வாழ்ந்தாலும் செப்பின் உட்பக்கம் பொருந்தாமைபோல மனதாற் பொருந்தார்கள். 7

அரத்தினால் தேய்க்கப் பெற்ற இரும்பு வலிகுறைந்து தேய்வதுபோல, உட்பகை உண்டாக்கிய குடி அப்பகையினால் தேய்க்கப்பட்டு வலியழியும். 8

உட்பகையானது எள்ளின் பிளவு போன்ற மிகச் சிறியதாயிருந்தாலும், அது தன்னுள் அழிக்கவல்ல கேட்டை உடையதாம். 9

உள்ள ஒற்றுமை இல்லாதவரோடு கூடி வாழ்தல் ஒரு குடிசைக்குள் பாம்போடு கூடி வாழ்தல் போலாகும். 10

## 90. பெரியாரைப்பிழையாமை

ஆற்றுவா ராற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை. 1

பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா இடும்பை தரும். 2

கெடல்வேண்டிற் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. 3

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல். 4

யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். 5

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 6

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாந்
தகைமாண்ட தக்கார் செறின். 7

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 8

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். 9

இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். 10

## 90. பெரியாருக்குப் பிழை செய்யாமை

எடுத்த காரியத்தை முடிக்கவல்லவருடைய திறமையை அவமதியாமை, தம்மைக் காப்பவரது காவல்கள் அனைத்தினுஞ் சிறந்தது. 1

திறமையுள்ள பெரியாரை மதியாமல் நடந்தால் அவர்களால் நீங்காத துன்பம் உண்டாகும். 2

ஒருவன் தான் கெட விரும்பினால், நீதி முறைகளை தழுவாது வேற்றரசரை வெல்ல விரும்பினால், ஆராய்ந்து பாராது அதை அப்பொழுதே செய்யவல்ல அரசரிடம் பிழை செய்க. 3

திறமை மிக்கவர்களிடம் திறமை அற்றவர்கள் தீமை செய்தால், கூற்றத்தை வருவதற்கு முன்னமே கை காட்டி அழைத்தாற் போலும். 4

பேராற்றல் மிக்க மன்னனாற் கோபிக்கப்பட்டவர்கள் அவனை நீங்கி, எந்த இடத்திற்குச் சென்றாலும் உயிர் வாழமாட்டார்கள். 5

நெருப்பால் சுடப்பட்டாயினும் பிழைத்துக்கொள்ளலாம்; பெரியோர்களுக்குத் தவறு செய்து ஒழுகுபவர்கள் எந்த விதத்திலும் பிழைத்துக்கொள்ளமாட்டார்கள். 6

தகுதி மிக்க பெரியோர்கள் கோபித்தால், எல்லாவகையினும் மாட்சிமை பொருந்திய வாழ்க்கையும் சிறந்த பொருளும் என்ன பயனைத் தரும். 7

மலைபோன்ற பெருமையுடையவர் பிறர் கெட்டுப்போக எண்ணுவாராயின், நிலைபெற்றார் போன்ற செல்வமுடையாராயினும் தமது குடியோடும் அழிந்துபோவர். 8

உயர்ந்த கொள்கையுடைய பெரியவர்கள் கோபப்பட்டால், மன்னனும் இடுப்பொடிந்து நிலையிழந்து வருந்துவான். 9

நனிமிகு பெருமையுடையவர்கள் கோபப்பட்டால், மிகப் பெரிய பக்கத்துணையுடையாரும் பிழைத்துக்கொள்ளமாட்டார்கள். 10

## 91. பெண்வழிச்சேறல்

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 1

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். 2

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 3

மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று. 4

இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 5

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். 6

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து. 7

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். 8

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில். 9

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். 10

## 91. மனைவியின் வழியே தான் ஒழுகுதல்

மனைவியை விரும்பி அவள் ஏவல் கேட்டு நடப்பவர் சிறந்த இல்லறப் பயனையடையமாட்டார்கள், கடமை செய்தலை விரும்புகிறவர்கள் விரும்பாத பொருளும் அதுவே. 1

அறத்தையும், பொருளையும் போற்றாது பெண்மையை விரும்புவோனது செல்வமானது, பெரியதொரு வெட்கக் கேடாக அவனுக்கு மானக் குறைவுண்டாக்கும். 2

மனைவியிடத்துத் தாழ்ந்து நடக்கும் தகுதியின்மை, எப்போதும் ஒருவனுக்கு நல்லவர்களிடம் பேசும்போது வெட்கத்தைக் கொடுக்கும். 3

மனைவியைக் கண்டு அஞ்சும் புகழில்லாதவன் ஒருவன் ஒரு காரியம் செய்ய முயன்றாலும் அதனால் அவன் பெருமை அடைவதில்லை. 4

மனையாளுக்குப் பயப்படுகின்றவன் எப்போதும் நல்லவர்களுக்கு நல்ல காரியத்தைச் செய்யப் பயப்படுவான். 5

தன் மனைவியின் மூங்கில் போன்ற தோள்களுக்குப் பயப்படுகின்றவன் விண்ணவரைப் போல, இன்பமுற வாழ்ந்தாலும் பெருமையுடையனல்லன். 6

வெட்கமின்றிப் பெண்ணினது ஏவலைச் செய்து நடக்கின்றவனுடைய ஆண்மையைப் பார்க்கிலும் வெட்க மிகுந்த பெண் தன்மையே பெருமையுடையது. 7

நல்ல நெற்றியுடைய அழகுடைய பெண் விரும்பிய வண்ணமே நடப்பவர், நண்பர்களுடைய குறையை முடிக்கமாட்டார் நல்லறத்தையும் செய்யமாட்டார். 8

மனைவியின் கட்டளைப்படி நடப்பவரிடத்திலே அறச்செயலும், சிறந்த பொருட் செயலும், இன்பச் செயலும் இல்லையாம். 9

நன்றாகச் சிந்தனை செய்யும் நெஞ்சத்தோடு, தக்க செல்வமும் உள்ளவரிடத்தே மனையாள் வயப்பட்டொழுகும் அறிபாமை எக்காலத்துமில்லை. 10

## 92 வரைவின்மகளிர்

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 1

பயன் தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன் தூக்கி நள்ளா விடல். 2

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. 3

பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 4

பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். 5

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 6

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். 7

ஆயும் அறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. 8

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 9

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 10

## 92. பொது மகளிரின் இயல்பு

உள்ளன்புடன் ஒருவனை விரும்பாது, பொருள் காரணமாக விரும்பும் நல்ல வளையல்களை அணிந்த மகளிரது இனிய சொற்கள் தீமையைப் பயக்கும். 1

தனக்கு வரும் பொருளினை ஆராய்ந்து பார்த்து அதற்குத் தக்கபடி இனிய சொற்கள் பேசும் பெண்களது நடத்தையை அறிந்து அவளோடு பொருந்தாது விடவேண்டும். 2

பொருள் விரும்பும் பெண்களின் பொய்யான புணர்ச்சி, இருட்டறையில் பிறருடைய பிணத்தை கூலிக்கு தழுவிக் கொண்டது போலாகும். 3

அருட்பொருளை ஆராயும் அறிஞர், பொருட் செல்வத்தை கருதும் பெண்களது, இழிந்த இன்பத்திற்கு இச்சை கொள்ள மாட்டார்கள். 4

இயற்கை அறிவோடு, செயற்கை அறிவாகிய மாண்பு மிக்க கல்வியும் உடையோர் எல்லோர்க்கும் பொதுவாக இன்பந் தரும் பெண்களது சிற்றின்பத்தில் திளைக்கமாட்டார்கள். 5

ஆடல் பாடல் அழகு என்னும் தகைமைகளால் களித்துத் தம் சிற்றின்பத்தை விலை கொடுப்போர் யாவரிடத்தும் பரப்பும் விலை மகளிரது தோளினை, பெரியோர் தீண்டார். 6

உள்ள உரம் இல்லாதவர்களே தம் நெஞ்சில் பொருளை விரும்பி உடலாற் பிறரை புணரும் பெண்டிர் தோள்களைச் சேர்வர். 7

பொது மகளிரது சேர்க்கையதனை ஆராய்ந்தறிந்து விலகும் அறிஞரல்லாதவர்க்கு உயிரைக் கவர்கின்ற பேய்ப்பிடி போலாம் என்பர். 8

சிறந்த அணிகலன்களால் மயக்கும் பொது மகளிரது மெல்லிய தோள்கள், நன்மை தீமையறியாத கீழ் மக்கள் அழுந்தும் நரகமாகும். 9

பொது மகளிரும், கள்ளும், சூதும், திருமகளால் ஒதுக்கப்பட்டவர்களுக்கு சுற்றமாகும். 10

## 93. கள்ளுண்ணாமை

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். 1

உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோ ரான்
எண்ணப் படவேண்டா தார். 2

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 3

நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 4

கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 5

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 6

உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். 7

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும். 8

களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 9

கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 10

## 93. அறிவினை மயக்கும் கள்ளை யுண்ணாமை

கள்ளின்மீது விருப்பங்கொண்டு வாழ்பவர், பகைவரால் அஞ்சப்படமாட்டார், தமக்குற்ற மதிப்பையும் இழப்பர். 1

நல்லோர் கள்ளை உண்ணக் கூடாது. நல்லவர்களால் நன்கு மதிக்கப்பட வேண்டாதவர் வேண்டுமானால் கள்ளை உண்ணலாம். 2

யாது செய்யினும் மகிழும் தாய் முன்பும் கள்ளுண்டு களித்தல் துன்பந்தருவதாகும்; அறிவுடையோர் முன் கள்ளுண்டு களித்தல் எத்துணை வெறுப்பை விளைவிக்கக் கூடும்? 3

யாவரும் இகழும் கட்குடியாகிய பெருங் குற்றமுடையார் முன் நாணம் என்று சொல்லப்படும் நல்லவள் முதுகுகாட்டி நீங்குவாள். 4

ஒருவன் பொருள் கொடுத்து உடலை மறந்து விடுதலாகிய அறியாமையைப் பெற்றுக்கொள்ளுதல் தான் செய்வது இன்னது என்று அறியாத செயலாகும். 5

உறங்குபவர் இறந்தவரின் வேறாகத் தோன்றார்; அது போலவே கள்ளுண்பவர் எக்காலத்தும் உயிர்க் கறிகுறியாகிய அறிவை யிழத்தலால் நஞ்சுண்பவராவர். 6

கள்ளை மறைந்துண்டு அறிவு சோர்பவர் உள்ளூராரால் உண்மையை அறியப்பட்டு எக்காலத்துஞ் சிரித்து இகழப்படுவர். 7

கள்ளுண்பவன், கள்ளுண்டு களித்து அறியேன் என்று சொல்வதை விட்டு விடவேண்டும். கள்ளுண்ட காலத்து தாம் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தவை வெளியாகிவிடும். 8

கள்ளுண்டு மயங்கியவனை, அதனை உண்ணுதல் கூடாது என்று காரணம் காட்டுவது, நீருள் மூழ்கிய ஒருவனை அகல் விளக்கு கொண்டு தேடுவதை ஒக்கும். 9

கள்ளுண்பானொருவன் கள்ளுண்ணாதபோது, கள்ளுண்டு அறிவிழந்த மற்றொருவனைக் காணும் போதாகிலும் தான் உண்ணும்போது உண்டாகும் சோர்வை நினைக்கமாட்டான்போலும். 10

# 94. சூது

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 1

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு. 2

உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். 3

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். 4

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
இவறியார் இல்லாகி யார். 5

அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார். 6

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின். 7

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்
தல்லல் உழப்பிக்குஞ் சூது. 8

உடைசெல்வம் ஊணொளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின். 9

இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉங் காதற் றுயிர். 10

## 94. சூதாட்டம்

திறமை உடையவனானாலும், சூதினை விரும்பக்கூடாது. அதில் வென்ற பொருள் இரை வைத்து மறைத்த தூண்டி லிரும்பினை மீன் இரையெனக் கருதி விழுங்கினாற்போலும். 1

ஒன்றினைப் பெற்று நூற்றினை யிழக்குஞ் சூதாட்டக்காரர்க் கும், நலமடைந்து வாழும் வழி உண்டோ, இல்லை. 2

உருளும் கவற்றினாற் பெறும் பயனை இடைவிடாமல் கூறிச் சூதாடுவானாயின், பொருளும், பொருள் வருவாயும் அவனைவிட்டுப் போய் பிறரிடம் சேரும். 3

துன்பங்கள் பல உண்டாக்கி, உள்ள புகழையும் கெடுக் கும் சூதுபோல், ஒருவனுக்கு வறுமையைத் தருவது வேறொன்று மில்லை. 4

சூதையும், சூதாடுமிடத்தையும், அவனுடும் கைத்தொழி லையும் விரும்பி விடாதவர் எவ்வளவு இருந்தாலும் இல்லாதவரே யாவர். 5

சூது என்னும் மூதேவியால் ஆட்கொள்ளப்பட்டவர் வயிறார உண்ணமாட்டார்; துன்பத்திலேயே உழலுவர். 6

ஒருவனது காலம் சூதாடுமிடத்தில் கழியுமானால் அவ னது தொன்றுதொட்டுவந்த செல்வத்தையும் நற்குணத்தையும் அது போக்கும். 7

ஒருவனது செல்வத்தைக் கெடுத்து பொய்யை மேற் கொள்ளப்பண்ணி அவனது இரக்கக் குணத்தையுங் கெடுத்துத் துன்பத்தில் உழலவைக்கும். 8

ஒருவன் சூதாட்டத்தை விரும்புவானாயின், புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை என்று சொல்லப்பட்ட ஐந்தும் அவ னைச் சேராவாம். 9

பொருள் இழக்க இழக்க மேலுமேலுஞ் சூதாட விரும்பு தல், உயிர், உடம்பால் துன்பங்களை நுகர நுகர உடம்பிற் பற்று மிகுதியாக வைத்தல் போலாம். 10

## 95. மருந்து

மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 1

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின். 2

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. 3

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 4

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை யுயிர்க்கு. 5

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய். 6

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். 7

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 8

உற்றான் அளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல். 9

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென் (று)
அப்பால்நாற் கூற்றே மருந்து 10

## 95. நோயைத் தீர்க்கும் மருந்து

செயலும் உணவும், ஒருவனின் உடலுக்கு ஏற்றஅளவின்றி அதிகமானாலும், குறைந்தாலும் மருத்துவ நூலோர் வாதம், பித்தம், சிலேத்துமம் என எண்ணிய மூன்றும் நோய் செய்யும். 1

ஒருவன் முன்னுண்ட உணவு நன்றாக செரித்து கழிந்ததை நன்கு அறிந்த பின் உண்டால் அவனுடலுக்கு மருந்து என்று ஒன்று வேண்டியதில்லை. 2

உண்டது செரித்துவிட்டால், பின்னுண்பதனை வயிறு செரிக்கும் அளவு உண்ணவேண்டும். அது உடம்பைப் பெற்றவன் அதனை நெடுங்காலம் செலுத்துதற்குரிய வழியாகும். 3

உண்ட உணவு செரித்த தன்மையை அறிந்து முழுப் பசியோடு உண்ணும்போது, உடம்பிற்கு மாறுபாடில்லாதவைகளையே குறிக்கொண்டு உண்ண வேண்டும். 4

உடலுக்கு ஏற்ற உணவை; மனம் விரும்பிய அளவு உண்ணாமல், செரிக்கும் அளவாக ஒருவன் உண்ணுவானானால் அவன் உயிருக்கு நோய்களால் துன்பம் உண்டாதல் இல்லை. 5

குறைவாக உண்ணுதல் நன்றென்றறிந்து உண்பவனுக்கு இன்பம் நிலைப்பதுபோல, அதிகமான உணவு உட்கொள்பவனிடம் நோய் நிலைபெறும். 6

உடல் நிலையும், அதற்கேற்ப உணவையும், காலத்தையும் ஆராயாது, வயிற்றுத்தீயின் அளவையும் ஆராயாது அகற்கதிகமாக உண்பானாயின், அவனிடம் நோய்கள் அளவின்றி வளரும். 7

நோய் இன்னதென்றறிந்து, அந்நோய்க்குக் காரணம் இன்னதென்றறிந்து, அந்நோய் வந்ததன் காரணத்தை அறிந்து, அதனைத் தீர்க்கும் வழியை அறிந்து அதனை பிழையறச் செய்க. 8

நோயாளியின் நிலைமையும், நோயின் அளவையும், மருந்து கொடுக்கும் காலத்தையும் நன்கறிந்து அதற்கேற்றவாறு மருந்துக்கலை வல்லோன் செய்யவேண்டும். 9

மருந்து நான்கு பகுதியையுடையது; அவை பிணியாளன், பிணிதீர்க்கும் மருத்துவன், பிணி தீர்க்கும் மருந்து, மருத்துவனுக்குற்றதுணை என்பன. 10

## 96. குடிமை

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. 1

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 2

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 3

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர். 4

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று. 5

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். 6

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. 7

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். 8

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல். 9

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 10

## 96. உயர் குடிப் பிறந்தாரது தன்மை

நல்ல குடியில் பிறந்தோர்க் கல்லது செம்மையும், நாணமும் ஒருங்கே இயல்பாக அமைவதில்லை. 1

உயர் குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கம், உண்மை, மானம் ஆகிய மூன்றிலுந் தவருமல் நடப்பார்கள். 2

என்றும் ஒழுக்கம் தவருத நற்குடிப் பிறந்தார்க்கு, முக மலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொல்கூறுதலும், இகழாமையும் ஆகிய நான்கும் இயல்பாக உரியன என்று கூறுவர். 3

பல கோடி பொருளேப் பெற்ருலும், உயர்ந்த குடியில் பிறந்தவர் தமது ஒழுக்கம் குன்றும் செயல்களேச் செய்யமாட்டார் கள். 4

பழம் பெருமையுடைய நற்குடியில் பிறந்தவர்கள், தமது செல்வம் சுருங்கிய காலத்தும், தமது குண இயல்பிலிருந்து நீங்க மாட்டார்கள். 5

குற்றமற்ற குடிப் பண்புடன் வாழ்கின்ருேம் என்று எண்ணுபவர், வறுமையுற்றபோதும் வஞ்சனேகொண்டு இழிவான செயல்களேச் செய்யமாட்டார். 6

உயர் குடிப் பிறந்தவர்களிடம் காணப்படும் குற்றம் சிறிதாயினும், வானத்திலுள்ள மதியின் களங்கம்போல் எங்கும் வெளிப்பட்டுத் தோன்றும். 7

நற்குடியில் பிறந்தவனிடம் அன்பில்லாமை காணப்பட்டால், அவன் குடிப் பிறப்பைப்பற்றி உலகத்தோர் ஐயப்படுவர். 8

நிலத்தின் இயல்பை அந்நிலத்தில் முளேத்த முளே காட்டும்; அதுபோல உயர் குடியில் பிறந்தவர் இயல்பை அவர் வாயிலிருந்து வரும் சொற்கள் காட்டிவிடும். 9

ஒருவன் நலத்தை விரும்பினுல் நாணம் உடையவனுக வேண்டும்; நற்குடித் தன்மையை விரும்பினுல் எல்லோரிடமும் பணிந்து நடத்தலே விரும்பவேண்டும். 10

## 97. மானம்

இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல். 1

சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 2

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 3

தலையின் இழிந்த மயி ரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 4

குன்றின் அனையாகும் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின். 5

புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதால் என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. 6

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டா னெனப்படுதல் நன்று. 7

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. 8

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின். 9

இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்து முலகு. 10

## 97. தன்நிலை தாழாமை, தாழ்வு நேரின் வாழாமை

இன்றியமையாத சிறப்பை உடையனவாயினும், குடிப் பெருமை குறைவதற்குரிய செயல்களை செய்யக் கூடாது. 1

புகழுடன் மானமும் விரும்புகிறவர்கள் தான் புகழுடன் திகழும் காலத்தும், இழிவு வரக்கூடிய செய்கைகளைச் செய்யமாட்டார்கள். 2

செல்வம் பெருகியபோது எல்லோரிடத்தும் பணிவு வேண்டும். செல்வம் குறைந்து வறுமையுற்ற காலத்தில் பணியாத உயர்வு வேண்டும். 3

உயர் குடி மக்கள் தமது உயர்ந்த தன்மையிலுமிருந்து நீங்கி இழிவடைந்த காலத்து, தலையைவிட்டு நீங்கிய மயிர்களைப் போலாவார். 4

குடிப் பிறப்பால் மலை போன்ற பெருமை உடையவரும், இழிந்த செயல்களை ஒரு குன்றிமணியளவு செய்தாலும் தமது பெருமையில் குறைவர். 5

மானத்தை விட்டு தன்னை இகழ்வார் பின்னே ஒருவன் சென்று ஒன்றை வேண்டி நிற்கின்ற நிலையானது, புகழ் தராது; வானுலகத்துக்கும் செலுத்தாது. பின் வேறு பயன் என்ன? 6

பகைவர் பின்சென்று ஒருவன் உயிர் வாழ்வதைக் காட்டிலும், தான் நின்ற நிலையிலேயே நின்று இறந்தான் என்று புகழ்ப் படுதல் நல்லது. 7

உயர் குடியின் பெருஞ்சிறப்பு நலங்கெட்டு அழியும்படி நேர்ந்தபோது, இறத்தலை விட்டு உடம்பைப் பாதுகாத்து வாழும் வாழ்வானது இறவாமைக்கு மருந்தாகுமோ. 8

ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வைத்துக்கொண்டிராத கவரிமான் போன்றவர், உயிர் விடுவதனாலேயே மானம் நிலைக்குமானால் உயிரை விடுவர். 9

தம் மானத்திற்கு கேடு வந்தபோது உயிர் வாழ மாட்டாதாருடைய புகழை, உலகோர் தொழுது வாழ்த்துவர். 10

## 98. பெருமை

ஒளியொருவற் குள்ள வெறுக்கை இளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல். 1

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 2

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். 3

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு. 4

பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல். 5

சிறியா ருணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு. 6

இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். 7

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து. 8

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். 9

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 10

## 98. சிறந்த பெரியாரது தன்மை

ஒருவனுக்கு பெரும் மதிப்பாவது, அரியவற்றைச் செய்யக் கருதும் ஊக்க மிகுதியாகும்; ஒருவனுக்கு இழிவாவது ஊக்கமற்று உயிர் வாழ எண்ணுதலாகும். 1

எல்லா மக்களுக்கும் பிறப்பு ஒத்த தன்மையானது; இருந்தாலும் அவர்கள் செய்யும் தொழில் வேற்றுமையினால் பெருமை ஒத்திருப்பதில்லை. 2

சிறியோர் உயர்ந்த இடத்திலிருந்தாலும் பெரியாராகார்; பெரியோர் தாழ்ந்த இடத்திலிருந்தாலும் சிறியோராகார். 3

நிலைபெற்ற மனமுடைய கற்புடைப் பெண்டிர்போல, ஒருவன் தன்னைத்தானே உறுதியில் வழுவாமற் காத்து நடந்தால், அவனுக்கு பெருமை உண்டாகும். 4

பெருந்தன்மையுடைய பெரியவர்கள், பிறர் செய்வதற் கியலாத செயல்களை முறையாகச் செய்து முடிப்பார். 5

பெரியவர்களை விரும்பி அவரைத் துணையாகக் கொள்வோம் என்னும் கருத்து, சிறியவர்கள் மனத்தில் நிலைபெறுவதில்லை. 6

சிறப்புகள் சிறியவர்களிடம் உண்டாகுமாயின், அந்தச் சிறப்புகள் செருக்கினால் வரம்பு கடந்த செயல்களை உடையவராக்கிவிடும். 7

பெரியோர் என்றும் பணிவுடையவர்களாகவே யிருப்பார்கள்; சிறியோர் தம்மைத் தாமே புகழ்ந்து பெருமை படுத்திக் கொள்வர். 8

பெருமை என்று கூறும் பண்பாவது செருக்கில்லாமலிருத்தல்; சிறுமை என்று கூறும் பண்பாவது செருக்கினை அளவு கடந்து கொள்ளுதல். 9

பெரியோர் பிறரது மானக்கேட்டை மறைத்துப் பேசுவர்; சிறியோர் பிறரது குற்றங்களையே கூறுவர். 10

## 99. சான்றாண்மை

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 1

குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. 2

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண். 3

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 4

ஆற்றுவா ராற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 5

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். 6

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 7

இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 8

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக் (கு)
ஆழி யெனப்படு வார். 9

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 10

## 99. நற்குணங்களால் நிறைந்தவர் தன்மை

நமக்குத் தகுவது இதுவென்றறிந்து எல்லா நற்குணங் களையும் மேற்கொள்பவருக்கு நல்ல முயற்சிகளெல்லாம் இயல்பாக உள்ளன என்று அறிவுடையோர் கூறுவர். 1

சான்றோர்களது சிறப்பு குணநலச்சிறப்பாகும்; குணநல மொழிந்த எவ்வகையான நன்மையினும் சேர்ந்ததாகாது. 2

அன்புடைமை, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்தும், நற்குண நிறைவு என்னும் கூரையைத் தாங்கும் தூண்களாகும். 3

நோன்பு என்பது ஓருயிரையும் | கொல்லாமையாகிய நன்மையின்பாற்படும்; அதுபோல நற்குண நிறைவு (சால்பு) என்பது பிறர் குற்றத்தை எடுத்துரையாத குணத்தின் பாற்படும். 4

பணிவாக நடத்தல் காரியத்தை முடிப்பவரது ஆற்றலைக் காட்டும், சான்றோர் தம் விரோதிகளை நண்பராக்குங் கருவியும் அதுவேயாகும். 5

சால்பு என்பதற்கு உரைகல் எதுவெனில், தன்னைவிடத் தாழ்ந்தவரிடத்தும் தோல்வியை ஏற்றுக்கொள்ளுதலாகும். 6

தமக்குத் துன்பமானவற்றைச் செய்தவர்களுக்கும், நன்மையே செய்யாராயின், அவருடைய சால்பு என்ன பயனை உடையது? 7

ஒருவர்க்குச் சால்பு என்னும் உறுதி உண்டாகப் பெற்றால் வறுமையானது அவர்க்கு இகழ்ச்சியாகாது. 8

சான்றாண்மை என்னும் கடலுக்கு கரையென்று சொல்லப்படுபவர் ஊழிக்காலத்தின் வேறுபாடுகளே நேர்ந்தாலும் தம் நிலையில் மாறுபடார். 9

நற்குண நிறைவுடையோர் தம் நிலை குன்றுவாராயின், பெரிய நிலவுலகமும் தன் சுமையைத் தாங்காததாகிவிடும். 10

## 100. பண்புடைமை

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. 1

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. 2

உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதா மொப்பு. 3

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு. 4

நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 5

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். 6

அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 7

நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை. 8

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். 9

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 10

## 100. உலகியல் பறிந்து நடத்தல்

யாவரிடத்தும் இனிய குணமுடையவனென்று வழங்கப் பெறுதல், எல்லோரிடமும் எளிய செவ்வியுடன் இருப்பதால் அடைதல் கூடும் என்பர். 1

எல்லோரிடமும் அன்புடையவராயிருத்தலும் உயர் குடி பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும், பண்புடைமை என்று கூறும் நன்னெறியாகும். 2

ஒத்திருப்பது என்பது மனிதர்கள் உறுப்பால் ஒத்திருப் பதன்று; நெருங்கி அளவளாவுதற்குரிய உள்ளப் பண்பால் ஒத் திருப்பதே ஒப்பாகும். 3

முறையையும், நன்மையையும் விரும்பி பிறருடைய பய னைக் கருதி வாழ்வாருடைய பண்பினை உலகத்தார் போற்றி கொண்டாடுவார். 4

விளையாட்டிலுங்கூட ஒருவரை யிகழ்தல் துன்பம் தரு வதாகும்; உலகியல்பறிந்த நல்லவரிடம் பகையிருந்தாலும் நல்ல குணங்கள் விளங்கும். 5

பண்புடையாரிடத்தில் பொருந்தி நிலைப்பதால் உலக மானது நிலைத்து நடைபெறுகிறது. அஃதில்லை யானால் உலகியல் மண்ணில் புதைந்து மாய்ந்து போய்விடும். 6

அரத்தைப் போல கூர்மையான அறிவுடையராயிருந்தா லும் மனிதப் பண்பில்லாதவர்கள் மரத்திற்கு ஒப்பாவர். 7

தம்மொடு நட்புக்கொள்ளாது பகை கொள்வாரிடத்தும் தாம் பண்புடையவராய் நடந்து கொள்ளாமை அறிவுடையார்க் குக் குற்றமாகும். 8

பண்பின்மையால் ஒருவரோடும் கலந்து பழகி மனமகிழ மாட்டாதவர்களுக்கு, இந்த பெரிய உலகமானது இருளற்ற பகற்காலத்திலும் இருளின் கண் கிடந்ததாகும். 9

பண்பில்லாதவன் பெற்ற செல்வம் ஒருவருக்கும் பயன் படாமற்போதல், நல்ல ஆவின் பாலை ஊற்றி வைத்த கலத்தின் குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாமல் போவது போலாகும். 10

# 101. நன்றியில்செல்வம்

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில். 1

பொருளானாம் எல்லாமென் றீயா திவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 2

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. 3

எச்சமென் றென்எண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன். 4

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில். 5

ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் தக்கார்க்கொன்
றீதல் இயல்பிலா தான். 6

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. 7

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. 8

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். 9

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. 10

## 101. பயனில்லாத செல்வத்தின் இயல்பு

வீடு நிறைய பெரும் பொருள் சேர்த்து வைத்தவன் அதனை நுகராவிடின், அவன் இருந்தும் இறந்தவனுவான். அவன் அப் பொருளைக் கொண்டு செய்தற்குரியது ஒன்றுமில்லை. 1

செல்வத்தால் எல்லாம் செய்யக் கூடும் என்று எண்ணி அதனை ஒருவருக்கும் ஈயாது அதன்மீது பற்று வைக்கும் மயக்கத்தால் சிறப்பில்லாத பிறவி உண்டாகும். 2

பொருள் சேர்ப்பதையே விரும்பி, ஈயாது இறுகப் பிடித்து ஈகையால் வரும் புகழை விரும்பாத மக்களது பிறப்பு நிலத்துக்குச் சுமையாகும். 3

ஒரு பொருளும் ஈயாததால் ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்த பின் எஞ்சியிருப்பது என்னவென்று நினைப்பானே தெரியவில்லை. 4

பிறர்க்குக் கொடுப்பதும், தாம் நுகர்வதும் இல்லாதவர்க்கு அடுக்காகப் பல கோடி பொருள் இருப்பினும், இல்லாதனவேயாம். 5

தானும் நுகராதவனுய், தகுதியுடையார்க்கு ஒன்றைக் கொடுக்கும் இயல்பு இல்லாதவனுயின் அவனது பெருஞ் செல்வம் ஒரு நோயாகும். 6

ஏழைகளுக்கு ஒரு பொருளைக் கொடுக்கமாட்டாதவனுடைய செல்வம், எழில்மிக்க கன்னி, கணவனின்றி தனித்து வாழ்ந்து மூப்படைந்தது போலாகும். 7

ஈயும் இயல்பு இல்லாமையால் பிறரால் விரும்பப்படாதவனுடைய செல்வம் ஊர் நடுவில் நச்சுமரம் பழுத்தாற்போலும். 8

உறவினனிடம் அன்பின்றி தன்னையும் வருத்தி அறத்தையும் கருதாமல், தேடிய பெரும் பொருள் மற்றவரால் எடுத்துக் கொள்ளப்பட்டு நுகரப்படும். 9

புகழுடைய செல்வர் சிறிதுகாலம் வறுமைப்பட்டிருப்பது; மேகமானது கொஞ்சகாலம் வறண்டு போனற்போன்ற தன்மையுடையது. 10

## 102. நாணுடைமை

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1

ஊணுடை யெச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. 2

ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு. 3

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை. 4

பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு. 5

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 6

நாணா லுயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்டுறவார் நாணாள் பவர். 7

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து. 8

குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. 9

நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. 10

## 102. ஒவ்வாத செயல்களைச் செய்யக் கூசுதல்

நாணுவது இழிந்த செயல்களைச் செய்யக் கூசுதல், நற்குலப் பெண்டிரது அடக்கம் காரணமாக வரும் நாணம் வேறு வகையானவை. 1

உணவு, உடை, இவையொழிந்த மற்றவையும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானதாகும்; நாணுடைமை மக்களுக்குச் சிறப்பினைத் தருவதாகும். 2

எல்லா உயிர்களும் உடம்புகளை இருப்பிடமாகக் கொண்டுள்ளன. அதுபோல சால்பானது நாண் என்னும் நற்குணத்தை நிலைக்களமாகக் கொண்டுள்ளது. 3

நாணுடைமை சான்றோர்க்கு அழகு தரும் அணியாகும். அஃதில்லையானல், அவர்களது பெருமித நடையானது ஒரு வியாதியாகுமல்லவா? 4

பிறர்க்கு வரும் பழியையும், தமக்கு வரும் பழியையும் ஒன்றுபோல எண்ணி அஞ்சுகின்றவர்களை, நாணுடைமைக்கு இருப்பிடமானவர் என்று உலகம் போற்றும். 5

உயர்ந்தோர் நாணத்தைத் தமக்கு காவலாகக் கொள்வாரேயன்றி, அதனை அகற்றி அகன்ற உலகில் வாழ்வதை விரும்பமாட்டார்கள். 6

நாணமுடையோர், நாணத்திற்காக உயிரை விடுவாரேயன்றி உயிரைக்காக்க நாணத்தை இழக்கமாட்டார்கள். 7

நாணமடையத்தக்க செயல்களை ஒருவன் நாணது செய்வானாயின், அறமானது அவனிடம் இருக்க நாணுந்தன்மையை உடையதாகும். 8

ஒருவனுக்கு ஒழுக்கம் தவறுமாயின் அது அவனுடைய குடிப்பிறப்பைக் கெடுக்கும், நாணமில்லாமை ஒருவனிடம் நிலைத்தால் அஃது அவனுடைய நலம் அனைத்தையும் கெடுக்கும். 9

நெஞ்சில் நாணமில்லாதார் நடக்கை, மரத்தினுற் செய்த பதுமை, கட்டிய கயிற்றினுல் இயங்கி உயிருள்ளதாகக் காட்டுவது போலாம். 10

## 103. குடிசெயல்வகை

கருமஞ் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில். 1

ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையான் நீளுங் குடி. 2

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 3

சூழாமல் தானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு. 4

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. 5

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 6

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 7

குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும். 8

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. 9

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி. 10

## 103. பிறந்த குடியை மேம்படுத்தும் வகை

தன் குடியை உயர்த்தும் பொருட்டு செய்யவேண்டிய கடமைகளை செய்வதற்குச் சலிக்கமாட்டேன் என்னும் பெருமையை விட ஒருவருக்கு மேம்பட்டது இல்லை. 1

முயற்சியும், நிறைந்த அறிவும் என்ற இரண்டின் இடையறாத செயலால் ஒருவனது குடி உயர்வடையும். 2

எனது குடியை நான் உயரச் செய்வேன் என்று முயற்சி செய்யும் ஒருவனுக்கு தெய்வம் ஆடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு உதவி செய்ய முற்பட்டு நிற்கும். 3

தன் குடி உயர்வதற்குரிய முயற்சியை இடைவிடாது செய்ய விரைந்து முயல்வார்க்கு, எதிர்பாராத வண்ணம் அச் செயல் தானே நிறைவேறும். 4

குற்றமற்றவனாய் தன்குடியை உயரச் செய்து வாழ்பவனை உலகத்தார் சுற்றமாகக் கருதி அவனைச் சூழ்ந்துகொண்டிருப்பர். 5

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது யாதெனில், தான் பிறந்த குடியினை ஆளுந் தன்மையை தானே உண்டாக்கிக் கொள்ளுதல். 6

போர்க்களத்தில் அதனை நன்கு நடத்தி வெல்லும் பொறுப்பு வீரரைச் சார்ந்ததுபோல், குடும்பத்திலும் வலியுடையார் மேல் அதனைத் தாங்கி நடத்தும் பொறுப்பு உள்ளது. 7

தங்குடியினை உயரச் செய்வோர் காலத்தை நோக்கி சோம்பலை மேற்கொண்டு மானத்தை நோக்குவாராயின் குடிகெட்டுவிடும் ஆகையால் தங்குடியை உயரச்செய்வார்க்கு காலவரையறையில்லை.

தன் குடும்பத்திற்கு குற்றம் வராமல் காக்க முயல்பவனது உடம்பு, துன்பத்திற்கே இருப்பிட மானதோ! 9

தன்குடி சாயும்போது அதனை வீழாமல் தாங்கும் நல்ல ஆண்மகன் இல்லாத குடி, துன்பமாகிய கோடரியால் வெட்டுண்டு சாய்ந்து வீழ்ந்தொழியும். 10

## 104. உழவு

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. 1

உழுவார் உலகத்தார்க் (கு) ஆணியஃ தாற்ரு (து)
எழுவாரை எல்லாம் பொறுத்து. 2

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். 3

பலகுடை நீழலுந் தங்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். 4

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 5

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை. 6

தொடிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 7

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. 8

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும். 9

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 10

## 104. சிறந்த உழவு முயற்சி

பிற தொழில்களைச் செய்து திரிந்தாலும், ஏருடையார் பின்னே உலகத்தார் நின்று பிழைக்க வேண்டியிருப்பதால் வருந்தி முயலக்கூடியதாயினும் உழவுத் தொழிலே தலைசிறந்தது. 1

உழவுத் தொழிலைச் செய்யாது வேறு தொழில்கள் செய்வாரை எல்லாம் தாங்குதலால், உழுவார் உலகத்தாராகிய தேருக்கு அச்சாணியாவர். 2

யாவரும் உண்ணும்படி உழவுத் தொழில் செய்து அதனால் தாமும் உண்டு வாழ்கின்றவர்களே சிறப்பாக வாழ்பவராவர்; மற்றவர் பிறரை வணங்கி உண்டு பின் செல்கின்றவராவர். 3

நெல்வளமுடைய கருணையாளர், பலமன்னரின் குடை நிழலில் உள்ள மண்முழுவதையும் தமதரசர் குடை கீழ் ஆகச் செய்வார். 4

தம் கையினால் உழவுத் தொழில்செய் துண்ணும் இயல்பினர் பிச்சையெடுக்க மாட்டார், தம்மிடம் பிச்சை கேட்பவர்க்கு வேண்டியதை ஒளிக்காமல் கொடுப்பர். 5

உழவர்கள் கை தம் தொழில்களைச் செய்யாதிருக்குமாயின், யாவரும் விரும்பும் உணவு இல்லை. துறந்தவர்களும் தங்கள் நிலையில் நிற்றல் முடியாது. 6

நிலத்தின் ஒருபலப் புழுதி காற்பலமாக உலரும்படி செய்வானாயின், ஒருபிடி எருவுங்கூட இல்லாது நிலம் நன்றாக விளையும். 7

உழுவதைக் காட்டிலும் எருவிடுதல் நல்லது, களையெடுத்த பின் நீர்பாய்ச்சுவதைப் பார்க்கிலும் பயிரை அழிவெய்தாமற் காப்பது நல்லது. 8

நிலத்துக்கு உரியவன் நிலத்தைக் காலா காலங்களில் சென்று காணானாயின், அது மனைவியை போல அவனோடு பிணங்கிப் பயன் தாராமல் போகும். 9

'யாம் வறியோம்' என்று சொல்லிச் சோம்பி இருப்பவரைக் கண்டால் நிலமென்னும் நல்லாள் அவர்கள் சோம்பலை இகழ்ந்து தனக்குள் சிரிப்பாள். 10

## 105. நல்குரவு

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. 1

இன்மை யெனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். 2

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னும் நசை. 3

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும். 4

நல்குர வென்னும் இடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். 5

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 6

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 7

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலும் நிரப்பு. 8

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது. 9

துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்குங் காடிக்குங் கூற்று. 10

## 105. பொருளில்லாமை

வறுமையைப் போலக் கொடியது எது வென்றால், வறுமையைப் போலத் துன்பந்தருவது வறுமையே யாகும். 1

வறுமை என்று சொல்லப்படும் ஒருபாவி, ஒருவனை அணுகினால், அவனுக்கு இம்மை, மறுமை இன்பங்கள் இல்லாமற் போகும்படி வரும். 2

வறுமை என்னும் ஆசையானது, தொன்றுதொட்டு வரும் குடிப்பிறப்பையும், புகழையும் ஒருங்கே கெடுக்கும். 3

உயர்க்குடியில் தோன்றினவரிடத்தும் இழிவுக்குக் காரணமான சொற்கள் பிறக்கும் சோர்வினை வறுமை உண்டாக்கி விடும். 4

வறுமை என்னும் துன்பம் ஒன்றினால், பலவகைப்பட்ட துன்பங்களும் சென்று அடங்கும். 5

உண்மைப் பொருளை நன்குணர்ந்து கூறினும், வறியவர் கூறும் சொல்லும் பொருளும், ஏற்றுக்கொள்ளப்படாது பயனற்றுப் போகும். 6

அறத்துடன் பொருந்தாத வறுமையாளன், ஈன்ற அன்னையாலும் அயலான் போலக் கருதப்படுவான். 7

"நேற்று வந்து என்னை கொன்று தின்ற வறுமை என்னும் துன்பம், இன்னும் என்னை அணுகுமோ? வந்தால் என் செய்வேன்?" என்று வறியவன் வருந்துவான். 8

தீயின் மத்தியில் ஒருவன் உறங்குதலும் முடியும்; ஆனால், வறுமை நெருப்பில் நின்றவன் எந்தவிதத்தாலும் கண்மூடித் தூங்க முடியாது. 9

அனுபவிக்கப்படும் பொருள்கள் இல்லாத வறியவர், முற்றுந் துறவாது வருந்துதல், பிறர் வீட்டிலுள்ள உப்புக்கும் காடிக்கும் கேடாவர். 10

## 106. இரவு

இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று. 1

இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை
துன்பம் உறுஅ வரின். 2

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்நின்
றிரப்புமோ ரேஎர் உடைத்து. 3

இரத்தலும் ஈதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. 4

கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது. 5

கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லா மொருங்கு கெடும். 6

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து. 7

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. 8

ஈவார்கண் என்னுண்டாந் தோற்றம் இரந்துகோள்
மேவா ரிலாஅக் கடை. 9

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி. 10

## 106. பிறரிடம் ஒன்றைக் கேட்டுப் பெறுதல்

ஏழைகள் இரந்து கேட்கத் தகுதியுடையவரைக் கண்டால் அவரிடம் இரக்கவேண்டும்; அவர் இல்லை என்று ஒழிப்பாராயின் அது அவரது பழியே அன்றி இரப்பவர் பழியன்று. 1

இரந்த பொருள்கள் துன்பமடையாமல் வருமாயின், ஒருவனுக்கு இரப்பதும் இன்பமே யாகும். 2

ஒளித்தல் இல்லாத உள்ளமுடைய மானமறிவார் முன் நின்று இரந்து ஒன்றைக் கேட்டலும் வறியோர்க்கு ஓர் அழகை உடையது. 3

தமக்குள்ளதை இல்லை யென்று கனவிலும் மறைத்துக் கூற அறியாதவரிடம் ஒன்றை யாசித்தாலும் பிறருக்கு கொடுப்பதனோ டொக்கும். 4

ஒருவர்க்கு எதிரில் நின்று இரப்பவர் இரக்குந்தொழிலை மேற்கொள்வது, உள்ளதை ஒளிக்காமல் கொடுப்பவர் சிலர் உலகத்தில் இருப்பதால்தான். 5

உள்ளதை ஒளித்த லெனும் நோயற்றவரைக் கண்டால், இரப்பவரின் துன்பம் அனைத்தும் ஒருசேரக் கெடும். 6

தம்மை இகழ்ந்து இழிவு படுத்தாமல் பொருள் கொடுப்பாரைக் கண்டால், இரப்பவரின் நெஞ்சம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே இன்பம் அடையும். 7

ஏழ்மையினால் இரப்பவர்கள் இல்லையானால், குளிர்ந்த பெரிய உலகினுள்ளவர் வரவு செலவுகள், உயிரில்லாத மரப் பாவை கயிற்றினால் சென்றுவந்து இயங்குதலை ஒக்கும். 8

இரந்து பெற்றுக் கொள்வதை விரும்பாதவர் இல்லை யென்றால், கொடுப்பவரிடத்தில் எவ்வாறு புகழ் உண்டாகும்? 9

பிறரிடம் வேண்டிப் பெறுபவன் எவரிடமும் வெகுளா திருத்தல் வேண்டும். இல்லாமை எல்லார்க்கும் நேரும் என்பதை அறிய தனது வறுமைத் துன்பமொன்றே சான்றாக அமையும். 10

## 107. இரவச்சம்

கரவா துவந்தியுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும். 1

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். 2

இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். 3

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு. 4

தெண்ணீர் அடுபுற்கை யாயினுந் தாள்தந்த
துண்ணலின் ஊங்கினிய தில். 5

ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில். 6

இரப்பன் இரப்பாரை யெல்லாம் இரப்பிற்
கரப்பார் இரவன்மி னென்று. 7

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். 8

இரவுள்ள உள்ளம் உருகுங் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 9

கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஓம் உயிர். 10

## 107. மானங் கெடவரும் இரவுக்கு அஞ்சுதல்

உள்ளத்தை மறைக்காமல் மனமுவந்து கொடுக்கும் கண் போலச் சிறந்தவரிடமும் இரவாமல் இருத்தல், இரந்து அடையும் செல்வத்தைவிடக் கோடி மடங்கு நல்லது. 1

உலகை உண்டாக்கியவன் மக்கள் தம் முயற்சியால் வாழாமல், பிறர்பால் சென்று இரந்தும் உயிர் வாழுமாறு ஏற்படுத்தியிருந்தால், அவன் இரப்பாரைப் போன்று எங்கும் திரிந்து கெடுக.

ஏழ்மைத் துயரை முயற்சியால் நீக்காமல் இரப்பதன் மூலம் நீக்குவோம் என்று எண்ணும் வன்மையைப்போல முரட்டுத் தன்மையுடையது வேறு இல்லை. 3

வாழ்வதற்கு பொருள் இல்லாத போதும், இரந்து வாழ்வதற்கு இசையாத நிறைகுணம், உலகின் அகன்ற நிலமெல்லாம் ஒன்று சேரினும் ஒப்பாகாத பெருமையுடையதாகும். 4

தெளிந்த நீர்போலக் காய்ச்சிய கஞ்சியே யானாலும், உழைத்த பொருளினால் கிடைத்ததை உண்பதைவிட இனிமையானது வேறொன்று இல்லை. 5

நீர் வேட்கை மிகுந்து பசுவுக்கு தண்ணீர் வேண்டும் என்று இரந்து கேட்டாலும், அவ்விரத்தலைக் காட்டினும் ஒருவன் நாவிற்கு இழிந்தது வேறொன்றில்லை. 6

நீங்கள் இரக்க வேண்டுமானால் இருப்பதை மறைப்பவனிடத்தில் சென்று இரக்க வேண்டாம் என்று இரப்பவர் அனைவரையும் நான் இரந்து வேண்டுகிறேன். 7

வறுமைக் கடலைக் கடக்க அழைத்துக் கொண்ட இரத்தல் என்னும் கப்பலானது, இருப்பதை இல்லை என்னும் கற்பாறையில் மோதினால் உடைந்தொழியும். 8

இருப்பவரிடம் சென்று இரந்து நிற்கும் கொடுமையை நினைத்தால் உள்ளம் கரைந்து உருகும்; இரப்பவர்க்கு மறைக்கும் கொடுமையை நினைத்தால் அவ்வுருகும் நிலையுமின்றி அழியும். 9

இருப்பதை மறைத்து இல்லை யென்று சொன்னவுடனேயே இரப்பவர்க்கு உயிர் போகின்றது. இருப்பதை மறைத்தவர்க்கு உயிர் எங்குபோய் மறைந்திருக்குமோ? அறியேன். 10

## 108. கயமை

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில். 1

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் இலர். 2

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். 3

அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ். 4

அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது. 5

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 6

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு. 7

சொல்லப் பயன் படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். 8

உடுப்பதூஉம் உண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். 9

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. 10

## 108. கீழோரது தன்மை

உருவால் மக்களைப் போன்றிருப்பர் கயவர், அவர் மக்களை ஒத்தாற் போன்ற ஒப்பு வேறு பொருள்களிடத்திலும் யாங் கண்டதில்லை. 1

நன்மையானவற்றை அறிவாரைக் காட்டிலும், கீழ் மக்களே நல்லவராவர்; ஏனெனின் அக் கீழ் மக்கள் தம் மனதில் எதையும் அறிய வேண்டும் என்ற கவலை இல்லாதவர். 2

கயவரைப் போலவே தேவரும் விரும்புவதைச் செய்தலால் தேவரும் கயவரும் ஒரே தன்மையராவர். 3

கீழ்மகன் தன்னைவிட தாழ்வாய் நடப்பவரைக் கண்டால் அவரைக் காட்டிலும் தான் உயர்ந்தவனென்று இறுமாப்புக் கொள்வான். 4

கயவரிடம் ஒழுக்கம் காணப்படின் அதற்குக் காரணம் தண்டிக்கப்படுவோம் என்ற பயம். அஃதொழிந்தால் தாம் விரும்பும் பொருள் உண்டாகுமாயின் சிறிது ஒழுக்கம் உண்டாகும். 5

தாம் கேட்ட மறைபொருளை பிறர்க்கு விரைந்து சொல்லுதலால் கீழ் மக்கள் அறையப்படும் பறை போன்றவராவர். 6

கீழ் மக்கள், தமது கன்னத்தை நொறுக்கும் வளைந்த கையை உடையவருக்கல்லாமல் தாம் உண்டு கழுவிய ஈரக் கையையும் உதறமாட்டார்கள். 7

மேலார் ஒருவன் தன் குறையைச் சொன்னவுடனே அவருக்கு உதவுவர்; அதுபோலல்லாமல் கீழோர் கரும்பைப் போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன் படுவர். 8

கீழ்மகன், பிறர் நன்கு உண்டு உடுப்பதைக் கண்டு அவர் மேல் பொறாமை கொண்டு அவரிடத்தில் குற்றமில்லாவிடினும் குற்றமுண்டாக்க வல்லவனாவான். 9

கீழ்மக்கள் தமக்குக் குறை நேர்ந்தபோது அது தீர்த்தற் பொருட்டு தம்மை பிறர்க்கு அடிமைப் படுத்தற் குரியர்; அதுவன்றி வேறு எதற்குரியர்? 10

# 3. காமத்துப்பால்

## 109. தகையணங்குறுத்தல்

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு. 1

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. 2

பண்டறியேன் கூற்றென் பதனை இனிஅறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு. 3

கண்டார் உயிருண்ணுந் தோற்றத்தான் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண். 4

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து. 5

கொடும்புருவங் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண். 6

கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். 7

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. 8

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்
கணியெவனோ ஏதில தந்து. 9

உண்டார்கண் அல்ல தடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 10

## 109. காதலியின் அழகு தன்னை வருத்தலைக்கூறுதல்

கனத்த குழை அணிந்த இவள், தேவ மகளோ, அழகான மயிலோ, மனிதப் பெண்ணோ, "இவள் யார்?" என்று துணிய முடியாது நெஞ்சு மயங்குகின்றதே. 1

இத்தகைய அழகுடையாள் எனது நோக்கத்திற்கு எதிர் நோக்குதல், தானே தாக்கி வருத்தும் அணங்கு ஒரு படையையும் கொண்டு வந்து தாக்கினாற் போன்றது. 2

கூற்று என்று கூறுவதை முன்பு கண்டறிந்ததில்லை; இப்போது அறிந்தேன், பெண் தன்மையுடன் போர் செய்யும் பெருங் கண்களை யுடையது. 3

பெண்தன்மை உடைய இந்தப் பேதைக்கு உள்ள கண்கள், தம்மைக் கண்டவரது உயிரை உண்ணும் தோற்றத்துடனே கூடி மாறுபட்டிருக்கின்றன. 4

கூற்றமோ! இரக்கப்பார்வை யிருப்பதால் கண்ணோ! மருளுவதால் பெண்மானோ! இந்த இளம் பெண் நோக்கம் இம் மூன்று தன்மைகளையும் உடையதாயிருக்கிறது. 5

கொடும் புருவங்கள் கோணுதலில்லாமல் தடுக்குமானால், அப்புருவங்களைக் கடந்து வந்து இவள் கண்கள் எனக்கு நடுக்கத் தைத் தரும் துன்பம் செய்யாது. 6

இவளுடைய நிமிர்ந்த முலைமேல் அணிந்த மேலாடை யானது, வெற்றி யானையின் மேல் இட்ட முகப் படாம் போன்றது.

போர் களத்தில் எதிரிகள் கண்டு அஞ்சும் என் ஆற்றல், இவளது ஒளி நிறைந்த நெற்றிக்கு ஆற்றாது அழிந்து விட்டது. 8

பெண்மானைப் போன்ற பயந்த தன்மையுடைய கண்களும், நாணமும் உடைய இவளுக்கு, வேறு அணிகள் அணிவது எதைக் குறித்தோ. 9

கள்ளானது உண்டவர்க்கு மட்டுமே அல்லாது காமத்தைப் போல் தன்னைக் கண்டவர்க்கும் மயக்கத்தை உண்டாக்குவதில்லை.

## 110. குறிப்பறிதல்

இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. 1

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாகம் அன்று பெரிது. 2

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர். 3

யானோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும். 4

குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். 5

உறாஅ தவர்போல் சொலினுஞ் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும். 6

செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார் போல் நோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு. 7

அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும். 8

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. 9

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில. 10

# 110. குறிப்பறிதல்

இவளுடைய மையுண்ட கண்களில் இருவகைப் பார்வை இருக்கின்றன; ஒரு பார்வை நோய்தரும் பார்வை, அடுத்தது அந்த நோய்க்கு மருந்தாகிய பார்வை. 1

இவள் கண்கள் யான் காணாதபோது கள்ளத்தனமாய் பார்த்த சிறிய பார்வையானது, புணர்ச்சியில் நேர்பாதி யன்று; அதைவிடப் பெரியது. 2

என்னை அன்போடு பார்த்தாள்; நான் பார்த்ததும் வெட்கித் தலைகுனிந்தாள். அந்தக் குறி எங்களிடம் அரும்பிய அன்புப் பயிர் வளர அவள் ஊற்றிய நீராகும். 3

நான் பார்க்கும்போது அவள் தலைகுனிந்து நிலத்தைப் பார்ப்பாள், நான் பாராவிடின் அவள் என்னைப் பார்த்து அக மகிழ்வாள். 4

நேராக என்னைக் குறித்துப் பாராததே யல்லாமல் ஒரு கண்ணைச் சுருங்கினாற் போலப் பார்த்து உள் மகிழ்வாள். 5

வெளிக்கு அயலார் போலக் கடுஞ்சொல் கூறினாலும், உள்ளுக்குள் பகையில்லாதவரின் சொல் என்பதை விரைவில் அறியப் படும். 6

முதலில் இன்பந் தராத கடுஞ் சொல்லும், பகைவர் போன்ற கோபப் பார்வையும், வெளிக்கு அயலார் போல நடித்து உள்ளத்தில் அன்பு கொண்டவரின் குறிப்பாகும். 7

நான் வருந்தி நோக்கிய போது, அதற்காக இரங்கி மெல்ல புன்னகை செய்வாள், அசையும் இயல்பினை யுடையவளுக்கு அந் நகையில் ஓர் நன்மைக் குறிப்புண்டு. 8

முன்பின் அறியாதவர் போல ஒருவரை ஒருவர் பொது வாகப் பார்த்து கொள்ளுதல் உள்ளத்தே காதல் கொண்டவர்க ளிடமே உள்ளது. 9

காதலர் இருவரின் கண்கள் நோக்கால் ஒத்திருக்குமாயின், வாயிலிருந்து வரும் சொற்கள் பயனற்றுப் போகின்றன. 10

## 111. புணர்ச்சிமகிழ்தல்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள. 1

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. 2

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு. 3

நீங்கின் தெறூஉங் குறுகுங்கால் தண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள். 4

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 5

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள். 6

தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. 7

வீழும் இருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. 8

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமங்
கூடியார் பெற்ற பயன். 9

அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. 10

## 111. புணர்ச்சி இன்பத்தை மகிழ்ந்து கூறல்

கண்டும் கேட்டும் உண்டும் மோந்தும் தொட்டும் இன்புறும் ஐம்புல இன்பங்களும் ஒளிபொருந்திய வளையல் அணிந்த இவளிடத்தில் உள்ளன. 1

நோய்க்கு மருந்து வேறாக இருக்கின்றன; ஆனால் அணிகள் அணிந்த இவளால் வந்த நோய்க்கு இவளே மருந்தானாள். 2

தம்மால் விரும்பப்படும் காதலியின் தோள் மேல் துயிலும் துயிலைவிட, தாமரைக் கண்ணனுடைய உலகில் மேம்பட்ட இன்பம் இருக்கிறதோ? 3

விட்டு நீங்கினால் சுடுகிறது; நெருங்கினால் குளிர்ச்சி தருகிறது இத்தன்மை வாய்ந்த நெருப்பை இவள் எவ்விடத்தில் பெற்றாள்? 4

நான் விரும்பிய புதுப்புது பொருள்கள் புதுப்புது இன்பம் தருவது போல மலரணிந்த கூந்தலை உடைய இவளது தோள்கள் எப்போதும் புதுமையான இன்பத்தைத் தருகின்றன. 5

சேருந்தோறும் என்னுயிர் தழைக்கும்படி தீண்டுதலால், இந்தப்பேதைக்கு தோள்கள் அமிழ்தினால் செய்யப்பட்டதாகும். 6

அழகிய பொன்னிற முடைய மங்கையினது புணர்ச்சியானது, தம் முயற்சியால் வந்த பொருளை உரியவர் யாவர்க்கும் பகுத்துத் தந்து தானும் நுகர்வது போலிருக்கிறது. 7

காற்று இடையறுத்துப் போகாதபடி, தழுவிச் சேரும் சேர்க்கையானது ஒருவரை ஒருவர் விரும்பும் இருவர்க்கும் இனிமையைத் தரும். 8

புணர்ச்சி இன்பம் மிகும் பொருட்டு, ஊடுதலும், அதனை அளவறிந்து நீங்குதலும், பின் கூடுதலும் என்னும் இவையன்றோ காதலாற் பிணிக்கப்பட்டவர்கள் பெற்ற பயன்கள். 9

அறிய அறிய முன்னிருந்த அறியாமையைக் கண்டது போல, சிவந்த அணிகளை அணிந்த இவளைப் புணரப் புணரக் காதலானது மேம்பட்டு இன்பந் தருகின்றது. 10

## 112. நலம் புனைந்துரைத்தல்

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். 1

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று. 2

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. 3

காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று. 4

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 5

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். 6

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 7

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. 8

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி. 9

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 10

## 112. தலைவியின் நலத்தை புனைந்து சொல்லல்

அனிச்சப் பூவே! நீ வாழ்வாயாக; நீ எல்லாப் பூக்களைவிட மென்மையான நல்ல இயல்புடையாய்; எம்மால் விரும்பப்படுபவள் உன்னைவிட மெல்லியல்புடையவள். 1

நெஞ்சே! இவளுடைய கண்கள் பலராலும் காணப்படும் பூக்களையொக்கும் என்று எண்ணி, நீ பலவகை மலர்களைக் கண்டு மயங்குகின்றாய்; உன்னுடைய அறிவு எவ்வளவு இழிவானது. 2

மூங்கில் போலுந் தோளினை உடையவளுக்கு உடல் நிறம் தளிர் போன்றது; பல் முத்துபோன்றது; இயற்கை நறுமணமே மணமாயிருக்கும்; மையுண்ட கண் வேல் போன்றது. 3

குவளை மலர்களுக்குப் பார்க்கும் திறமை இருக்குமானால், சிறந்த அணிகள் அணிந்த இவளது கண்களுக்கு ஒப்பாகோம் என்று வெட்கித் தலைகுனிந்து நிலத்தைப் பார்க்கும். 4

தன் மென்மையைக் கருதாது அனிச்சப் பூவைக் காம்பு நீக்காது கூந்தலில் சூடினாள். அதன் பாரத்தால் இடைமுறியலாமதலால், இனி இவள் இடைக்கு நல்ல பறைகள் ஒலியா. 5

விண்ணிலுள்ள மீன்கள் திங்களுக்கும், இம் மடந்தையின் முகத்திற்கும் வேறுபாடு கண்டறிய முடியாமல் தமது நிலையினின்றும் பெயர்ந்து திரியலாயின. 6

விண்மீன்கள் கலங்குவதற்குக் காரணம் யாது; தேய்ந்தும் வளர்ந்தும் விளங்கும் திங்களிடம் மறுஉள்ளதுபோல் இம்மாதினுடைய முகத்தில் மறு உண்டோ? 7

சந்திரனே நீ வாழ்வாயாக; இம்மாதர் முகம்போல நீ ஒளி வீச முடியுமென்றால், நீயும் இவள்போல் என் காதலை உடையவளாவாய். 8

மதியே! மலர்போலும் கண்ணையுடைய இவளது முகத்தை ஒத்திருக்க வேண்டுமானால், பலர் காணத் தோன்றாமல் நான் மட்டும் காணத் தோன்றுவாயாக. 9

மிக மென்மையான அனிச்ச மலரும், அன்னப் பறவையின் சிறகும் இம் மாதினடிக்கு நெருஞ்சி முள் போல வருத்தஞ் செய்யும். 10

## 113. காதற்சிறப்புரைத்தல்

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். 1

உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. 2

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை இடம். 3

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து. 4

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். 5

கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர். 6

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து. 7

நெஞ்சத்தார் காத லவராக வெய் துண்டல்
அஞ்சும் வேபாக் கறிந்து. 8

இமைப்பிற் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னுமிங் வூர். 9

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகழ்ந்துறைவர்
ஏதிலர் என்னுமிவ் வூர். 10

## 113. இருவரும் தம் காதல் மிகுதியைக் கூறுதல்

பணிவான இனிய சொற்களைப் பேசும் இவளது வெண்மையான பல்லில் ஊறிய நீர் பாலொடு தேனைக் கலந்தது போலும்! 1

இம்மங்கையோடு எமக்குள்ள தொடர்புகள், உடம்போடு உயிரிடம் உண்டாகிய தொடர்புகள் எத்தகையனவோ அத்தகையன. 2

என் கண்ணின் கருமணியில் இருக்கின்ற பாவையே! நீ வெளியே போ; யாம் விரும்புகின்ற அழகிய நெற்றியை உடையவளுக்கு இருக்க இடமில்லை. 3

ஆய்ந்த அணியை உடையவள் என்னுடன் புணரும்போது என் உயிருக்கு வாழ்வு போல்கின்றாள்; என்னைவிட்டுப் பிரியும்போது உயிர் உடம்பைவிட்டு நீங்குதல் போல்கின்றாள்.

ஒளி நிரம்பிய போர் செய்யும் கண்ணினையுடையாள் குணங்களைநான் மறந்தேனானால், நினைப்பேன்; ஆனால் நான் என்றும் மறந்ததில்லையே. 5

எமது காதலர் எனது கண்ணினின்றும் வெளியே போக மாட்டார்; நான் அறியாது கண்ணை மூடி இமைத்தாலும் அவர் வருந்தமாட்டார்; அவர் அதிக நுட்பமானவர். 6

காதலர் எங்கண்ணினுள் எப்போதும் இருக்கின்றாராதலால், கண்களுக்கு மை தீட்டினால் அவர் மறையக் கூடும் என்று நினைத்து கண்களுக்கு மை தீட்டுவதில்லை. 7

எமது காதலர் என் நெஞ்சில் எப்போதும் இருக்கின்றார் ஆதலால், சூடானவைகளை உட்கொண்டால், அவர் மேனி வருந்தும் மென்றெண்ணிச் சூடான உணவை உண்ண அஞ்சுவேன்.

நான் கண்ணை இமைந்தால் எங்காதலர் மறைவாரென்றெண்ணி இமையாதிருக்கின்றேன். அவ்வளவுக்கே எனக்குக் கண் தூங்காத நோய் தந்து பிரிந்தார்; அன்பிலர்; என்பர் ஊரார். 9

எனது காதலர் என் உள்ளத்துள்ளே என்றும் மகிழ்வோடு தங்கியிருக்கின்றார். இதனை அறியாது ஊரார் "என்னைப் பிரிந்திருக்கின்றார்; அன்பில்லாதவர்" என்று அவரைப்பழிப்பர்.

## 114. நாணுத்துறவுரைத்தல்

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏம
மடலல்ல தில்லை வலி. 1

நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து. 2

நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். 3

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை. 4

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர். 5

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண். 6

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். 7

நிறையரியர் மன் அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும். 8

அறிகிலா ரெல்லாரும் என்றேயென் காமம்
மறுகின் மறுகு மருண்டு. 9

யாங்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 10

## 114. வெட்கம் நீங்குதலைக் கூறுதல்

காம இன்பம் நுகர்ந்து பின் அது பெறாமல் வருந்தினவர்களுக்குப் பாதுகாப்பு 'மடல்' ஏறுதல் தவிர வேறு வலிமை இல்லை. 1

முன் நுகர்ந்த இன்பத்தைப் பெறாததால் உண்டான துன்பத்தைப் பொறுத்தால் உடம்பும் உயிரும் வெட்கத்தை விலக்கி நிறுத்திவிட்டு மடலூரத் துணிகின்றன. 2

முன் நாளில் நாணமும், மிக்க வீரமும் உடையவனாக இருந்தேன். இன்று காமமிகுந்தவர் ஏறும் மடலை உடையவனாயிருக்கிறேன். 3

காமம் என்னும் பெரிய வெள்ளமானது, நாணம், வீரம் என்னும் தோணிகளை என்னிடமிருந்து பிரித்துக்கொண்டு போகின்றது. 4

மாலை போலத் தொடரும் சிறிய வளையல்களை உடையாள், மாலைப் பொழுதில் வருந்தும் துயரத்தையும், மடலினையும் இப்போது எனக்குத் தந்தாள். 5

உன்னை நினைத்து என் கண்கள் தூங்குவதைப் பொருந்தா. அனைவரும் உறங்கும் நடு இரவிலும் நான் உறங்காது மடலூர்தலையே நினைப்பேன். 6

கரையற்ற கடல்போல காமத் தீயால் வருந்தியும் மடலேறாத பெண்ணைப்போல மிகுந்த தகுதியுடைய பிறவி வேறு இல்லை. 7

இவர் நிறையில்லாதவர், மிகவும் இரங்கத்தக்கவர் என்று கருதாமல், மகளிர் காமமும் அவர்களின் மறைப்பைக் கடந்து அவையின் கண்ணே வெளிப்படுவதாயிற்று. 8

என்னைத் தவிர யாரும் தன்னை அறியவில்லை என்று கருதி, என் காமமானது இவ்வூர்த் தெருக்களில் மயங்கித் திரிகின்றது. 9

யாம் அடைந்த இந்த நோய்களை அவர்கள் அடையாததால், அறிவற்றவர்கள் யாம் காணும்படி எம்மைப் பார்த்து சிரிக்கின்றார்கள். 10

## 115. அலரறிவுறுத்தல்

அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால். 1

மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக் கீந்ததிவ் வூர். 2

உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. 3

கவ்வையாற் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ்வென்னுந் தன்மை இழந்து. 4

களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. 5

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. 6

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய். 7

நெய்யால் எரிநுதுப்பேமென் றற்றாற் கௌவையால்
காமம் நுதுப்பேமெனல். 8

அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை. 9

தாம்வேண்டின் நல்குவர் காதல் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கும் இவ்வூர். 10

## 115. பலருந் தூற்றுதலை தலைவன் கூறுதல்

அலர் ஏற்பட்ட பின்னர் என் அரிய உயிர் அவனைப் பெற்றாற்போல் எண்ணியது; அதனை நல்வினைப் பயனால் நானறிவனல்லது தூற்றுகின்ற பலரும் அறியார். 1

மலர்க் கண்களை உடைய இவளை நான் அடையமுடியாத அருமையை அறியாமல், இந்த ஊரார் எளியவளாகக் கருதி அலர் கூறி எமக்கு உதவி செய்தனர். 2

எங்கள் சேர்க்கையை ஊரார் அறிந்து தூற்றும் வகையானது வசையாக அமைதல் மட்டுமின்றி அந்தச் சேர்க்கையைப் பெறாத போதும் பெற்றார் போன்ற இன்பம் தரும் தன்மையது. 3

எனது காமம் இவ்வூரார் சொல்கின்ற அலரினால் விரிவடைகின்றது; அஃதில்லையேல் அது தன் ஆற்றலை இழந்து சுருங்கிப் போகும். 4

கள்ளுண்பார்க்கு களிக்குந்தோறும் அதனை உண்டல் இன்பந்தருவதுபோல, காமம் அலரால் வெளிப்படுந்தோறும் இன்பம் பயக்கின்றது. 5

எனது காதலரைக் கண்டது ஒரு நாள்தான்; அதனால் உண்டான அலரோ மதியைப் பாம்பு கொண்ட செய்திபோல் எங்கும் பரந்துவிட்டது. 6

காம நோய் என்னும் இந்தப் பயிர் ஊராருடைய அலர் எருவாகவும், அது கேட்டுத் தாய் சொல்லும் கடுஞ்சொல் நீராகவும் பெற்று வளர்கின்றது. 7

காமத்தை அலரால் ஒழிப்போம் என்று எண்ணுதல், நெருப்பை நெய்யால் அணைப்போம் என்று எண்ணுவதோடொக்கும். 8

உன்னைவிட்டுப் பிரியேன், அஞ்சவேண்டாம் என்று கூறிய என் காதலர் இன்று கண்டவர் பலரும் நாணும்படி விட்டு நீங்கிய பின் ஊரார் கூறும் அலருக்கு நாம் நாணக் கூடுமோ? கூடாது. 9

யாம் விரும்புகின்ற அலரை இந்த ஊரார் பரப்புகின்றனர்; இனி காதலர் விரும்பினால் விரும்பியவாறு அதனையளிப்பார். 10

## 116. பிரிவாற்றாமை

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. 1

இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு. 2

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். 3

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளிந்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு. 4

ஓம்பி னமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதாற் புணர்வு. 5

பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவ ரென்னும் நசை. 6

துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறையிறவா நின்ற வளை. 7

இன்னா தினன்இல்லூர் வாழ்தல் அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு. 8

தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. 9

அரிதாற்றி யல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். 10

## 116. தலைவன் பிரிவுக்கு ஆற்றாமை

நீர் எம்மைவிட்டுப் பிரிந்து போகாதிருப்பதானால் அதனை எனக்குச் சொல்வீர்; அஃதன்றி பிரிந்துசென்று விரைந்து வருவதானால் அதனை நீர் வரும்வரை உயிர் வாழ்வோர்க்குச்சொல்வீர். 1

முன்பு அவருடைய பார்வையானது நமக்கு இன்பத்தைத் தந்தது. இன்று அவர் புணர்ச்சியிலிருந்தும் பிரிவாரென்ற அச்சத்தினால் துன்பம் தருகிறது. 2

'பிரியேன்' என்று கூறும் நம் பிரிவாற்றாமையை அறிய வல்ல காதலரிடத்தும், ஒரு காரணம் பற்றி பிரிவு உண்டாவதால் அவரை முழுதும் நம்புதல் கடினமாயிருக்கின்றது. 3

எதிர்பட்ட அன்று, அன்பு மிகுந்தவராய் "உன்னைப் பிரியேன் அஞ்சாதே" என்று சொன்னவர் தாமே பிரிவாராயின், அவர் கூறிய உறுதிமொழியை நம்பினவர்பாற் குற்றமுண்டோ? 4

தோழி! என்னைக் காக்க விரும்பினால், காதலரிடமிருந்து பிரிவு நேராமல் காக்கவேண்டும். அவ்விதமின்றி அவர் பிரிவாரானால் மீண்டும் கூடுதல் அரிது. 5

நம்மைத் தெரிந்த காதலர் நம் முன் தம் பிரிவையுணர்த்தும் கல் மனம் படைத்தாரானால், அத்தகையவர் பிறகு நம் ஆற்றாமையையறிந்து அருள் செய்வார் என்னும் ஆசை வீணானது. 6

காதலன் என்னைப் பிரிந்ததை என் முன்கை வளையல் இருந்த இடத்திலிருந்து கழன்று எனக்கு அறிவிக்குமே, தோழி! அவனுணர்த்த உணர்ந்து வந்து நீ அறிவிக்கவேண்டுமோ? 7

மகளிர்க்குத் தங்குறிப்பறியும் தோழியர் இல்லாத அயலூரில் வாழ்தல் துன்பந் தருவதாகும்; தங்காதலரைப் பிரிவது அதைக் காட்டிலும் துன்பந்தருவதாகும். 8

நெருப்பானது தொட்டாற் சுடுமே யன்றிக் காம நோய் போல் என் காதலர் என்னைவிட்டுப் பிரிந்த உடனே சுடவல்லதோ! 9

பிரிய முடியாத பிரிவிற்கு உடன்பட்டு, பிரியும்போது உண்டாகும் துன்ப நோயை நீக்கிப் பிரிந்த பின் பொறுத்திருந்து உயிர் வாழும் மகளிர் உலகத்தில் பலர் போலும். 10

## 117. படர்மெலிந்திரங்கல்

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும். 1

கரத்தலும் ஆற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலும் நாணுத் தரும். 2

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து. 3

காமக் கடன்மன்னு முண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னு மில். 4

துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். 5

இன்பங் கடன்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 6

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன். 7

மன்னுயி ரெல்லாந் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை. 8

கொடியார் கொடுமையின் தாங்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. 9

உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண். 10

## 117. பிரிவின் நினைவால் மெலிந்து வருந்துதல்

காம நோயைப் பிறர் அறியாதபடி நான் மறைப்பேன்; ஆனால் அஃது இறைப்பவர்களுக்கு மேலும் மேலும் சுரக்கும் ஊற்று நீர்போல அதிகப்படுகின்றது. 1

இக்காம நோயினை என்னால் மறைக்கவும் முடியவில்லை; இந்த நோயைத் தந்த காதலர்க்கும் இதை சொல்லி அனுப்பவும் எனக்கு வெட்கமாயிருக்கின்றது. 2

எங்காதல் பிரிவினைத் தாங்கமுடியாத உடம்பினிடத்தே, உயிர் ஒரு காவடித் தண்டாக, அதன் ஒரு முனையில் காமமும், மற்றொரு முனையில் நாணமும் தொங்குகின்றன. 3

எனக்குக் காமமாகிய கடல் இருக்கிறது. ஆனால் அதைக் கடந்து செல்ல உதவும் காவலாகிய தெப்பம் இல்லை. 4

நட்புள்ள போதே துன்பம் வரும்படி செய்பவல்லவர்கள், பகையுள்ளபோது எப்படிபட்டவராயிருப்பார்களோ? 5

காமத்தால் வரும் இன்பம் கடல்போலப் பெரியது; பிரிவினால் அது துன்புறுத்தும்போது அத்துன்பம் கடலினும் பெரியது. 6

காமம் என்னும் கடலை நீந்தியும் அதன் கரைகாணாது வருந்துகின்றேன்; நடு இரவிலும் எந்த துணையுமின்றித் தனித்தே இருக்கின்றேன். 7

இரவு அன்புடையதே; அது உலகிலுள்ள உயிர்களையெல்லாம் தூங்கச் செய்து என்னையல்லாது வேறு துணையுடையதாக இல்லை. 8

பிரிந்து வருந்தும் இன்று நெடுநேரஞ் சென்று கழிகின்ற இரவுகள், பிரிந்து சென்ற கொடியவரது கொடுமையைப் பார்க்கிலும் அதிகமாகக் கொடுமை செய்கின்றன. 9

மனம் போலக் காதலர் இருக்கின்ற இடத்திற்கு விரைந்து செல்லக் கூடுமாயின், என் கண்கள் கண்ணீர் என்னும் வெள்ளத்தில் நீந்தவேண்டியதில்லை. 10

## 118. கண்விதுப்பழிதல்

கண்டாங் கலுழ்வ தெவன் கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யான்கண் டது. 1

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைத லுழப்ப தெவன். 2

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இது நகத் தக்க துடைத்து. 3

பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா
உய்வினோய் என்கண் நிறுத்து. 4

படலாற்றா பைதல் உழக்குங் கடலாற்றாக்
காமநோய் செய்த என் கண். 5

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது. 6

உழந்துழந் துண்ணீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண். 7

பேணாது பெட்டார் உளர் மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண். 8

வாராக்கால் துஞ்சா வரின் துஞ்சா ஆயிடை
ஆரஞ ருற்றன கண். 9

மறைபெறல் ஊரார்க் கரிதன்றா லெம்போல்
அறைபறை கண்ணா ரகத்து. 10

## 118. கண்கள் தலைவனைக்காண விதுப்புறுதல்

இந்நோயை நாம் அடைந்தது எம் காதலரை இக் கண்கள் காட்டியதாலன்றோ? அன்று எமக்குக் காட்டிய கண்கள் இன்று எம்மைக் காட்டச் சொல்லி அழுகின்றது எதனாலோ? 1

பின்விளைவை அறியாமல் காதலரைக் கண்டு அவர் அழகை உண்ட கண்கள், இந்தத் துன்பம் தம்மால் வந்ததால் தாம் பொறுக்க வேண்டுமென்பதை உணராது துன்பப்படுவது ஏன்?

அன்று அவரை தாமே விரைந்து நோக்கி, இன்றைக்குத் தாமே அழுகின்றன; இந்த செய்கை நகைத்து இகழக்கூடிய தன்மை உடையது. 3

என் கண்கள் பிழைக்க முடியாத காம நோயை என்னிடத்தில் நிறுத்திவிட்டு, தாமும் அழுது நீர் சொரிய முடியாது வறண்டு விட்டன. 4

அன்று கடலும் தாங்கமுடியாத காம நோயை எனக்குச் செய்த கண்கள், இன்று அதே துன்பத்தால் உறங்கமுடியாமல் வருந்துகின்றன. 5

எனக்கு இந்த காம நோயைத் தந்த கண்கள், தாமும் உறங்கமுடியாது இந்த நோயுள்ளகப்பட்டுக் கொண்டது மிகவும் இனிதாயிற்று. 6

விருப்பத்தோடு உருகி அன்று இடைவிடாமல் காதலரைக் கண்ட கண்கள், இன்று காணாது வருந்திவருந்தி அவற்றின் நீர் அற்றுப் போவதாக. 7

உள்ளத்தால் விரும்பாது சொல்லால் விரும்பினவர் இருக்கின்றார். இருந்து என்ன பயன்? அவரைக் காணாமல் கண்கள் அமைதி யுறவில்லை. 8

காதலர் வாராதபோதும் என் கண்கள் தூங்குவதில்லை. வந்தபோதும் அவர் பிரிவை அஞ்சித் தூங்குவதில்லை. இந்த இரு வழியிலும் என் கண்கள் துன்பம் அடைந்தன. 9

அறையப்பட்டு உள்ளதை வெளிப்படுத்தும் பறையை போல கண்களையுடைய எம் போன்றார் மனதில் உற்ற மறை பொருளை அறிதல் ஊரார்க்கு எளிது. 10

## 119. பசப்புறுபருவரல்

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற. 1

அவர்தந்தா ரென்னுந் தகையால் இவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு. 2

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து. 3

உள்ளுவன் மன்யான் உரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு. 4

உவக்காணெங் காதலர் செல்வார் இவக்காணென்
மேனி பசப்பூர் வது. 5

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. 6

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 7

பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பா ரில். 8

பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின். 9

பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின். 10

## பிரிவினல் நேரும் நிற வேறுபாட்டினல் வருந்துதல்

என் காதலர் பிரிவதற்கு அன்று நான் உடன்பட்டேன்; அவர் பிரிந்த துன்பத்தால் நிற வேறுபாடுற்ற என் தன்மையை யாருக்கு எடுத்துச் சொல்வேன். 1

இந்தப் பசலையானது, அவர் தந்தார் என்ற பெருமிதத்தினல் என் மேனி முழுவதும் பரவி ஊருகின்றது. 2

பிரிகின்ற போதே காம நோயையும், பசலையையும் எனக்குத் தந்துவிட்டு, என் மேனியழகினையும் நாணத்தையும் என்னிடமிருந்து கைப் பற்றிக்கொண்டார். 3

நான் எப்போதும் அவர் சொற்களையே நினைப்பேன், நான் பேசுவதும் அவர் நலங்களையே; அப்படியிருக்க எனக்கு இந்தப் பசப்பு எவ்வாறு கள்ளத்தனமாய் வந்துவிட்டது? 4

காதலர் சிறிது பிரிந்தால் என் உடம்பில் 'இதோ வந்துவிட்டேன்' என்று பசலை படர்ந்து விடும்; அத்தகையது இன்று வேறுென்றாகுமோ? 5

விளக்கின் ஒளி குறையும் சமயம் பார்த்து நெருங்கி வரும் இருள்போல், காதலரின் புணர்ச்சி முடிவைப் பார்த்து நெருங்கிவரும் இந்தப் பசலை. 6

முன்னொரு நாள் காதலரைத் தழுவிக்கிடந்த நான் சற்று விலகினேன். அவ்வளவில் பசலை என்னை அள்ளிக்கொள்வது போல படர்ந்தது. 7

இவள் பொறுத்திராது பசலை நிறமடைந்தாள் என என்னைக் குறைகூறுவதல்லாமல், அவர் இவளைவிட்டுப் போயினரே என்று அவரைப் பழி சொல்வார் ஒருவருமில்லை. 8

என்னைப் பிரிவிற் குடன்படும்படி உறுதிமொழி பேசிய காதலர் நல்லதன்மையர் என்றால் என் உடம்பில் எவ்வாறேனும் பசலை படர்வதாக. 9

என் பசலையைப் பார்த்து பிரிவிற்கு இணங்குவித்துச் சென்றவரது அருளின்மையை ஊரார் தூற்றாமலிருப்பாரானல் யான் 'பசலை நிறம் உற்றாள்' என்னும் பெயர் பெறுதல்நல்லதே.

## 120. தனிப்படர்மிகுதி

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி. 1

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கும் அளி. 2

வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுநம் என்னுஞ் செருக்கு. 3

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின். 4

நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை. 5

ஒருதலையான் இன்னாது காமங்காப் போல
இருதலை யானும் இனிது. 6

பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான். 7

வீழ்வாரின் இன்சொல் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில். 8

நசை இயார் நல்கா ரெனினும் அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு. 9

உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. 10

## 120. தனித்திருக்கும் காதலியின் பெருந்துன்பம்

தம்மால் காதலிக்கப்படும் காதலரால் விரும்பப்படும் பெண்டிரே காம இன்பமெனும் விதையில்லாத நற்கனியை அருந்தப் பெற்றவராவர். 1

தம்மை விரும்பும் காதலிகளுக்கு, காதலர் காலத்தே வந்து செய்யும் அன்பானது, தன்னை நோக்கி வாழ்வார்க்கு மேகம் அளவறிந்து மழை பெய்தாற்போலும். 2

காதலுடையார்க்கும், காதலிக்கப்படுவார்க்கும், பிரிவுத் துன்பமிருந்தாலும், 'மீண்டும் கூடி வாழ்வோம்' என்னும் இறுமாப்புப் பொருத்தமுடையது. 3

உலகத்தாரால் நன்கு மதிக்கப்படும் பெண்டிர் தமது காதலரால் விரும்பப்படாராயின் நல்வினை பொருந்தியவர் அல்லர். 4

நம்மால் காதலிக்கப்பட்டவர், தாமும் நம்மைக் காதலிக்க வில்லையென்றால், அவர் நமக்கு என்ன இன்பத்தைச் செய்வார். 5

காதல் ஒருவரிடத்தில் மட்டும் இருந்தால் துன்பந் தருவதாகும்; காவடியின் பாரம் போல இருவரிடமும் ஒத்திருந்தால் தான் அஃது இனிமை பயக்கும். 6

காதலர் இருவரிடத்திலும் ஒத்து நில்லாமல் ஒருவர் மாட்டே நின்று வருத்துகின்ற காமன், அவ்விதம் செய்வதாலுண்டாகும் துன்பமிகுதியையும் பசப்பு நோயையும் அறியானோ? 7

தாம் விரும்பிய கணவரிடமிருந்து ஓர் இனிய வார்த்தையும் தூதாகவும் கூட கிடைக்கப்பெறாமல் உயிர் வாழ்கின்றவரைப்போல வன்நெஞ்சுடையவர்கள் யாருமில்லை. 8

என்னால் விரும்பப்பட்ட என் காதலர் அருள்புரியமாட்டாரென்றாலும், அவரிடமிருந்து வரும் எவ்வகைச் சொல்லும் என் செவிக்கு இனிமை தரும். 9

நெஞ்சே! நீ வாழ்வாயாக! உன்னை வந்து கூடாதவரிடம் நீ பட்ட துன்பத்தைக் கூறத் துடிக்கிறாய்; அஃதரிது. அதைக் காட்டிலும் உனக்குத் துன்பந் தரும் கடலைத் தூர்க்க முயல்க.

## 121. நினைந்தவர்புலம்பல்

உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காமம் இனிது. 1

எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். 2

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். 3

யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ உளரே யவர். 4

தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத் தோவா வரல். 5

மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடியான்
உற்றநா ளுள்ள உளேன். 6

மறப்பின் எவனாவன் மற்கொன் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளஞ் சுடும். 7

எனைத்து நினைப்பினுங் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யுஞ் சிறப்பு. 8

விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை யாற்ற நினைந்து. 9

விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி. 10

## 121. நுகர்ந்த இன்பத்தை நினைந்து சொல்லுதல்

முன் நுகர்ந்த காம இன்பமானது பிரிந்தபோது நினைத்தாலும் நீங்காத மிக்க மகிழ்ச்சியைத் தருதலால் உண்டபோது மட்டும் மகிழ்ச்சி தரும் கள்ளைப் பார்க்கிலும் காமம் இனிது. 1

தாம் விரும்புகின்றவரை நினைத்தால் துன்பமொன்றுந் தோன்றுவதில்லை. ஆதலால் காமம் எவ்வகையிலும் இனிமை தருவதேயாகும். 2

தும்மல் உண்டாவதுபோலத் தோன்றி அடங்கிவிட்டதே! ஆதலால் என் காதலர் என்னை நினைப்பவர்போலக் காட்டி நினைக்க மாட்டாரோ? 3

என் நெஞ்சில் அவர் எப்போதும் நீங்காமல் இருக்கின்றாரே! அவ்வாறே அவருடைய நெஞ்சிலும் நாம் இருக்கின்றோமோ. 4

தம்முடைய நெஞ்சில் எம்மை வரவிடாது காவல் கொண்ட காதலர், எமது நெஞ்சில் இடைவிடாது நிற்பதற்கு நாணமாட்டாரோ. 5

நான் என் காதலரோடு புணர்ந்த நாளின்பத்தை நினைத்தலால் இப்போது உயிர் வாழ்கின்றேன். அஃதின்றேல் நான் வேறெதனால் உயிர் வாழ்கின்றேன்? 6

காதலர்பால் நுகர்ந்த இன்பத்தை மறந்தறியாத காலத்தும், பிரிவினை நினைத்தவுடன் என் நெஞ்சம் சுடுகின்றதே. அவ்வின்பத்தை மறந்துவிட்டால் நான் என்ன நிலையடைவேன்? 7

நான் எவ்வளவு நினைத்தாலும் அதற்காகக் கோபிக்கமாட்டார்; எங்காதலர் எமக்குச் செய்யும் நன்மை அவ்வளவுதான். 8

நாமிருவரும் வெவ்வேறாகமாட்டோம் என்று முன்னர் கூறியவாறு இரக்கமற்ற தன்மை மிக நினைந்து எனது இனிய உயிர் கழிகின்றது. 9

மதியே! நீ வாழ்வாயாக; என் நெஞ்சில் இடைவிடாது இருந்துவிட்டுப் போனவர் கண்ணால் காணும்படி நீ மறையாதிருப்பாயாக, 10

## 122. கனவுநிலையுரைத்தல்

காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து. 1

கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன். 2

நனவினான் நல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் உயிர். 3

கனவினான் உண்டாகுங் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு. 4

நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது. 5

நனவென ஒன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன். 6

நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்னெம்மைப் பீழிப் பது. 7

துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. 8

நனவினான் நல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர். 9

நனவினான் நந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொல் இவ்வூ ரவர். 10

## 122 தலைவி தன் கனவைத் தோழிக்குரைத்தல்

என் காதலரிடமிருந்து, தூதினைக் கொண்டு என்னிடம் வந்த கனவுக்கு நான் என்ன விருந்து செய்வேன். 1

கயல்மீன் போன்ற மையுண்ட கண்கள், என் வேண்டு கோளுக்கு இணங்கி தூங்குமானால், கனவில் வரும் காதலர்க்கு யான் பொறுத்திருக்கும் தன்மையை எடுத்துரைப்பேன். 2

நனவிலே வந்து அன்பு காட்டாத என் காதலரைக் கனவிலே காண்பதினாலே என் உயிர் இன்னும் நிலைத்திருக்கிறது. 3

நனவில் வந்து அன்பு செய்யாத அவரைக் கனவானது தேடிக்கொண்டு வந்து கொடுத்தலால், அக் கனவினிடத்து எனக்கு இன்பம் உண்டாகிறது. 4

நனவில் அவரைக் கண்டு நுகர்ந்த இன்பமும் இனிதாயிற்று; கனவில் அவரைக் கண்டு நுகர்ந்த இன்பமும் கண்ட போதே இனிதாயிற்று; எனவே எனக்கு இரண்டும்ஒன்றே. 5

நனவு என்று சொல்லப்படுகின்ற ஒன்று இல்லாதொழிந்தால் கனவில் வந்து தோன்றிய என் கணவர் என்னைவிட்டு நீங்க மாட்டார். 6

நனவிலே வந்து அருள் செய்யாத கொடுமையானவர், கனவிலே மட்டும் வந்து எம்மை வருத்துவது எதனால்? 7

நான் தூங்கும்போது என் தோள் மேலிருக்கும் எங்காதலர் தூங்கி விழிக்கும்போது விரைந்து என் நெஞ்சில் போய் தங்குகிறார். 8

கனவிலே தம் காதலரைக் காணாத மகளிர், நனவிலே வந்து அருளவில்லையென்று வருந்தப்படுவர். 9

இவ்வூரிலுள்ளார், "நனவில் நம்மை விட்டு நீங்கினார்" என்று தம் காதலரைக் கொடுமை கூறுவர்; பாவம்! அவர்கள் தம் காதலர் கனவில் நீங்காது வருதலைக் காணார் போலும். 10

## 123. பொழுதுகண்டிரங்கல்

மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. 1

புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை. 2

பனியரும்பிப் பைதல்கொள் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும். 3

காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும். 4

காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. 5

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன். 6

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய். 7

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலுங் கொல்லும் படை. 8

பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. 9

பொருண்மாலை யாளரை உள்ளி மருள் மாலை
மாயுமென் மாயா உயிர். 10

## 123. மாலைப்பொழுதைக்கண்டு தலைவி இரங்குதல்

பொழுதே நீ மாலையாயெனில் அல்லை; கணவனைப் பிரிந்த மகளிரின் உயிரை உண்ணும் இறுதிக்காலமே. 1

மாலைப் பொழுதே நீயும் மங்கி எம்மைப் போல் ஒளி இழந்திருக்கின்றாய். எனது கணவர் போல் உன் துணையும் இரக்க மற்றதோ. 2

என் காதலர் என்னோடு கூடிய நாளெல்லாம் என் முன் நடுக்கமெய்தி பசந்து வந்த மாலை, இப்போது எனக்குக் கவலையைத் தோற்றுவித்து என் துன்பம் மிகும்படி வருகின்றது. 3

காதலர் இருந்தபோது என் உயிர் தளிர்க்க வந்த மாலைப் பொழுதானது, காதலர் பிரிந்தபோது கொலைக் களத்தில் கொல்ல வருவாரைப்போல வருகின்றது. 4

காலையும் மாலையும் காதலர் அன்று போலன்றி இன்று வேறுபட்டு வருகின்றன. காலைப் பொழுதுக்கு நான் செய்த நன்மை யாது? மாலைப் பொழுதுக்கு நான் செய்த தீமையாது? 5

காதலர் என்னைவிட்டுப் பிரியாதிருந்தபோது, மாலைப் பொழுது துன்பஞ் செய்யவல்லது என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை. 6

காம நோய் என்னும் மலரானது, காலைப் பொழுதில் அரும்பி, பகற்பொழுதில் பேரரும்பாக முதிர்ந்து, மாலைப் பொழுதில் மலர்கின்றது. 7

இடையன் குழலானது, நெருப்பெனச் சுடும் மாலைப் பொழுதிற்கு தூதாக வந்து, பின் கொல்லும் ஆயுதமாகவும் வருகின்றது. 8

மதி மயங்கும்படி வந்து படரும் மாலை நேரத்தில், நான் மட்டுமல்ல ஊர் முழுவதும் மதி மயங்கித் துன்புறும். 9

சென்றவரை நினைத்து பொறுத்து இறந்துபடாத என் உயிர், பொருளீட்டுதலையே இயல்பாக உடைய தலைவரை நினைத்து மயக்கம் தரும் இம் மாலைப் பொழுதில் மாய்கிறது. 10

## 124. உறுப்புநலனழிதல்

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண். 1

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண். 2

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்த நாள் வீங்கிய தோள். 3

பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். 4

கொடியார் கொடுமை உரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். 5

தொடியொடு தோள் நெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக் கூறல் நொந்து. 6

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோள் பூச லுரைத்து. 7

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். 8

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். 9

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. 10

## 124. காதலியின் உறுப்புகள் அழகிழத்தல்

துன்பந் தந்துவிட்டு தொலைவில் சென்ற காதலரை நினைத்து அழுதமையால், கண்கள் ஒளி யிழந்து முன் தமக்கு நாணிய நறு மலர்களுக்கு நாணி விட்டன. 1

நிறம் வேறுபட்டு நீர் வடிக்கின்ற கண்கள், காதலர் அருள் செய்யாமையைப் பிறர்க்குச் சொல்வன போல் உள்ளன. 2

கணவரை மணந்த நாட்களில் மகிழ்ச்சியால் பெருத்த உன் தோள்கள், இன்று மெலிந்து வாட்ட மடைந்து அவர் பிரிவினை பிறர்க்கு உணர்த்துகின்றன. 3

காதலரைப் பிரிந்தலமயாற் பழைய அழகு கெட்டு மெலிந்த தோள்கள், தமது பருமை குறைந்து பசும்பொன் வளையல் கள் கழலப் பெற்றன. 4

வளையல்களும் கழன்று, பழைய அழகையும் இழந்த கைகள் கொடிய காதலரது கொடுமையை பிறருக்குச் சொல்லு கின்றன. 5

வளையல் கழலும்படி கை மெலிவடைந்ததைப் பார்த்து என் காதலரைக்கொடியவர் என்று கூறுவதைக் கேட்டு உள்ளம் பொறுக்காமல் யான் வருந்துகின்றேன். 6

நெஞ்சமே! கொடியவராகிய என் காதலருக்கு, மெலி கின்ற என் தோள்களினுல் விளைகின்ற ஆரவாரத்தைச் சொல்லி அதனுல், மேம்பாடு பெறுவாயோ. 7

இறுகித் தழுவிய கைகளைச் சிறிது தளர்த்தியவுடன், பச்சை வளையணிந்த மடந்தையின் நெற்றி நிறம் வேறுபட்டது. இன்று பிரிவாற்ருமையால் எவ்வாருயினளோ? 8

இறுகத் தழுவிய கைகளை தளர்த்தினுல், இடையே நுழை யும் சிறு காற்றின் நுண்ணிய இடை யீட்டையும் பொருது. பேதையின் பெரிய குளிர்ந்த கண்கள் பசப்புற்றன. 9

அவளுடைய ஒளி மிகுந்த நெற்றி நிறம் மாறி பசந்தது கண்டு அவளுடைய கண்களின் பசப்பும் நாணி வந்தடைந்தது. 10

## 125. நெஞ்சொடுகிளத்தல்

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. 1

காதல் அவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் நெஞ்சு. 2

இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்க ணில். 3

கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று. 4

செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர். 5

கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் நெஞ்சு. 6

காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு. 7

பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் நெஞ்சு. 8

உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறியென் நெஞ்சு. 9

துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
இன்னும் இழத்துங் கவின். 10

## 125. காதலி நெஞ்சுக்கு உரைத்தல்

என் நெஞ்சமே! தீராத இக்காம நோயைத் தீர்க்கும் மருந்தொன்றை நன்றாக யோசித்துப் பார்த்து எனக்குச் சொல்ல மாட்டாயா? 1

நெஞ்சே! நீ வாழ்வாயாக; அவர் நம்மிடம் காதல் இல்லாதவராயிருக்க, நீ அவரைக் கருதி வருந்துவது நின் அறியாமையே. 2

நெஞ்சே! இங்கிருந்து நினைத்து வருந்துவதால் என்ன பயன்? இந்தத் துன்ப நோயை நமக்கு உண்டாக்கியவரிடம் நமக்காக இரங்கி நம்பால் வரும் நினைப்பு இல்லை. 3

நெஞ்சே! நீ அவரிடம் செல்லும்போது, இந்தக் கண்களையும் உடன் அழைத்துச் செல்வாயாக; அவரைக் காட்டென்று என்னைத் தின்பதுபோல் வருத்துகின்றன. 4

நாம் விரும்பினால் நம்மை விரும்பாத நமது காதலரை, நம்மை வெறுத்தார் என்று எண்ணி கைவிடும் ஆற்றல் நமக்கு உண்டா? 5

என் நெஞ்சமே! அவர் நம்மோடு கலந்து உடலை நீக்கும் போது, ஒரு தரமேனும் பிணங்கி விடாத நீ, இப்போது அவரிடத்தில் பொய் கோபம் கொள்கின்றாய்; இதனால்என்ன பயன்?

நெஞ்சே! ஒன்று காமத்தை விடு; அல்லது நாணத்தை விடு; ஒன்றுக்கொன்று மாறுபட்ட இவ் விரண்டினையும் என்னால் பொறுத்துக்கொண் டிருக்க முடியாது. 7

என் நெஞ்சே! பிரிந்த அவர் மீண்டும் வந்து அருள் செய்ய வில்லையே என்று கவலைப்பட்டு அவர் பின்னால் ஏங்கிச் செல்கின்றாய்! நீ அறிவற்ற பேதை! 8

நெஞ்சே! காதலன் உன் உள்ளத்தே யிருக்க நீ அவரைத் தேடி யாரிடத்தில் செல்வாய்? 9

நம்மைச் சேராது பிரிந்து போனவரை நம்முள்ளத்தில் வைத்திருப்போமாயின் இன்னும் மெலிந்து அழகை இழப்போம்.

## 126. நிறையழிதல்

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. 1

காம மென ஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளுந் தொழில். 2

மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும். 3

நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறையிறந்து மன்று படும். 4

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று. 5

செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர். 6

நாணென ஒன்றோ அறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின். 7

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை. 8

புலப்ப லெனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு. 9

நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல். 10

# 126. அடக்கம் விடுதல்

நாணம் என்னும் தாளிட்ட மன அடக்கம் என்னும் கதவை, காமமாகிய கோடாரி உடைத்தெறிகின்றது. 1

காமம் என்ற ஒன்று கண்ணோட்டமில்லாததாக இருக்கின்றது. அது எல்லோரும் துயிலும் நள்ளிரவிலும் என் நெஞ்சத்தைத் தொழில் படுத்தி துயருறுத்துகிறது. 2

நான் இக் காமத்தை வெளிக் காட்டாமல் எனக்குள்ளே மறைக்கக் கருதுவேன். அது என் எண்ணம்போல் மறைந்து நிற்காமல் தும்மல்போல் வெளிப்பட்டு விடுகின்றது. 3

இதுவரைக்கும் என்னை அடக்கமுடையேன் என்று கருதியிருந்தேன், ஆனால் இன்று என் காமம் மறைவிடத்தைத் தாண்டி பலரறிய வெளிப் படுகின்றது. 4

தம்மைப் பிரிந்து சென்ற காதலர் பின்னே செல்லாத அடக்கமென்னும் பெருந்தகைமை, காம நோயால் வருந்துவோர் அறியும் தன்மை அன்று. 5

என்னைவிட்டு நீங்கிய காதலர் பின் செல்ல விரும்புவதால், என்னை வந்தடைந்த காமநோய் எத்தன்மையது? மிகவும் இரங்கத் தக்கதே. 6

நம்மால் விரும்பப்பட்ட நம் காதலர் வந்து நாம் காமத்தால் விரும்புவனவற்றை செய்தால், நாணம் என்ற ஒன்றையும் அறிய மாட்டோம். 7

நமது நிறை என்னும் அரணை உடைக்கும் படையானது, பல சூட்சிகளையுடைய மனங்கவர் மணாளனுடைய பணிவான இனிய மொழிகளன்றோ? 8

காதலர் வந்தால் பிணங்குவேன் என்றெண்ணிச் சென்றேன்; கண்டேன்; என் நெஞ்சம் அடக்கமில்லாது அவரைப் போய் கலப்பதைக் கண்டு பிணங்காது அவரைத் தழுவினேன். 9

காதலரைக் கண்களால் கண்டவுடன், நெருப்பிலிட்ட நெய்போல உருகுவார்க்கு முதலில் பிணங்குவோம் பின்னர் புணர்வோம் என்ற உறுதி இருக்குமோ? 10

## 127. அவர்வயின்விதும்பல்

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். 1

இலங்கிழாய் இன்று மறப்பினென் றோள்மேல்
கலங்கழியுங் காரிகை நீத்து. 2

உரன்நசைஇ உள்ளந் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னு முளேன். 3

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் நெஞ்சு. 4

காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்றோட் பசப்பு. 5

வருகமற் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோ யெல்லாங் கெட. 6

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். 7

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 8

ஒருநாள் எழுநாள்போல் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. 9

பெறினென்னும் பெற்றக்கா லென்னும் உறினென்னும்
உள்ள முடைந்துக்கக் கால். 10

# 127. காதலர்கள் ஒருவரை ஒருவர் காணவிரைதல்

அவர் பிரிந்து சென்ற நாட்களைச் சுவற்றில் குறியிட்டு அவற்றைத் தொட்டுத் தொட்டு எண்ணுவதால் விரல்கள் தேய்ந்தன; கண்களும் அவர் வரவை நோக்கி ஒளியிழந்து புல்லியவாயின.

விளங்குகின்ற அணியை அணிந்த தோழி! இன்று யான் காதலரை மறப்பேனாயின் என் மெல்லிய தோள்கள் தம் அழகை நீக்கி வளையல்களைக் கழல விடும். 2

இன்பத்தை விரும்பாமல் வெற்றியை விரும்பி தம் ஊக்கமே துணையெனக் கொண்டு சென்றவர் திரும்பி வருதலைக் காணவே யான் இன்னும் உயிர் வைத்துக்கொண் டிருக்கின்றேன்.

பிரிந்து சென்ற எங்காதலர் மிக்க காமத்துடன் வருதலை எண்ணி என் நெஞ்சம் மரக்கிளை மேல் ஏறிப் பார்க்கின்றது. 4

என் காதலரை கண் நிறையக் காண்பேனாக; அவ்விதம் கண்ட பின்னர் என் மெல்லிய தோள்களில் படர்ந்த பசலைநோய் தானே நீங்கி விடும். 5

இத்தனை நாட்கள் வாராத எங்காதலர் ஒருநாள் வருவாராக; வந்தால் துன்பம் செய்கின்ற இந்நோய் அனைத்தும் கெட அவரை ஐம்புலன்களாலும் பருகி நுகர்வேன். 6

என் கண்ணனையார் வருவாரானால் யான் அவரோடு பிணங்குவேனோ? அல்லது அவரைக் கட்டித் தழுவுவேனோ? அல்லது அவரோடு ஒன்றாகக் கலப்பேனோ? 7

மன்னன் போர்செய்து வெற்றி பெறுவாராக; அதன் பிறகு யாம் என் காதலியுடன் கூடி அன்றுவரும் மாலைக்கு விருந்து நடத்துவோமாக! 8

நெடுந்தூரம் சென்ற காதலர் திரும்பி வரும் நாளை எண்ணி வருந்தும் பெண்களுக்கு ஒரு நாள் செல்லுதல் ஏழு நாள் கழிதல் போலும்! 9

நம் பிரிவை யாற்றாது நம் காதலி மனமுடைந்து இறந்து, விட்டால் நம்மை அவள் பெறக்கூடியவளானால்தான் என்ன? நம்மைக் கலந்தால்தான் என்ன? (பயன் யாது மில்லை) 10

# 128 குறிப்பறிவுறுத்தல்

கரப்பினுங் கையிகந் தொல்லா நின் உண்கண்
உரைக்க லுறுவதொன் றுண்டு. 1

கண்ணிறைந்த காரிகைக்காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. 2

மணியில் திகழ்தரும் நூல்போன் மடந்தை
அணியிற் றிகழ்வதொன் றுண்டு. 3

முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்குளுள்ள தொன்றுண்டு. 4

செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து. 5

பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வ துடைத்து. 6

தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந் தவளை. 7

நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்
எழுநாளே மேனி பசந்து. 8

தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது. 9

பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற்
காமநோய் சொல்லி இரவு. 10

## 128. ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தல்

நீ சொல்லாமல் மறைத்தாலும் அதற்குட்படாது உன்னை மீறி உன் மையுண்ட கண்கள் எனக்குச் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று இருக்கிறது. (அதனைச் சொல்லுக.) 1

கண் நிறைந்த அழகும், மூங்கில் போன்ற வளைந்த தோள்களுடைய என் காதலிக்கு பெண்களுக்குள்ள மடமை மற்றவரைக் காட்டினும் மிகுந்திருக்கின்றது. 2

கோக்கப்பட்ட மணிகளுக்கு இடையே உள்ள நூல் புறத்தில் தெரிவதுபோல, அம்மடந்தையின் அழகுக்குள்ளே தோன்றும் ஒரு குறிப்பு உண்டு. (அதனைக் கூறுக) 3

இதழ்மூடிய அரும்பினுள்ளே மணம் அடங்கி இருப்பது போல, அப் பேதையின் புன்சிரிப்பாகிய முகிழ்ப்பினுள் புறத்து தெரியாததோர் குறிப்பு உண்டு. 4

நெருங்கிய வளையல்களை உடையாள் பிரிவை நினைத்துக் காட்டி சென்ற கள்ளக் குறிப்பு, எனக்கு நேர்ந்த துயரத்தை தீர்க்கும் மருந்து ஒன்று உடையதாக இருக்கிறது. 5

காதலர் வந்து தம் பிரிவினால் நேர்ந்த துன்பங்களை ஆற்றி நாம் மகிழும் வண்ணம் கூடுவது, மேலும் அத் துன்பத்தினை பொறுத்திருந்து அவரது அன்பின்மையை நினைக்கும் குறிப்பே.

குளிர்ந்த துறையையுடையவன், உடம்பால்கூடி, உள்ளத்தால் பிரிந்தமையை நாம் உணர்தற்கு முன்னரே நம் வளையல்கள் உணர்ந்து கழன்று விட்டன. 7

நேற்றுதான் என் காதலர் பிரிந்து போயினர்; ஆனால் என் மேனி பசந்து ஏழு நாட்கள் ஆய்விட்ட நிலையி லிருக்கின்றேன். 8

பிரிவினால் கழலும் வளையலை நோக்கி; மெலியும் தோளை நோக்கி தன்னடிகளையும் நோக்கி, அவ்விடத்து உடன்போக்கை தலைவி குறிப்பித்தாள் (என்று தோழி அறிவித்தாள்). 9

கண்ணினால் தன் காம நோயைத் தெரிவித்துக் குறிப்பினால் அதனைத் தீர்க்க வேண்டும் என்று காதலி இரத்தல், பெண் தன்மையினும் மேம்பட்ட அடக்கமான ஒரு பெண் தன்மையே. 10

## 129. புணர்ச்சிவிதும்பல்

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. 1

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையுங்
காமம் நிறைய வரின். 2

பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண். 3

ஊடற்கட் சென்றேன்மற் றேழி அதுமறந்து
கூடற்கட் சென்றதென் நெஞ்சு. 4

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. 5

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. 6

உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலர்ந்து. 7

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. 8

மலரினும் மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். 9

கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினுந் தான்விதுப் புற்று. 10

## 129. புணர்ச்சிக்கு விரைதல்

நினைத்த அளவிலே களிப்படைதலும், கண்ட அளவிலே மகிழ்ச்சி யடைதலும் கள்ளுக்கு இல்லை; காமத்திற்கு உண்டு. 1

பெண்களுக்குக் காமம் பனையளவினும் மிகுதியாக உண்டாகுமாயின், தம் காதலரோடு தினையளவு கூட பிணங்காமல் இருக்கவேண்டும். 2

என்னை விரும்பாமல் தம் மனம் விரும்பியவற்றையே செய்தாலும் என் கணவனைக் காணாமல் என் கண்கள் அமைவதில்லை. 3

தோழி! என் காதலரிடம் பிணங்கி ஊடலே வேண்டும் என்ற கருத்தோடு சென்றேன்; கண்டேன்; என் நெஞ்சம் அதை மறந்து புணர்ச்சியை நாடிச் சென்றது. 4

மை எழுதுங் காலத்தில் மை தீட்டுங் கோலைக் காணாத கண்கள் போல, எங் காதலரைக் கண்டபோது அவர்முன் செய்த குற்ற மொன்றையுங் காண மாட்டேன். 5

காதலனைக் காணும்போது குற்றமானவை யொன்றும் நான் அறியேன்; அவரைக் காணாதபோது குற்றமல்லாதவைகளை அறியேன். 6

தம்மை இழுத்துக்கொண்டு போகும் என்று அறிந்தும், ஓடுகின்ற வெள்ளத்தில் பாய்கின்றவரைப் போல், பிணக்கம் பயன்தராமை அறிந்திருந்தும் பிணங்குவதால் என்ன பயன்? 7

கள்வனே! தன்னை உண்டு களித்தவர்க்கு இழிவு தரத்தக்க துன்பஞ் செய்தாலும், அவரால் மேலும் விரும்பப்படும் கள்ளைப் போல நின்மார்பு எனக்கு மேன்மேலும் விருப்பத்தை தருகின்றது.

காம இன்பம் மலரினும் மென்மை யுடையது; இந்த உண்மை அறிந்து அதன் நல்ல பயனை பெறக் கூடியவர் உலகில் சிலரே. 9

கண்களால் மட்டும் பிணங்கி; தழுவுதலை விரும்பி விரைந்து பிணங்கிய நிலையையும் மறந்து கலங்கினள். 10

## 130. நெஞ்சொடுபுலத்தல்

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீயெமக் காகா தது. 1

உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறியென் நெஞ்சு. 2

கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சே நீ
பெட்டாங் கவர்பின் செலல். 3

இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. 4

பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு. 5

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு. 6

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லா என்
மாணா மடநெஞ்சிற் பட்டு. 7

எள்ளின் இளிவாமென் றெண்ணி அவர் திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 8

துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி. 9

தஞ்சந் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி. 10

## புணர விரையும் நெஞ்சுடன் இருவரும் புலத்தல்

நெஞ்சே! நம் காதலர் உள்ளம் நம்மை நினையாது, அவருக்காகத் துணை நிற்பது கண்டும், நீ எமக்குத் துணையாகாமல் அவரையே நினைப்பது யாது கருதி. 1

என் நெஞ்சே! நம்மீது அன்பு கொள்ளாத காதலரைக் கண்டாலும் நம்மை கோபியார் என்றெண்ணி அவரிடம் செல்கின்றாயே! இதைவிட அறியாமை உண்டோ? 2

நெஞ்சே! நீ என்னிடம் நில்லாமல் உன் விருப்பப்படியே அவரிடம் செல்லுதல், கெட்டவர்க்கு நண்பர் உலகத்தில் இல்லை என்னும் நினைவோ? 3

நெஞ்சே! நீ அவரைக் கண்டவுடன் அவரைச் சேர நினைப்பதன்றி பிணங்கி பின்னர் அளவறிந்து துய்க்கமாட்டாய். இனி அப்படிப்பட்டவைகளை நின்னுடன் எண்ணுபவர் யார்? 4

காதலரைக் காணாதபோது புணர்ச்சி இல்லையே என்று அஞ்சுகிறது; அவரைக் கண்ட பின்னர் பிரிந்து விடுவாரோ என்று அஞ்சுகிறது. இதனால் நெஞ்சம் தீராத துன்பத்தை உடையது.

என் நெஞ்சு, என் காதலரைப் பிரிந்து, தனியே இருந்து அவர் கொடுமைகளை நினைத்தபோது என்னைத் தின்பதுபோல் துன்புறுத்திக்கொண் டிருக்கிறது. 6

என்னை மறந்த அன்பில்லாத காதலரை மறக்கமாட்டாத எனது இழிந்த அறிவில்லாத நெஞ்சோடு சேர்ந்து நான் என் வெட்கத்தையும் மறந்துவிட்டேன். 7

உயிர்மேல் காதலையுடைய என் நெஞ்சு, நம்மைப் பிரிந்து சென்றாரென்று இகழ்வோமாயின் பின் நமக்கு இழிவாகும் என்று எண்ணி அவரது பெருமையையே நினைக்கும். 8

ஒருவர்க்குத் துன்பம் நேர்ந்தபோது அதை நீக்குவதற்கு தம்முடைய நெஞ்சமே நமக்குத் துணையாகாவிட்டால் வேறு யார் துணையாவார்கள்? 9

தம்முடைய நெஞ்சம் தமக்கு உறவாகாதபோது, அயலார் உறவல்லாதாராக அமைவது எளிதன்றோ? 10

# 131. புலவி

புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லனோய் காண்கஞ் சிறிது. 1

உப்பமைந் தற்றாற் புலவி அதுசிறிது
மிக்கற்றான் நீள விடல். 2

அலந்தாரை யல்லனோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 3

ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று. 4

நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து. 5

துனியும் புலவியும் இல்லாயிற் காமங்
கனியுங் கருக்காயும் அற்று. 6

ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று. 7

நோத லெவன் மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதலர் இல்லா வழி. 8

நீரும் நிழல தினிதே புலவியும்
விழுநர் கண்ணே இனிது. 9

ஊட லுணங்க விடுவாரோ டென்நெஞ்சங்
கூடுவேம் என்ப தவா. 10

## 131. புணர்ச்சி கருதாமல் இருவரும் புலத்தல்

காதலர் அடையும் துன்ப நோயை சிறிது பார்ப்போம்; அதற்காக நீ அவரைத் தழுவாமல் இருந்து பிணங்குவாயாக. 1

பிணக்கம் உணவுகளுக்குச் சுவைதரும் உப்புப் போலாம்; அப்பிணக்கம் அளவு கடந்து நீடித்தால் உப்பு அதிகப்பட்டு சுவைகெட்டாற் போலாகும். 2

தம்மை ஏற்றுக்கொள்ளாது தம்மோடு பிணங்கின மகளிரைப் பிணக்கு நீக்கி தழுவாமல் விடுதல் துன்பமுற்று வருந்தினவர்களுக்கு பின்னுந் துன்பநோய் விளைவித்தல் போலாகும். 3

தம்மோடு ஊடிய மகளிரை ஊடல் தீர்த்துக் கூடாதிருத்தல், வாடிய கொடியை அடியிலே அறுத்தாற் போலும். 4

நற்பண்புகள் நிறையப் பெற்ற சிறந்த தலைவர்க்கு அழகாவது மலர் போன்ற கண்களையுடைய மகளிரின் நெஞ்சிலுள்ள பிணக்க மிகுதியேயாகும். 5

பெரும் பிணக்கும் சிறு பிணக்கும் இல்லையாயின் காமவின்பமானது, மிக முதிர்ந்த பழமும், இளங் காயும் போலாம். 6

புணர்ச்சி நீட்டிக்குமோ, நீட்டியாதோ என்று எண்ணுவதால் இன்பத்திற்கு இன்றியமையாததான ஊடலினிடத்தும் ஒரு துன்பம் இருக்கின்றது. 7

இவர் நமக்காக வருந்தினர் என்ற வருத்தத்தை உணரும் காதலர் இல்லாதபோது பிணங்குவதால் என்ன பயன்? 8

நீரும் நிழலினிடத்தே இருப்பின் இனியதாகும். அது போல் ஊடலும் அன்பு கலந்த காதலர்பால் உளதானால் இனிமை தரும். 9

ஊடலைத் தீர்க்க முயலாது அதனால் நம்மை வருந்தும்படி நம்மை விட்டுப் போவாரோடு என் மனம் கூடக் கருதுவது, அளவற்ற ஆசையினாலேதான். 10

## 132. புலவிநுணுக்கம்

பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. 1

ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து. 2

கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று. 3

யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. 4

இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். 5

உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். 6

வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று. 7

தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. 8

தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதி ரென்று. 9

நினைத்திருந்து நோக்கினுங் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று. 10

## 132. புலவியினது நுணுக்கம்

பெண்ணியல்புடைய எல்லோரும் தமது கண்களால், பொதுவாக நின்னை நுகர்வார்கள்; பரத்தை இயல்புடையாய்! ஆகையால் நின் மார்பினை யான் சேரேன். 1

தம்மோடு ஊடி பேசாதிருக்கக் காதலர் வேண்டுமென்றே, அவ்வூடல் நீங்கி 'நீடு வாழ்க' என்று உரைபாடுவோம் எனக் கருதித் தும்மினார். 2

மரக்கிளைகளில் மலர்ந்த பூக்களைச் சூடினாலும், "நீர் வேறொருத்திக்கு நும் அழகைக் காட்டச் சூடினீர்" என்று என்னோடு பிணங்குவாள்! 3

எவரைப் பார்க்கிலும் யாம் மிக்க காதலுடையேம் என்று சொன்னேனாக, "யாரைப் பார்க்கிலும்? யாரைப் பார்க்கிலும்?" என்று என்னோடு பிணங்கினாள். 4

காதல் மிகுதியால், இப்பிறப்பில் நின்னைப் பிரியேன் என்றேன். அப்படியானால் மறுபிறவியில் பிரியக் கருதுகின்றீரோ? என்று பிணங்கி கண்கலங்கினாள். 5

"நினைத்தேன்" என்று சொன்னேன்; நீர் மறந்திருந்தால் தானே நினைக்க வேண்டும்; என்னை மறந்துவிட்டீர் என்று சொல்லி தழுவவந்தவள் பிணங்கித் தழுவாதிருந்தனள். 6

என்னோடு கூடியிருந்த காதலி, யான் தும்மினேன்; உடனே வாழ்த்தினாள்; பின்னர் அதனை மாற்றி உம்மை எந்தப் பெண் நினைக்க நீர் தும்மினீரென்று ஊடி அழுதாள். 7

தும்மலை, அவள் ஊடலுக்கஞ்சி அடக்கவும், அவள் உம்முடைய காதல் மகளிர் உம்மை நினைத்தலை மறைக்கின்றீரோ என்று சொல்லி, பிணங்கி அழுதாள். 8

இவ்வாறு ஊடியவளை பிணக்குத் தீர்த்தாலும், பிற பெண்டிர்க்கும் அவர் ஊடியபோது இவ்வாறுதான் ஊடல் தீர்ப்பீர் என்று சொல்லி வெகுளுவாள்! 9

பேசினால் பிணங்குகின்றாளெனக் கருதி உறுப்புகளின் அழகைப் பார்த்தாலும், அவற்றையெல்லாம் எவள் உறுப்புகளை நினைத்து அவற்றோடு ஒப்பிட பார்த்தீர் என்று வெகுள்வாள். 10

## 133. ஊடலுவகை

இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு. 1

ஊடலில் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். 2

புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. 3

புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
உள்ள முடைக்கும் படை. 4

தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலி னாங்கொன் றுடைத்து. 5

உணலினும் உண்ட தறலினிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. 6

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னுங்
கூடலிற் காணப் படும். 7

ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. 8

ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா. 9

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். 10

## 133. ஊடலால் கூடல் இன்பம் சிறந்தமை

அவரிடத்தில் குற்றம் இல்லையென்றாலும் அவர் செய்கின்ற அன்பு முறையே ஊடுதலை உண்டாக்க வல்லதாகின்றது. 1

ஊடுதலால் உண்டாகின்ற சிறிய வருத்தத்தால் தலைவர் செய்யும் அன்பு கொஞ்சம் குறையினும் பின்பு பெருமை தரும். 2

நிலத்தோடு நீர்கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலரிடம் ஊடுதல் போன்று இன்பஞ் செய்வது வானுலகில் உண்டோ? 3

என் காதலரைத் தழுவிக்கொண்டு விடாமைக்குக் காரணமான அந்த ஊடலில், என் உள்ளத்தைச் சிதறவைக்கும் ஆயுதம் தோன்றும். 4

பிழையில்லாதவரா யிருந்தாலுந் தம்மால் விரும்பப்பட்ட மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறாதபோதும் ஓர் இன்பம் பயத்தலுடையது. 5

உண்பதைக் காட்டிலும், முன்புண்ட உணவு செரித்தல் இன்பந் தரும்; அதுபோல காம இன்பத்திற்கு புணர்தலைக் காட்டிலும் ஊடுதல் இன்பந்தரும். 6

காமம் நுகர்வதற்குரிய இருவருள்; ஊடலில் தோற்றவர் வென்றவராவார்; அவ்வெற்றி புணர்ச்சியின்போது அவரால் அறியப்படும். 7

நெற்றி வியர்க்கும் வகை இவளுடன் கூடி, இப்பொழுது பெற்ற இன்பத்தை, இன்னுமொருதரம் இவள் ஊடி நாம் பெறக்கூடுமோ? 8

ஒளிமிகுந்த அணிகளை உடையாள் இன்னும் எம்மோடு ஊடுவாளாக; அவ்வூடல்தீர அவளை வேண்டிக்கோடற் பொருட்டு இரவு காலமானது இன்னும் நீள்வதாக. 9

காம நுகர்ச்சிக்கு இன்பமாக அமைவது ஊடுதல்; அவ்வூடுதலுக்கு இன்பமாவது அவ்வூடலை அளவறிந்து நீங்கிக் கூடப் பெறுதல். 10



# திருவள்ளுவ மாலை

—0—

### இறையனார்

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க் - குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

### கபிலர்

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான் - மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

### பரணர்

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுதும் நயந்தளந்தான் - வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

### நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானா அறமுதலா அந்நான்கும் - ஏனோருக்
கூழி னுரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று.

### மாமூலனார்

அறம்பொரு ளின்பம்வீ டென்னும்அந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை அவன் வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

### கல்லாடர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார் - நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

### சீத்தலைச்சாத்தனார்

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் - மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

### மருத்துவன்றாமோதரனார்

சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில் - காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

### கோதமனார்

ஆற்றல ழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா-ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.

## நத்தத்தனார்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் - போயொருத்தர்
வாய்க்கேட்க நூ லுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

## கீரந்தையார்

தப்பா முதற்பாவாற் றாமாண்ட பாடலினான்
முப்பாலி னாற்பான் மொழிந்தவ - ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

## வெள்ளிவீதியார்

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே-செய்யா
அதற்குரிய ரந்தணரே ஆராயி னேனை
இதற்குரிய ரல்லாதா ரில்.

## மாங்குடி மருதனார்

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளக்கித் - தீதற்றோங்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

## மோசிகீரனார்

ஆண்பாலே ழாறி ரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாக - மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

### பெருஞ்சித்திரனார்

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொரு ளெல்லாம் - உரைத்ததனாற்
றூதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

### மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல் - நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

### கவிசாகரப் பெருந்தேவனார்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதம்
ஆவிற் கருமுனியா யானைக் - காமரரும்பல்
தேவிற் றிருகா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

### களத்தூர்கிழார்

ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதல்நான்குஞ் சாலும் - அருமறைகள்
ஐந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

### அக்காரக்கனி நச்சுமனார்

கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணின்
நிலைநிரம்பு நீர்மைத் தெனினுந் - தொலைவிலா
வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூல் நயத்தின் பயன்.

### குலபதி நாயனார்

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிருள் தள்ளுதலால் - வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

### தேனிக்குடிக் கீரனார்

பொய்ப்பால பொய்யேயாய்ப்போயின பொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே – முப்பாலில்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

### கொடிஞாழன் மாணிபூதனார்

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தே - மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

### ஆலங்குடிவங்கனார்

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்- தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து.

### இடைக்காடர்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

### ஔவையார்

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

# குறளகராதி

—o—


| குறள் | பக்கம் |
|---|---|
| அஃகாமை | 44 |
| அஃகி யகன்ற | 44 |
| அகடாரார் | 198 |
| அகப்பட்டி | 226 |
| அகரமுதல | 10 |
| அகலா தணு | 150 |
| அகழ்வாரைத் | 40 |
| அகனமர்ந்து ஈதலின் | 28 |
| அகனமர்ந்து செய்யாள் | 26 |
| அங்கணத்துள் | 154 |
| அசையியற் | 232 |
| அச்ச முடையார்க்கு | 118 |
| அச்சமே கீழ் | 226 |
| அஞ்சாமை ஈகை | 88 |
| அஞ்சாமை யல்லால் | 110 |
| அஞ்சும் அறியான் | 184 |
| அஞ்சுவ தஞ்சாமை | 96 |
| அஞ்சுவ தோரும் | 82 |
| அடக்கம் அமரருள் | 34 |
| அடல்வேண்டும் | 78 |
| அடற்றகையும் | 164 |
| அடுக்கிய கோடி | 202 |
| அடுக்கி வரினும் | 136 |
| அடுத்தது காட்டும் | 152 |
| அணங்குகொல் | 230 |
| அணி யன்றோ | 214 |
| அந்தணர் என்போர் | 14 |
| அந்தணர் நூற்கும் | 120 |
| அமரகத் தாற்றறுக்குங் | 174 |
| அமரகத்து வன் | 216 |

| குறள் | பக்கம் |
|---|---|
| அமிழ்தினும் | 22 |
| அமைந்தாங் | 106 |
| அரங்கின்றி | 92 |
| அரம்பொருத | 188 |
| அரம்போலுங் | 210 |
| அரிதரோ | 244 |
| அரிதாற்றி | 244 |
| அரியகற் | 112 |
| அரியவற்று | 100 |
| அரியவென் | 118 |
| அருங்கேடன் | 50 |
| அருஞ்செவ்வி | 124 |
| அருட்செல்வஞ் | 58 |
| அருமறை | 180 |
| அருமை யுடைத் | 134 |
| அரும்பயன் | 48 |
| அருவினை | 108 |
| அருளல்ல | 60 |
| அருளில்லார்க் | 58 |
| அருளென்னும் | 162 |
| அருளொடும் | 162 |
| அருள்கருதி | 66 |
| அருள்சேர்ந்த | 58 |
| அருள் வெஃகி | 44 |
| அலந்தாரை | 274 |
| அலரெழ | 242 |
| அலர்நாண | 242 |
| அல்லல் அருளாள் | 58 |
| அல்லவை தேய | 28 |
| அல்லற்பட் | 122 |

| | | | |
|---|---|---|---|
| அவர்தந்தார் | 250 | அறம்பொருள் | 112 |
| அவர்நெஞ் | 272 | அறவாழி | 10 |
| அவா இல்லார்க்கு | 82 | அறவினை யாதெனின் | 74 |
| அவாவினை | 82 | அறவினையும் | 192 |
| அவாஎன்ப | 82 | அறனழீஇ | 46 |
| அவிசொரிந் | 60 | அறனறிந் தான் | 138 |
| அவையறிந்து | 154 | அறனறிந்து மூத்த | 100 |
| அவையறியார் | 154 | அறனறிந்து வெஃகா | 44 |
| அவ்வித் தழுக் | 42 | அறனாக்கம் | 42 |
| அவ்விய நெஞ் | 42 | அறனியலான் | 38 |
| அழக்கொண்ட | 142 | அறனிழுக்கா | 88 |
| அழச்சொல்லி | 170 | அறனீனும் | 162 |
| அழல்போலும் | 258 | அறனெனப் | 18 |
| அழிவ தூஉம் | 104 | அறநோக்கி | 46 |
| அழிவந்த | 172 | அறன்கடை | 38 |
| அழிவி னவை | 168 | அறன்வரையான் | 38 |
| அழிவின்று அறை | 164 | அறிகிலார் | 240 |
| அழுக்கற் றக | 42 | அறிகொன் | 138 |
| அழுக்கா றவா | 16 | அறிதோ றறியாமை | 234 |
| அழுக்கா றுடையார்க்கு | 42 | அறிந்தாற்றிச் | 114 |
| அழுக்கா றுடையான்கண் | 36 | அறிவற்றங் | 96 |
| அழுக்கா றென | 42 | அறிவிலார் | 180 |
| அழுக்காற்றின் | 42 | அறிவிலான் | 180 |
| அளவல்ல | 66 | அறிவினான் | 72 |
| அளவளாவு இல்லா | 116 | அறிவினு ளெல்லாந் | 50 |
| அளவறிந்தார் | 66 | அறிவின்மை | 180 |
| அளவறிந்து | 106 | அறிவுடையா ரெல்லாம் | 96 |
| அளவின்கண் | 66 | அறிவுடையா ராவ | 96 |
| அளித்தஞ்ச | 244 | அறிவுரு ஆராய்ந்த | 148 |
| அறங்கூறான் | 46 | அறுவாய் | 236 |
| அறஞ்சாரா | 220 | அறைபறை | 226 |
| அறஞ்சொல்லும் | 46 | அற்கா இயல்பிற்றுச் | 76 |
| அறத்தா றிது | 16 | அற்ற தறிந்து | 200 |
| அறத்தாற்றின் | 18 | அற்றம் மறைக்கும் | 206 |
| அறத்தான் | 16 | அற்றம் மறைத்தலோ | 180 |
| அறத்திற்கே | 24 | அற்றவர் என்பார் | 82 |
| அறத்தினூஉங்கு | 16 | அற்றார் அழிபசி | 54 |

| | | | |
|---|---|---|---|
| அற்றாரைத் | 112 | ஆற்றின் அளவறிந் தீக | 106 |
| அற்றார்க்கொன் | 212 | ஆற்றின் அளவறிந்து கற்க | 156 |
| அற்றால் அளவறிந்து | 200 | ஆற்றின் வருந்தா | 104 |
| அற்றேமென் | 136 | ஆற்றின் நிலைதளர்ந் | 154 |
| அனிச்சப்பூக் | 236 | ஆற்றின் ஒழுக்கி | 18 |
| அனிச்சமும் | 236 | ஆற்று பவர்க்கும் | 160 |
| அன்பகத் தில்லா | 24 | ஆற்றுவார் - இக | 190 |
| அன்பறிவு ஆராய்ந்த | 148 | ஆற்றுவா - பசி | 54 |
| அன்பறிவு தேற்றம் | 114 | ஆற்றுவார் - பணி | 208 |
| அன்பிலன் | 184 | இகலானாம் | 182 |
| அன்பிலா ரெல் | 24 | இகலிற் கெதிர் | 182 |
| அன்பிற்கும் | 24 | இகலின் மிக | 182 |
| அன்பின் வழியது | 24 | இகலெதிர் | 182 |
| அன்பின் விழையார் | 194 | இகலென்ப | 182 |
| அன்பீனும் | 24 | இகலென்னும் | 182 |
| அன்புடை - இவ் | 210 | இகல்காணான் | 182 |
| அன்புடை - வேந் | 148 | இகழ்ச்சியிற் | 118 |
| அன்புநாண் | 208 | இகழ்ந்தெள்ளா | 222 |
| அன்பும் அறனும் | 18 | இடமெல்லாங் | 224 |
| அன்புற் றமர்ந்த | 24 | இடனில் பருவத்தும் | 52 |
| அன்பொரீஇத் | 212 | இடிக்குந் துணை | 100 |
| அன்போ டியைந்த | 24 | இடிபுரிந் தெள்ளுஞ்சொற் | 132 |
| அன்றறிவாம் | 16 | இடிப்பாரை | 100 |
| ஆகாறளவிட்டி | 106 | இடுக்கட் படினும் | 142 |
| ஆகூழால் | 84 | இடுக்கண் கால் | 216 |
| ஆக்கங் கருதி | 104 | இடுக்கண் வருங்கால் | 136 |
| ஆக்கம் அதர்வினாய்ச் | 130 | இடும்பைக் கிடும்பை | 136 |
| ஆக்கம் இழந்தே | 130 | இடும்பைக்கே | 216 |
| ஆக்கமுங் | 140 | இடைதெரிந்து | 154 |
| ஆங்கமை | 158 | இணரூழ்த்தும் | 140 |
| ஆபயன் குன்றும் | 122 | இணரெரி தோய் | 70 |
| ஆயும் அறிவின | 194 | இதனை இதனால் | 114 |
| ஆய்ந்தாய்ந்து | 170 | இமைப்பிற் கரப்பாக் | 38 |
| ஆரா இயற்கை | 82 | இமையாரின் | 192 |
| ஆவிற்கு நீரென் | 224 | இம்மைப் பிறப்பிற் | 276 |
| ஆள்வினையும் | 216 | இயல்பாகும் | 78 |
| ஆற்றாரும் | 110 | இயல்பினான் | 18 |

| | |
|---|---|
| இயல்புளிக் | 120 |
| இயற்ற லும் | 88 |
| இரக்க இரத்தக்கார்க் | 222 |
| இரத்தலின் | 54 |
| இரத்தலும் | 222 |
| இரந்தும் | 224 |
| இரப்பன் இரப்பாரை | 224 |
| இரப்பாரை | 222 |
| இரப்பான் வெ | 222 |
| இரவார் இரப் | 218 |
| இரவுள்ள | 224 |
| இரவென்னும் | 224 |
| இருள்நீங்கி | 80 |
| இருநோக் | 232 |
| இருந்துள்ளி | 262 |
| இருந்தோம்பி | 26 |
| இருபுனலும் | 158 |
| இருமனப் பெண்டிருங் | 194 |
| இருமை வகைதெரிந்து | 14 |
| இருவே றுலகத்து | 84 |
| இருள்சேர் | 10 |
| இலக்கம் | 136 |
| இழங்கிழாய் | 266 |
| இலமென் றசைஇ | 218 |
| இலமென்று | 44 |
| இலர்பலர் ஆகிய | 62 |
| இலனென்று | 50 |
| இலனென்னும் | 54 |
| இல்வாழ்வான் | 18 |
| இல்லதென் | 20 |
| இல்லாரை | 162 |
| இல்லாளை | 192 |
| இல்லாள் கண் | 192 |
| இல்லை தவறவர்க் | 278 |
| இவறலும் | 98 |
| இழத்தொறூஉங் | 198 |
| இழிவறிந் துண்பான் | 200 |
| இழுக்கல் | 94 |
| இழுக்காமை | 118 |
| இழைத்த | 166 |
| இளித்தக்க | 270 |
| இளிவரின் | 204 |
| இளைதாக | 186 |
| இளையர் இன | 150 |
| இறந்தமைந்த | 190 |
| இறந்த வெகுளியிற் | 118 |
| இறந்தார் | 70 |
| இறப்பே புரிந்த | 206 |
| இறலீனும் | 44 |
| இறுதி பயப்பினும் | 148 |
| இறைகடியன் | 124 |
| இறைகாக்கும் | 120 |
| இற்பிற - கண்ணல்ல | 202 |
| இற்பிற - கண்ணேயும் | 220 |
| இனத்தாற்றி | 124 |
| இனம்போன் | 176 |
| இனிய உளவாக | 28 |
| இனியன்ன | 272 |
| இணைத்துணைத் | 26 |
| இணையர் | 168 |
| இன்க ணுடைத்தவர் | 240 |
| இன்சொலால் ஈத் | 88 |
| இன்சொலால் ஈரம் | 28 |
| இன்சொல் இனி | 28 |
| இன்பங் கடன் | 246 |
| இன்பத்துள் - பய | 182 |
| இன்பத்துள் - விழை | 136 |
| இன்பம் இடையறு | 82 |
| இன்பம் ஒருவற் | 222 |
| இன்பம் விழை - இ | 136 |
| இன்பம் விழை - வினை | 134 |
| இன்மை இடும்பை | 224 |
| இன்மையின் - இன்னாதது | 220 |
| இன்மையின் - இன்னா | 122 |

| | |
|---|---|
| இன்மையுள் இன்மை | 40 |
| இன்மை என | 220 |
| இன்மை ஒருவற் | 208 |
| இன்றி யமையாச் | 204 |
| இன்றும் வருவது | 220 |
| இன்னாசெய் - ரை | 72 |
| இன்னாசெய் தார்க்கும் | 208 |
| இன்னா திரக்கப் | 54 |
| இன்னா தினன் | 244 |
| இன்னாமை இன்ப | 236 |
| இன்னா எனத்தான் | 72 |
| ஈட்டம் இவறி | 212 |
| ஈதல் இசைபட | 56 |
| ஈத்துவக்கும் | 54 |
| ஈர்ங்கை விதிரார் | 226 |
| ஈவார்கண் | 222 |
| ஈன்ற பொழுதிற் | 22 |
| ஈன்றாள் முகத்தேயும் | 196 |
| ஈன்றாள் பசி | 142 |
| உடம்பா டிலா | 188 |
| உடம்பொ டுயிரிடை | 238 |
| உடுக்கை | 168 |
| உடுப்ப தூஉம் | 226 |
| உடைசெல்வம் | 198 |
| உடைத்தம் | 104 |
| உடைமையுள் | 26 |
| உடைய ரெனப்படுவது | 130 |
| உடையார்முன் | 90 |
| உட்கப் படாஅர் | 196 |
| உட்பகை | 188 |
| உணர்வ துடையார்முன் | 154 |
| உணலினும் | 278 |
| உண்டார்கண் | 230 |
| உண்ணற்க | 196 |
| உண்ணாது | 40 |
| உண்ணாமை உள்ள | 60 |
| உண்ணாமை வேண்டும் | 60 |
| உதவி வரைத்தன்று | 30 |
| உப்பமைந் | 274 |
| உயர்வகலந் | 160 |
| உயிருடம்பின் | 74 |
| உயிர்ப்ப உளரல்லர் | 186 |
| உய்த்தல் | 270 |
| உரமொருவற் | 130 |
| உரன் நசைஇ | 266 |
| உரனென்னும் | 14 |
| உருவுகண் | 144 |
| உறுபொருளும் / உருவாயம் | 198 |
| உரைப்பார | 56 |
| உலகத்தார் | 180 |
| உலகத்தோ டொட்ட | 36 |
| உலகந் தழீஇய | 96 |
| உலைவிடத் | 164 |
| உவக்காணெங் | 250 |
| உவந்துறைவர் | 238 |
| உவப்பத் தலைக்கூடி | 90 |
| உழந்துழந்து | 248 |
| உழவினார் | 218 |
| உழுதுண்டு | 218 |
| உழுவார் | 218 |
| உழைப்பிரிந்து | 116 |
| உளபோல் | 126 |
| உளரெனினும் | 156 |
| உளரென்னும் | 92 |
| உளவரை தூக்காத | 106 |
| உள்ளக் களித்தலுங் | 270 |
| உள்ளத்தால் | 68 |
| உள்ளத்தார் | 262 |
| உள்ளத்தால் உள் | 66 |
| உள்ள மிலா | 130 |
| உள்ளம் உடைமை | 130 |
| உள்ளம்போன் | 246 |
| உள்ளற்க | 170 |
| உள்ளிய தெல்லாம் | 70 |

| | |
|---|---|
| உள்ளிய தெய்தல் | 118 |
| உள்ளினும் | 254 |
| உள்ளினேன் | 276 |
| உள்ளுவ தெல்லாம் | 130 |
| உள்ளுவன் - உரை | 250 |
| உள்ளுவன் - மறப்பின் | 238 |
| உள்ளொற்றி | 196 |
| உறங்குவது | 76 |
| உறன்முறையான் | 188 |
| உறாஅ தவர்க்கண்ட | 272 |
| உறாஅ தவர்போல் | 232 |
| உறாஅதோ | 242 |
| உறாஅர்க் | 252 |
| உறினட் | 174 |
| உறின் உயிர் | 166 |
| உறுதோ றுயிர் | 234 |
| உறுபசியும் | 158 |
| உறுபொருளும் | 162 |
| உறுப்பமைந் | 164 |
| உறுப்பொத்தல் | 210 |
| உறுவது சீர் | 174 |
| உறைசிறியார் | 146 |
| உற்றநோய் நீக்கி | 100 |
| உற்றநோய் நோன்றல் | 62 |
| உற்றவன் | 200 |
| உற்றான் அளவும் | 200 |
| ஊக்க முடையான் | 108 |
| ஊடலில் தோன்றுஞ் | 278 |
| ஊடலில் தோற்றவர் | 278 |
| ஊடலி னுண்டாங் | 274 |
| ஊட லுணங்க | 274 |
| ஊடல் உணர்தல் | 234 |
| ஊடற்கட் | 270 |
| ஊடிப் பெறுகுவங் | 278 |
| ஊடி யவரை | 274 |
| ஊடி யிருந்தேமாத் | 276 |
| ஊடுக மன்னோ | 278 |
| ஊடுதல் | 278 |
| ஊணுடை | 214 |
| ஊதிய மென்ப | 270 |
| ஊரவர் கௌவை | 242 |
| ஊருணி நீர்நிறைந் | 52 |
| ஊழி பெயரினுந் | 208 |
| ஊழிற் பெருவலி | 84 |
| ஊழையும் | 134 |
| ஊறொரால் | 144 |
| ஊனைக் குறித்த | 214 |
| எச்சமென் | 212 |
| எட்பக வன்ன | 188 |
| எண்சேர்ந்த | 192 |
| எண்ணித் துணிக | 104 |
| எண்ணிய எண்ணியாங் | 144 |
| எண்ணியார் | 110 |
| எண்ணென்ப | 90 |
| எண்பதத்தால் | 210 |
| எண்பதத்தான் | 120 |
| எண்பொருள் | 96 |
| எதிரதாக் காக்கும் | 96 |
| எந்நன்றி | 30 |
| எப்பொருளும் ஓரார் | 150 |
| எப்பொருள் எத் | 80 |
| எப்பொருள் யார் | 96 |
| எய்தற் கரியது | 108 |
| எரியாற் சுடப் | 190 |
| எல்லாப் பொருளும் | 160 |
| எல்லார்க்கும் நன்றாம் | 34 |
| எல்லார்க்கும் எல்லாம் | 128 |
| எல்லா விளக்கும் | 68 |
| எல்லைக்கண் | 172 |
| எவ்வ துறைவது | 96 |
| எழுதுங்கால் | 270 |
| எழுபிறப்பும் | 22 |
| எழுமை எழுபிறப்பும் | 30 |
| எளிதென | 38 |

எள்ளாத எண்ணிச் 104
எள்ளாமை 66
எள்ளின் இளிவா 272
எற்றிற் குரியர் 226
எற்றென் 142
எனைத்தானும் நல்லவை 94
எனைத்தானும் எஞ்ஞான்றும் 72
எனைத்திட்பம் 144
எனைத்துங் 174
எனைத்துணையரா 38
எனைத்து நினைப்பினுங் 254
எனைத்தொன் 254
எனைப்பகை 50
எனைமாட்சித் 160
எனைவகையான் 114
என்பி லதனை 24
என்றும் ஒருவுதல் 142
என்னைமுன் 166
ஏதம் பெருஞ் 212
ஏதிலார் ஆரத் 178
ஏதிலார் குற்றம் 46
ஏதிலார் போலப் 232
ஏந்திய கொள்கையார் 192
ஏமுற் றவரினும் 186
ஏரினும் நன்றால் 218
ஏரின் உழாஅர் 12
ஏவவும் செய்கலான் 180
ஐந்தவித்தான் 14
ஐயத்தின் நீங்கித் 80
ஐயப் படாஅ 152
ஐ புணர்வு 80
ஒட்டார்பின் 204
ஒண்ணுதற் 230
ஒண்பொருள் 162
ஒத்த தறிவான் 52
ஒப்புரவி னல்வரும் 52
ஒருதலையான் 252
ஒருநாள் எழுநாள்போல் 266
ஒருபொழுதும் 76
ஒருமைக்கண் 90
ஒருமைச் செய 178
ஒருமை மகளிரே 206
ஒருமையுள் 34
ஒலித்தக்கால் 164
ஒல்லுங் கருமம் 174
ஒல்லும் வகையான் 16
ஒல்லும்வா யெல்லாம் 146
ஒல்வ தறிவ 106
ஒழுக்கத்தின் எய்துவர் 36
ஒழுக்கத்தின் ஒல்கார் 36
ஒழுக்கத்து 14
ஒழுக்க முடைமை 36
ஒழுக்க முடையவர்க்கு 36
ஒழுக்கமும் 202
ஒழுக்கம் விழுப்பம் 36
ஒழுக்காறக் 42
ஒளியார்முன் 154
ஒளியொருவற் 206
ஒறுத்தாரை 40
ஒறுத்தார்க் 40
ஒறுத்தாற்றும் 126
ஒற்றினான் ஒற்றிப் 128
ஒற்றும் உரைசான்ற 128
ஒற்றொற்றித் 128
ஒற்றொற் றுணா 128
ஒன்றாக நல்லது 74
ஒன்றாமை 188
ஒன்றா உலகத் 56
ஒன்றானும் 34
ஒன்றெய்தி 198
ஒன்னார்த் 62
ஓதல் வேண்டும் 142
ஓதி உணர்ந்தும் 178
ஓம்பி னமைந்தார் 244

| | |
|---|---|
| ஓர்த்துள்ளம் | 80 |
| ஓர்ந்துகண் | 120 |
| ஓஒ இனிதே | 248 |
| கடலன்ன | 240 |
| கடலோடா | 110 |
| கடனறிந்து | 148 |
| கடனென்ப | 208 |
| கடாஅ உரு | 128 |
| கடாஅக் களிற் | 230 |
| கடிதோச்சி | 124 |
| கடிந்த கடிந் | 142 |
| கடுஞ்சொல்லன் | 124 |
| கடுமொழியும் | 124 |
| கடைக்கொட்கச் | 144 |
| கணைகொடிது | 64 |
| கண்களவு | 232 |
| கண்டது மன்னும் | 242 |
| கண்டார் | 230 |
| கண்டுகேட் | 234 |
| கண்டாங் கலுழ்வ | 248 |
| கண்ணிறைந்த | 268 |
| கண்ணிற் கணிகலம் | 126 |
| கண்ணிற் றுனி | 270 |
| கண்ணின் பசப்போ | 260 |
| கண்ணின்று கண் | 46 |
| கண்ணுங் கொளச் | 262 |
| கண்ணுடைய | 90 |
| கண்ணுள்ளார் | 238 |
| கண்ணுள்ளிற் | 238 |
| கண்ணொடு கண் | 232 |
| கண்ணோட்டத் | 126 |
| கண்ணோட்டம் இல் | 126 |
| கண்ணோட்ட மென்னும் | 126 |
| கதங்காத்துக் | 34 |
| கதுமெனத் தாம் | 248 |
| கயலுண்கண் | 256 |
| கரத்தலும் | 246 |
| கரப்பவர்க் | 224 |
| கரப்பிடும்பை | 222 |
| கரப்பிலா நெஞ்சிற் | 222 |
| கரப்பிலார் வை | 222 |
| கரப்பினுங் | 268 |
| கரவா துவந் | 224 |
| கருமஞ் சிதையாமல் | 126 |
| கருமஞ் செய | 216 |
| கருமணியிற் | 238 |
| கருமத்தால் | 214 |
| கருவியுங் காலமுஞ் | 138 |
| கலங்காது கண்ட | 144 |
| கலந்துணர்த்துங் | 262 |
| கல்லாத மேற் | 180 |
| கல்லா தவரின் | 156 |
| கல்லா தவரும் | 92 |
| கல்லாதான் ஒட்பம் | 92 |
| கல்லா ஒருவன் | 92 |
| கல்லாதான் சொற்கா | 92 |
| கல்லார்ப் பிணிக் | 124 |
| கல்லான் வெகுளுஞ் | 128 |
| கவறுங் கழகமுங் | 194 |
| கவ்வையாற் | 242 |
| கழாஅக்கால் | 178 |
| களவினா லாகிய | 66 |
| களவின்கண் | 66 |
| களவென்னுங் | 66 |
| களித்தறியேன் | 196 |
| களித்தானைக் | 196 |
| களித்தொறுங் | 242 |
| கள்வார்க்குத் | 66 |
| கள்ளுண்ணப் | 196 |
| கறுத்தின்னா | 72 |
| கற்க கசடறக் | 90 |
| கற்றதனா லாய | 10 |
| கற்றறிந்தார் | 154 |
| கற்றாருள் கற்றார் | 156 |

| | |
|---|---|
| கற்றார்முன் | 156 |
| கற்றில னாயினுங் | 94 |
| கற்றீண்டு | 80 |
| கற்றுக்கண் | 148 |
| கனவினான் | 256 |
| கனவினும் | 174 |
| காக்க பொருளா | 34 |
| காக்கை கரவா | 116 |
| காட்சிக் கெளியன் | 88 |
| காணாச் சினத்தான் | 184 |
| காணாதாற் | 180 |
| காணிற் குவளை | 236 |
| காணுங்கால் | 270 |
| காண்கமற் | 266 |
| காதல காதல் | 98 |
| காதல ரில்வழி | 258 |
| காதலர் தூதொடு | 256 |
| காதல் அவரில ராக | 262 |
| காதன்மை | 112 |
| காமம் உழந்து | 240 |
| காமக் கடன் | 246 |
| காமக் கடும் - உய் | 240 |
| காமக் கடும் - நீங் | 246 |
| காமக் கணிச்சி | 264 |
| காமமும் நாணும் | 246 |
| காமமென | 264 |
| காமம் விடு | 262 |
| காமம் வெகுளி | 80 |
| காலம் கருதி | 108 |
| காலத்தினாற் | 30 |
| காலாழ் களரில் | 110 |
| காலைக்குச் | 258 |
| காலை யரும்பிப் | 258 |
| கான முயலெய்த | 166 |
| குடம்பை | 76 |
| குடிசெய்வல் | 216 |
| குடிசெய்வார்க் | 216 |
| குடிதழீஇக் | 120 |
| குடிபுறங் காத் | 120 |
| குடிப்பிறந்தார் | 202 |
| குடிப்பிறந்து - கு | 112 |
| குடிப்பிறந்து - த | 170 |
| குடிமடிந்து | 132 |
| குடியாண்மை | 132 |
| குடியென்னும் | 132 |
| குணநலம் | 208 |
| குணம்நாடிக் | 112 |
| குணமென்னுங் | 14 |
| குணனிலனாய்க் | 184 |
| குணனுங் குடிமை | 170 |
| குலஞ்சுடுங் | 214 |
| குழலினிது | 22 |
| குறிக்கொண்டு | 232 |
| குறித்தது | 152 |
| குறிப்பறிந்து | 150 |
| குறிப்பிற் - ரா | 152 |
| குறிப்பிற் - ர் | 152 |
| குற்ற மிலனாய்க் | 216 |
| குற்றமே காக்க | 98 |
| குன்றன்னார் | 190 |
| குன்றின் அனையாரும் | 204 |
| குன்றேறி | 162 |
| கூடிய காமம் | 266 |
| கூத்தாட்டு | 76 |
| கூழுங் குடியும் | 122 |
| கூறாமை நோக்கிக் | 152 |
| கூற்றங் குதித் | 62 |
| கூற்றத்தைக் | 190 |
| கூற்றமோ | 230 |
| கூற்றுடன்று | 164 |
| கெடல்வேண்டிற் | 190 |
| கெடாஅ வழி | 172 |
| கெடுங்காலைக் | 170 |
| கெடுப்பதூஉங் | 12 |

கெடுவல்யான் 32
கெடுவாக 32
கெட்டார்க்கு 272
கேடறியாக் 158
கேடில் விழுச் 90
கேடும் பெரு 32
கேட்டார்ப் 140
கேட்டினு 170
கேட்பினுங் 94
கேளிழுக்கம் 172
கைம்மாறு வேண்டா 52
கையறி யாமை 196
கைவேல் களிற்றொடு 166
கொக்கொக்க 108
கொடியார்-இங் 246
கொடியார்-உரை 260
கொடுத்தலும் 116
கொடுத்துங் 184
கொடுப்ப தழுக் 42
கொடுப்ப தூஉங் 212
கொடும்புருவங் 230
கொடையளி 88
கொலைமேற்கொண் 122
கொலையிற் 120
கொலைவினைய 74
கொல்லா நலத் 208
கொல்லாமை 74
கொல்லான் 60
கொளப்பட்டே 150
கொளற்கரிதாய்க் 160
கொன்றன்ன 30
கோட்டுப்பூச் 276
கோளில் 10
சமன்செய்து 32
சலத்தாற் 142
சலம்பற்றிச் 202
சாதலின் இன்னாத 54
சாயலும் 250
சார்புணர்ந்து 80
சால்பிற்குக் 208
சான்றவர் 208
சிதைவிடத்து 130
சிறப்பறிய 128
சிறப்புஈனுஞ்-அ 16
சிறப்பீனுஞ்-பி 72
சிறப்பொடு 12
சிறியா ருணர் 206
சிறுகாப்பிற் 160
சிறுபடையான் 110
சிறுமை நமக் 260
சிறுமைபல 198
சிறுமையுஞ் 164
சிறுமையுள் 28
சிறைகாக்குங் 20
சிறைநலனுஞ் 110
சிற்றினம் 102
சிற்றின்பம் 44
சினத்தைப் 70
சினமென்னுஞ் 70
சீரிடம் காணின் 176
சீரினுஞ் சீரல்ல 204
சீருடைச் செல்வர் 212
சீர்மை சிறப் 48
சுடச் சுடரும் 62
சுவைஒளி 14
சுழலும் இசைவேண்டி 166
சுழன்றும்ஏர்ப் 218
சுற்றத்தாற் 116
சூழாமல் 216
சூழ்ச்சி முடிவு 146
சூழ்வார்கண் 100
செப்ப முடை 32
செப்பின் 188
செயற்கரிய செய் 14

| | | | |
|---|---|---|---|
| செயற்கரிய யாஉள | 168 | சொல்லுதல் | 144 |
| செயற்கை அறிந் | 138 | சொல்லப் பயன் | 226 |
| செயற்பால செய்யா | 98 | சொல்வணக்கம் | 176 |
| செயற்பால தோரும் | 16 | சொற்கோட்டம் | 32 |
| செயிரின் தலைப் | 60 | ஞாலங் கருதி | 108 |
| செய்க பொருளைச் | 162 | தகுதி என | 32 |
| செய்தக்க | 104 | தக்காங்கு | 124 |
| செய்தேமஞ் | 174 | தக்கா ரினத் | 100 |
| செய்யாமற் செய்த | 30 | தக்கார் தகவிலர் | 32 |
| செய்யாமற் செற் | 72 | தஞ்சந் தமரல்லர் | 272 |
| செய்வானை | 114 | தணந்தமை | 260 |
| செய்வினை | 146 | தண்ணந் துறைவன் | 268 |
| செருக்குஞ் | 98 | தந்தை மகற்கு | 22 |
| செருவந்த | 124 | தந்நலம் | 194 |
| செல்லாமை | 244 | தந்நெஞ்சத் | 254 |
| செல்லா இடத்துச் | 70 | தமராகித் தற் | 116 |
| செல்லான் | 218 | தம்பொருள் | 22 |
| செல்லிடத்துக் | 70 | தம்மில் இருந்து | 234 |
| செல்வத்துள் | 94 | தம்மிற் பெரியார் | 100 |
| செல்விருந் | 26 | தம்மின்தம் | 22 |
| செவிகைப்பச் | 88 | தலைப்பட்டார் | 78 |
| செவிக்குண | 94 | தலையின் இழிந்த | 204 |
| செவிச்சொல்லுஞ் | 150 | தவஞ்செய்வார் | 62 |
| செவியிற் சுவை | 94 | தவமறைந் | 64 |
| செவியுணவிற் | 94 | தவமும் தவமுடை | 62 |
| செறாஅச் சிறு | 232 | தவறில ராயினும் | 278 |
| செறிதொடி | 268 | தள்ளா விளையுளும் | 158 |
| செறிவறிந்து | 34 | தற்காத்துத் | 20 |
| செறுநரைக் | 108 | தனக்குவமை | 10 |
| செறுவார்க்குச் | 184 | தனியே இருந்து | 272 |
| செற்றவர் பின் | 264 | தன்குற்றம் நீக்கிப் | 98 |
| செற்றா ரெனக்கை | 262 | தன்றுணை யின்றாற் | 186 |
| செற்றார்பின் | 264 | தன்னுயிர்க் கின்னாமை | 72 |
| சென்ற இடத் | 96 | தன்னுயிர் தானறப் | 62 |
| சொலல்வல்லன் | 140 | தன்னுயிர் நீ | 74 |
| சொல்லுக சொல்லிற் | 48 | தன்னூன் பெரு | 60 |
| சொல்லுக சொல்லைப் | 140 | தன்னெஞ் சறி | 68 |

| | |
|---|---|
| தன்னைத்தான் காக் | 70 |
| தன்னைத்தான் காத | 50 |
| தன்னையுணர் | 276 |
| தாமின்புறு | 90 |
| தாம்வீழ் - தம் | 252 |
| தாம்வீழ் - மென் | 234 |
| தாம்வேண்டி | 242 |
| தார்தாங்கிச் | 164 |
| தாளாண்மை இ | 134 |
| தாளாண்மை யெ | 134 |
| தாளாற்றித் | 52 |
| தானந் தவம் | 12 |
| திறனல்ல | 40 |
| திறனறித் | 140 |
| தினற்பொருட் | 60 |
| தினைத்துணை நன்றி | 30 |
| தினைத்துணையாங் | 98 |
| தினைத்துணையும் | 270 |
| தீப்பால தா | 50 |
| தீயவை செய் | 50 |
| தீயவை தீய | 50 |
| தீயள வன்றித் | 200 |
| தீயினாற் சுட்ட | 34 |
| தீவினையார் | 50 |
| துஞ்சினார் செத் | 196 |
| துஞ்சுங்கால் | 256 |
| துணைநலம் | 142 |
| துப்பார்க்குத் | 12 |
| துப்பின் எவனாவர் | 246 |
| துப்புர வில்லார் | 220 |
| தும்முச் செறுப்ப | 276 |
| துளியின்மை | 122 |
| துறந்தார்க்குத் | 62 |
| துறந்தார்க்குந் | 18 |
| துறந்தார் படி | 128 |
| துறந்தார் பெருமை | 14 |
| துறந்தாரின் | 40 |
| துறப்பார்மன் | 84 |
| துறைவன் | 244 |
| துனியும் புலவியும் | 274 |
| துன்பத்திற் | 272 |
| துன்ப முறவரினும் | 144 |
| துன்புறூஉந் | 28 |
| துன்னாத் துறந் | 262 |
| துன்னியார் | 46 |
| தூங்காமை | 88 |
| தூங்குக தூங்கிச் | 146 |
| தூய்மை துணைமை | 148 |
| தூஉய்மை யென் | 82 |
| தெண்ணீர் அடு | 224 |
| தெய்வத்தான் | 134 |
| தெய்வந் தொழா | 20 |
| தெரிதலும் | 138 |
| தெரிந்த இனத் | 104 |
| தெரிந்துணரா | 248 |
| தெருளாதான் | 58 |
| தெளிவி லதனைத் | 104 |
| தென்புலத்தார் | 18 |
| தேரான் பிறனைத் | 112 |
| தேரான் தெளிவுந் | 112 |
| தேவ ரனையர் | 226 |
| தேறற்க | 112 |
| தேறினும் தேறு | 186 |
| தொகச்சொல்லித் | 148 |
| தொடங்கற்க | 110 |
| தொடலைக் குறுந் | 240 |
| தொடி நோக்கி | 268 |
| தொடிப்புழுதி | 218 |
| தொடியொடு | 260 |
| தொடிற்சுடி | 244 |
| தொட்டனைத் தூறும் | 90 |
| தொல்வரவுந் | 220 |
| தொழுதகை யுள்ளும் | 176 |
| தோன்றிற் | 56 |

நகல்வல்லர் 210
நகுதற்பொருட் 168
நகை ஈகை 202
நகையும் 70
நகையுள்ளும் 210
நகைவகைய ராகிய 174
நகை இயார் 252
நச்சப் படாதவன் 212
நடுவின்றி 44
நட்டார் குறை 192
நட்டார்க்கு 146
நட்டார்போல் 176
நட்பிற்கு வீற் 168
நட்பிற் குறுப்புக் 172
நண்பாற்ற ராகி 210
நத்தம்போல் 56
நயந்தவர்க்கு 250
நயந்தவர் நல்காமை 260
நயனில சொல்லினுஞ் 48
நயனிலன் 48
நயனீன்று 28
நய னுடையான் 52
நயனொடு நன்றி 210
நயன்சாரா 48
நலக்குரியார் 38
நலத்தகை 274
நலத்தின்கண் 202
நலம்வேண்டின் 202
நல்குர வென்னும் 220
நல்லவை 84
நல்லாண்மை 216
நல்லார்கண் 92
நல்லா றெனப் 74
நல்லா றெனினும் 54
நல்லாற்றான் 58
நல்வினத்தி னாங்குர் 102
நவிறொறும் 168
நற்பொருள் 220
நனவினாற் கண்டதூஉம் 256
நனவினான் நங் 256
நனவினான் நல்காக் 256
நனவினல் நல்காத 256
நனவினான் நல்காரை 256
நனவென 256
நன்மையும் 114
நன்றறி வாரிற் 226
நன்றாகும் ஆக்கம் 74
நன்றாங்கால் 84
நன்றாற்ற லுள்ளுந் 104
நன்றிக்கு வித் 36
நன்றி மறப்பது 30
நன்றென்ற 154
நன்றே தரினும் 32
நன்னீரை வாழி 236
நாங்காதல் 25[illegible]
நாச்செற்று 76
நாடாது நட்டலிற் 170
நாடென்ப 158
நாடொறும் நாடி 122
நாடோறும் நாடுக 114
நாணகத் தில்லார் 214
நாணுமை 178
நாணு லுயிரைத் 214
நாணும் மறந் 272
நாணென ஒன்றோ 264
நாணென்னும் 196
நாணொடு நல் 240
நாண்வேலி 214
நாநல மென்னும் 140
நாவென்ன ஒன்று 76
நிணத்தீயில் 264
நிலத்தியல் பால் 102
நிலத்தில் 202
நிலவரை நீள் 56

| | |
|---|---|
| நிலைமக்கள் | 164ம் |
| நிலைஅஞ்சி | 74 |
| நிலையிற் றிரியா | 34 |
| நில்லா தவற்றை | 76 |
| நிழல்நீரும் | 188 |
| நிறைநீர | 168 |
| நிறைநெஞ்சம் | 194 |
| நிறைமொழி | 14 |
| நிறையரியர் | 240 |
| நிறையுடைமை | 40 |
| நிறையுடையேன் | 264 |
| நினைத்திருந் | 276 |
| நினைத்தொன்று | 262 |
| நினைப்பவர் | 254 |
| நீங்கான்வெ | 184 |
| நீங்கின் தெறூஉங் | 234 |
| நீரின் றமை | 12 |
| நீரும்நிழல | 274 |
| நுணங்கிய | 94 |
| நுண்ணிய நூ | 84 |
| நுண்ணியம் | 152 |
| நுண்மாண் | 92 |
| நுனிக்கொம்பர் | 106 |
| நூலாருள் நூ | 148 |
| நெஞ்சத்தார் | 238 |
| நெஞ்சின் துற | 64 |
| நெடுங்கட | 12 |
| நெடுநீர் மறவி | 132 |
| நெடும்புன லுள் | 110 |
| நெய்யால் | 242 |
| நெருப்பி னுள் | 220 |
| நெருநல் உள | 76 |
| நெருநற்றுச் | 268 |
| நோக்கினாள் - இறை | 232 |
| நோக்கினாள் - தாக் | 230 |
| நோதலெவ | 274 |
| நோயெல்லாம் | 72 |
| நோய்நாடி | 200 |
| நோவற்க | 186 |
| நோனா உடம் | 240 |
| பகச்சொல்லி | 46 |
| பகல்கருதிப் | 182 |
| பகல்வெல் | 108 |
| பகுத்துண்டு | 74 |
| பகைநட்பாக் | 186 |
| பகைநட்பாங் | 176 |
| பகைபாவம் | 38 |
| பகைமையுங் | 152 |
| பகையகத்துச் | 156 |
| பகையகத்துப் | 156 |
| பகையென் | 186 |
| பசக்கமற் | 250 |
| பசந்தாள் | 250 |
| பசப்பெனப் | 250 |
| படலாற்றா | 248 |
| படியுடை | 132 |
| படுபயன் | 44 |
| படைகுடி | 88 |
| படைகொண் | 60 |
| பணியுமாம் | 205 |
| பணிவுடையன் | 28 |
| பணைநீங்கிப் | 260 |
| பண்டறியேன் | 230 |
| பண்ணென்னாம் | 126 |
| பண்பிலான் | 210 |
| பண்புடையார்ப் | 210 |
| பதிமருண்டு | 258 |
| பயனில பல் | 48 |
| பயனில்சொல் | 48 |
| பயன்மரம் | 52 |
| பயன்தூக்கார் | 30 |
| பயன்தூக்கிப் | 194 |
| பரிந்தவர் நல் | 262 |
| பரிந்தோம்பிப் | 26 |

பரிந்தோம்பிக் 36
பரியது கூர்ங் 130
பரியினும் 84
பருகுவார் 174
பருவத்தோ 108
பருவரலும் 252
பலகுடைநீற 218
பலசொல்லக் 140
பலநல்ல கற்றக் 176
பல்குழுவும் 158
பல்லவை கற் 156
பல்லார் பகை 100
பல்லார் முனி 48
பழகியசெல் 198
பழகியநட் 172
பழிமலைந் 142
பழியஞ்சிப் 18
பழுதெண் 138
பழைமையெ 172
பழையமெ 150
பற்றற்ற கண்ணே 78
பற்றற்றகண்ணும் 116
பற்றற்றேம் 64
பற்றி விடாஅ 78
பற்றுக பற் 78
பற்றுள்ள 98
பணியரும்பி 258
பன்மாயக் கள் 264
பாடு பெறு 260
பாத்தூண் 54
பாலொடு 238
பிணிக்குமருந் 234
பிணியின்மை 158
பிணையேர் 230
பிரித்தலும் 138
பிரிவுரைக்கும் 244
பிழைத்துண 94
பிறப்பென்னு 80
பிறப்பொக் 206
பிறர்க்கின்னா 72
பிறர்நாணத் 214
பிறர்பழியுந் 214
பிறவிப் பெ 10
பிறன்பழி 46
பிறன்பொரு 38
பிறன்மனை 38
பீலிபெய் 106
புகழின்றாற் 204
புகழ்ந்தவை 118
புகழ்பட வாழா 56
புகழ்புரிந்த 20
புக்கில் 76
புணர்ச்சிபழ 168
புத்தே ளுல 52
புரந்தார்கண் 166
புலத்தலிற் 278
புலப்ப லென 264
புலப்பேன் 266
புல்லவையுள் 154
புல்லாதிரா 274
புல்லிக் கிடந்தேன் 250
புல்லி விடா 278
புறங்குன்றி 64
புறங்கூறிப் 46
புறத்துறுப் 24
புறந்தூய்மை 68
புன்கண்ணை 258
பெண்ணியலா 276
பெண்ணிற் பெ 20
பெண்ணினாற் 268
பெண்ணேவல் 192
பெயக்கண்டு 126
பெயலாற்றா 248
பெரிதாற்றிப் 268

| | | | |
|---|---|---|---|
| பெரிதினிது | 178 | பொருளல் லவற் | 80 |
| பெரியாரைப் | 190 | பொருளற்றார் | 58 |
| பெருக்கத்து | 204 | பொருளாட்சி | 60 |
| பெருங்கொடை | 116 | பொருளானாம் | 212 |
| பெருமைக்கும் | 112 | பொருளென்னும் | 162 |
| பெருமை பெரு | 206 | பொள்ளென | 108 |
| பெருமை யுடை | 206 | பொறியின்மை | 134 |
| பெரும்பொரு | 158 | பொறிவாயில் | 10 |
| பெரூஅமை | 272 | பொறுத்தல் | 40 |
| பெறினென்னும் | 266 | பொறையொ | 158 |
| பெறுமவற் | 22 | போற்றின் | 150 |
| பெற்றான் பெறின் | 20 | மகன் தந்தை | 22 |
| பேணாது பெட்டார் | 248 | மக்களே போல் | 226 |
| பேணாது பெட்ப | 270 | மக்கள்மெய் | 22 |
| பேணாதுபெண் | 192 | மங்கலம் என்ப | 20 |
| பேதைபெருங் | 174 | மடலூர்தல் | 240 |
| பேதைப் படுக் | 84 | மடிமடிக் | 132 |
| பேதைமை யு | 178 | மடிமை குடி | 132 |
| பேதைமை யெ | 178 | மடியிலா மன் | 132 |
| பேதைமை ஒ | 172 | மடியுளாள் | 134 |
| பேராண்மை | 166 | மடியைமடி | 132 |
| பொச்சாப்பார்க் | 118 | மடுத்தவா | 136 |
| பொச்சாப்புக் | 118 | மணிநீரும் மண் | 160 |
| பொதுநலத்தார் | 194 | மணியில் திக | 268 |
| பொதுநோக் | 116 | மண்ணோடியை | 126 |
| பொய்படும் | 178 | மதிநுட்பம் | 138 |
| பொய்மையும் | 68 | மதியும் மடந் | 236 |
| பொய்யாமை பொ | 68 | மயிர்நீப்பின் | 204 |
| பொய்யாமை ய | 68 | மருந்தாகித் | 52 |
| பொருள்தீர்ந் | 48 | மருந்தென | 200 |
| பொருட்பெண் | 194 | மருந்தோமற் | 204 |
| பொருட் பொருளார் | 194 | மருவுகமாசற் | 170 |
| பொருள்கருவி | 146 | மலரன்ன - முக | 236 |
| பொருள்கெடுத்துப் | 198 | மலரன்ன - அரு | 242 |
| பொருள்நீங்கிப் | 58 | மலரினும் | 270 |
| பொருன்மாலை | 258 | மலர்காணின் | 230 |
| பொருளல் லவரை | 162 | மலர்மிசை | 16 |

| | | | |
|---|---|---|---|
| மழித்தலும் நீ | 64 | மிகச்செய்து | 176 |
| மறத்தல் வெ | 70 | மிகன்மேவன் | 182 |
| மறந்தும் பிறன் | 50 | மிகினும் குறை | 200 |
| மறப்பினும் ஒத்து | 36 | மிகுதியான் | 40 |
| மறப்பின் | 254 | முகத்தான் | 28 |
| மறமானம் | 164 | முகத்தின் இனிய | 176 |
| மறவற்க | 30 | முகத்தின் முதுக் | 152 |
| மறைந்தவை | 128 | முகநகநட்பது | 168 |
| மறைபெறல் | 248 | முகம்நோக்கி | 152 |
| மறைப்பேன்மன் | 264 | முகைமொக்கு | 268 |
| மறைப்பேன்மன் யானி | 246 | முடிவும் இடை | 146 |
| மற்றியான் | 254 | முதலிலார்க் | 100 |
| மற்றுந் தொடர் | 78 | முயக்கிடைத் | 260 |
| மனத்தது மா | 64 | முயங்கிய | 260 |
| மனத்தானும் | 102 | முயற்சி திரு | 134 |
| மனத்தின்அமை | 176 | முரண்சேர்ந்த | 110 |
| மனத்துக்கண் | 16 | முறிமேனி | 236 |
| மனத்து ளது | 102 | முறைகோடி | 122 |
| மனத்தொடு | 68 | முறைசெய்து | 88 |
| மனநலத்தி | 102 | முறைப்படச் | 138 |
| மனநலம் நன் | 102 | முற்றாற்றி | 160 |
| மனநலம் மன் | 102 | முற்றியும் | 160 |
| மனந் தூயார்க் | 102 | முனைமுகத்து | 160 |
| மனந் தூய்மை | 102 | முன்னுறக் | 118 |
| மனமாணு | 188 | மேலிருந்தும் | 206 |
| மனைத்தக்க | 20 | மேற்பிறந்தா | 92 |
| மனைமாட்சி | 20 | மைய லொரு | 178 |
| மனையாளை | 192 | மோப்பக் குழை | 26 |
| மனைவிழைவார் | 192 | யாகாவா ரா | 34 |
| மன்னர்க்கு | 122 | யாங்க ணிற் | 240 |
| மன்னர்விழை | 150 | யாண்டுச்சென் | 190 |
| மன்னுயி ரெல் | 246 | யாதனின் யா | 78 |
| மன்னுயிர் ஓம்பி | 58 | யாதானும் நா | 90 |
| மாதர்முகம் | 236 | யாமும் உளேங் | 254 |
| மாலைநோய் | 258 | யாமெய்யாக் | 68 |
| மாலையோ | 258 | யாரினுங் கா | 276 |
| மாறுபாடு இல் | 200 | யானெனது | 78 |

| | |
|---|---|
| யானேனுக்குங் | 232 |
| வகுத்தான் | 84 |
| வகைமாண்ட | 190 |
| வகையறச் | 104 |
| வகையறிந்து தற் | 186 |
| வகையறிந்துல் | 156 |
| வசையிலா வண் | 56 |
| வசையென்ப | 56 |
| வசையொழிய | 56 |
| வஞ்ச மனத்தான் | 64 |
| வருகமற்றுகொ | 266 |
| வருமுன்னர்க் | 98 |
| வருவிருந்து | 26 |
| வரைவிலா | 194 |
| வலியார்க்கு | 184 |
| வலியார்முன் | 58 |
| வலியில் நிலை | 64 |
| வழங்குவ | 202 |
| வழிநோக்கான் | 184 |
| வழுத்தினாள் | 276 |
| வறியார்க்கொன் | 54 |
| வன்கண் குடி | 138 |
| வாணிகஞ் செய் | 32 |
| வாய்மை | 68 |
| வாராக்கால் | 248 |
| வாரிபெருக் | 114 |
| வாழ்தல் உயிர் | 238 |
| வாழ்வார்க் | 252 |
| வாளற்றுப் | 266 |
| வாளொடென் | 156 |
| வாள்போல் | 188 |
| வானின் றுல | 12 |
| வானுயர் தோ | 64 |
| வானோக்கி | 120 |
| விசும்பின் | 12 |
| விடா அது | 254 |
| விடுமாற்றம் | 148 |
| விண் இன்று | 12 |
| வித்தும் இடல் | 26 |
| வியவற்க | 98 |
| விருந்து புறத் | 26 |
| விருப்பறாச் | 116 |
| விரைந்து | 140 |
| விலங்கொடு | 92 |
| வில்லேருழ | 186 |
| விழித்தகண் | 166 |
| விழுப்புண் | 166 |
| விழுப்பேற்றின் | 42 |
| விழைதகை | 172 |
| விழையார் | 172 |
| விளக்கற்றம் | 250 |
| விளிந்தாரின் | 38 |
| விளியுமென் | 254 |
| வினைகலந்து | 266 |
| வினைக்கண் வினைகெ | 134 |
| வினைக்கண் வினையு | 114 |
| வினைக்குரிமை | 114 |
| வினைசெய்வார் | 128 |
| வினைத்திட்ப | 144 |
| வினைபகை | 146 |
| வினையான் | 146 |
| வினைவலியும் | 106 |
| வீழப் படுவார் | 252 |
| வீழுநர் வீழப் | 252 |
| வீழும் இருவர்க் | 234 |
| வீழ்நாள் படா | 16 |
| வீழ்வாரின் | 252 |
| வீறெய்தி | 144 |
| வெண்மைஎன | 180 |
| வெருவந்த | 124 |
| வெள்ளத்தனைய மலர் | 130 |
| வெள்ளத்தனைய இ | 136 |
| வேட்ட பொ | 234 |
| வேட்பத்தாஞ் | 140 |

| | | | |
|---|---|---|---|
| வேட்பன | 150 | வேண்டுங்கால் | 82 |
| வேண்டற்க வெஃ | 44 | வேண்டுதல் | 10 |
| வேண்டற்க வென் | 198 | வேலன்று | 120 |
| வேண்டா மை | 82 | வேலொடு | 122 |
| வேண்டிய வேண் | 62 | வைத்தான் | 212 |
| வேண்டினுண் | 78 | வையத்துள் | 18 |


ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1